# தர்மோதயம்

## வைரவிழா மலர்

## 1963 - 2023




**கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவிழா மலர்

## 1963 - 2023

KN/THARMAKERNY G.T.M.SCHOOL

கற்க கசடற கற்க

## கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுடவாசகம்

"கற்க கசடற"

# MOTTO

"Learn Thoroughly"

## தூரநோக்கு

தேசிய கல்விக் குறிக்கோள்களையும் நவீன கல்விச் சவால்களையும் ஏற்று செயற்படக்கூடிய நற்பிரஜைகளை ஒப்படைத்தல்

# VISION

Hand over the well balanced citizens who accept the goals of national Education and the objectives of the school to the society

## பணிக்கூற்று

கிடைக்கும் வளங்களை வினைத்திறனுடையதாக திட்டமிட்டு புதிய தொழிநுட்ப அடிப்படையில் கற்றல் கற்பித்தலை மேற்கொண்டு நல்ல விளைதிறனைப் பெற்றுக் கொள்ளல்.

# MISSION

To get the effectiveness of the education, use the available resources efficiently in teaching learning process on the basis of new technologles.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்விபரம்


| | |
|---|---|
| மலர் | :- தர்மோதயம் |
| வெளியீடு | :- கிளி/தர்மக்கேணி அ.த.க பாடசாலை |
| மலர் ஆசிரியர் | :- திரு. சி. கோகுலதர்சன் |
| பதிப்பு | :- 2023.07.31 |
| பக்க எண்ணிக்கை | :- **XXXIV +107** |
| அச்சமைப்பு | :- சிவகஜன் பதிப்பகம், கொடிகாமம் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

வாழ்க கிளி தர்மக்கேணி தமிழ் வித்தியாலயம்
வாழ்க வாழ்க வாழ்கவென்று வாழ்த்திடுவோம்
வாழ்க வாழ்க வாழ்கவென்று வாழ்த்திடுவோம்
ஆழ்கடல் சூழ் ஈழமதில் அழகு தமிழ் அறிவு தரும்
வாழ்க தமிழ் மொழியோடு எம்மினமும் எம் கலையும்

(வாழ்க கிளி தர்மக்கேணி....)

இன்னருங்கனி சோலை மிளிர
ஏற்றும் இலக்கிய வாழ்வு வளர
மன்னர் அறிவொளி மாண்பு துலங்க
மக்கள் வாழ்வு நித்தம் செழிக்க

(வாழ்க கிளி தர்மக்கேணி....)

வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தண்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் மறிந்து
வளர்மொழி வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்மோதயத்தின் உள்ளே...


01) மலர் வெளியீட்டுக் குழு, வைரவிழா செயற்குழு

02) ஆசிச்செய்தி

03) வாழ்த்துச் செய்திகள்

அதிபர்

அரசாங்க அதிபர்

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

மாகாணக் கல்விப் பணிப்பாளர்

வலயக் கல்விப் பணிப்பாளர்

பிரதேச செயலர்

கோட்டக்கல்வி அலுவலர்

ஓய்வுபெற்ற மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்

ஓய்வுநிலை அதிபர் (ஆரம்பகால ஆசிரியர்)

ஓய்வுநிலை அதிபர்

ஓய்வுநிலை அதிபர்

பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுச் செயலாளர்

பழைய மாணவர் சங்கச் செயலாளர்

04) இதழாசிரியர் சிந்தனையிலிருந்து...

05) பாடசாலை வரலாறு

06) விநாயகர் பாடல்

07) வைரவிழா வாழ்த்துப் பாமாலை


## ஆக்கங்கள்...


01) ஆரம்பப் பிரிவு மாணவர்களின் உளநலம் பேணுதலில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் செயற்பாடுகள்.

02) இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி வழங்கும் நிறுவனங்கள்

03) மயிர்க்கொட்டிகளை வெறுக்காதீர்கள்

04) விரதங்களும் அனுட்டான நியமங்களும்

05) பேரார்வமே கற்றலின் முதற்படி

06) கல்விச் செயன்முறையில் ஆக்கத்திறன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07) அம்மாவே குழந்தையின் முதல் ஆசான்
08) நாட்டார் வழிபாடு
09) ஆரம்பக்கல்வியும் அழகியலும்
10) Why do we need English?
11) ஆங்கிலச் சொற்களை வாசிப்போம்
12) ஔவையாரின் நூல்கள் அறவிழுமியங்களை சித்தரிக்கும் சிறந்த படைப்பாகும் - ஒரு நோக்கு.
13) சாலைப் பாதுகாப்பு
14) ஏற்றத்தின் ஊற்றுக்கோல் கல்வி

## மாணவரின் ஆக்கங்கள்...

15) எமது பாடசாலை
16) அன்றும் இன்றும்
17) பத்திரிகையின் முக்கியத்துவம்
18) பூச்சியம் - நாடகம்
19) உயிரெழுத்து உரமாய் தந்த வைரவிழா நாயகியே
20) கிராமிய நடனங்கள்
21) நேர்மையே சிறந்த செல்வம்
22) வாழ்க் எம் பள்ளித் தாயே
23) தர்மக்கேணி பிரதேசத்தின் கூத்துக் கலையும் நடைமுறையும்
24) ஆசான்
25) எதிர்காலம் உனக்காக!
26) உலகிற்கே ஒளியூட்டிய தோமஸ் அல்வா எடிசன்
27) போதைப்பொருளுக்கு நீ அடிமையாகாதே மாணவனே!
28) தொலைந்தது என்ன?
29) ஆங்கில மொழியின் முக்கியத்துவம்
30) என்னம்மா சொன்ன கதை
31) ஓசோன்படை சிதைவடைதல்
32) திருவள்ளுவர்
33) இன்றைய தொழிநுட்ப உலகம்
34) வீட்டுத்தோட்டம்
35) விடாமுயற்சி
36) தாய் எனும் தேவதை என் அம்மா
37) கவிநய சொற்றொடர் - எனது பாடசாலையின் முகவரி

- ஆசிரியர் குழாத்தினர் விபரம்
- பாடசாலையில் கற்று அரச பணிபுரிவோர்
- பாடசாலை உன்னத வளர்ச்சிக்கு உதவிய அன்புக் கரங்கள்
- நன்றி நயத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர் குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு.வே.செல்வகுமார் (அதிபர்) |
| இதழாசிரியர் | :- | திரு.சி.கோகுலதர்சன் |
| உறுப்பினர்கள் | :- | 1. திருமதி. இ.சிறிஸ்கந்தராசா<br>2. திருமதி. பா.சந்திரகுமார்<br>3. திருமதி .நா.கஜானனன்<br>4. திரு தி.இ.பரணிதரன்<br>5. திருமதி .இ.கேதீஸ்வரன் |

## வைரவிழாச் செயற்குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு.வே.செல்வகுமார் (அதிபர்) |
| உபதலைவர் | :- | திருமதி.அ.விஜிதபண்டார |
| செயலாளர் | :- | திருமதி.இ.சிறிஸ்கந்தராஜா |
| உப செயலாளர் | :- | திருமதி.பு.விஜயலஷ்மன் |
| பொருளாளர் | :- | திருமதி.ஹே.மணிகண்டன் |
| உறுப்பினர்கள் | :- | திருமதி.சீ.குணரூபன்<br>திருமதி.கௌ.ஜெயரத்தினம்<br>திருமதி.ஜி.சிந்துஜன்<br>திருமதி.இ.உதயகுமார்<br>திருமதி.சி.மணிவண்ணன்<br>திருமதி.த.சாந்தரூபன்<br>திரு.மு.செல்வம்<br>திருமதி.தே.அழகேஸ்வரி<br>திருமதி.சோ.ஸ்ரீறஜீவன்<br>திருமதி.ச.சஜீவ்<br>செல்வி.வி.மேசின் ஞானகீதா<br>திருமதி.லொ.கௌசிகா<br>திருமதி.செ.சிவனேஸ்வரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சாம ஸ்ரீ தேசமான்ய
## சிவஸ்ரீ.ந.பிரபாகரக் குருக்கள் அவர்கள்
## வழங்குகின்ற ஆசிச்செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் தர்மக்கேணி KN/83 கிராம அலுவலர் பிரிவில் கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலை 1960ம் ஆண்டு திரு சி.சிவபாதசுந்தரம் அவர்களின் அயராத முயற்சியினால் உருவாக்கம் பெற்று அதன் பின் திரு.வேலுப்பிள்ளை அவர்களினுடைய ஆதன நன்கொடையுடனும் உதவி ஒத்தாசையுடனும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு 1963ம் ஆண்டு அரசினால் பொறுப்பேற்கப்பட்டு பாடசாலைக் கல்வி நிர்வகிக்கப்பட்டு வந்திருக்கின்றது. அதன் பின்னர் திரு.K.ரட்ணகுமார் அவர்களின் முயற்சியால் தரம் 06-08 வரையான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகாரணமாக இடப்பெயர்வுகளை சந்தித்து பல பின்னடைவுகளுடன் பாடசாலைக் கல்வி திறந்தது. பின் மீண்டும் திரு.வ.ஜீவரட்ணம் அவர்களின் தலைமையில் நிரந்தர இடத்தில் 2010ம் ஆண்டில் இயங்கியது. பின் திரு.வே.செல்வகுமார் அவர்கள் தலைமையில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவி ஒத்தாசையுடன் பௌதீக வள வளர்ச்சியுடன் மீளுருவாக்கம் செய்யப்பட்டு சீர் செய்யப்பட்டது.

2013ம் ஆண்டளவில் தரம் 09வரையான வகுப்புக்கள் வளர்ச்சி பெற்று கிராம அபிவிருத்திச்சங்கம், மாதர் அபிவிருத்திச்சங்கம், என்பவற்றுடன் பெற்றோரும் நலன் விரும்பிகளும் இணைந்து திரு.திருமதி.சுபேந்திரன் குடும்பத்தினரிடமிருந்து மேலதிக ஆதனங்களைப் பெற்று பாடசாலை வளர்ச்சிப்பாதையில் முன்னேறியிருக்கிறார்கள். அத்துடன் வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.க.முருகவேல் அவர்களது ஏற்பாட்டில் மேலும் உயர் வகுப்புக்களை அதிகரித்து பாடசாலைக் கல்வியையும் பௌதீக வளங்களையும் ஆளணி வளங்களையும் பெருகச் செய்து மாணவர்களது கல்வி, சமூகம், சமயம், விளையாட்டு, பொது நோக்கு போன்ற இன்னோரன்ன வளர்ச்சியும் அடைவு மட்டத்தில் உயர்ச்சியும் பெற்றிருக்கிறார்கள். எனவே தொடர்ந்தும் இப்பாடசாலையினுடைய வளர்ச்சியும் அபிவிருத்தியும் பல்கிப்பெருக வேண்டும் எனவும் பாடசாலையினுடைய வைரவிழாவிலே மனதார பாராட்டுவதோடு வைரவிழா மலர் சிறக்கவும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களது செயலோங்கி நிற்கவும் நல் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்வதோடு நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**"மெய்ப்பொருள் காண்பது அறிவு"**

**சிவஸ்ரீ.பிரபாகரக் குருக்கள்**
**அறத்தி அம்பாள் திருக்கோவில் ஆதீன கர்த்தாவும்**
**பிரதம குருவும்**
**பளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய நிலையில் நல்லதிபர் விருது பெற்ற எங்கள் அதிபர்




**திரு வே. செல்வகுமார்**

B.A (Hon's), PGDE,M.A( Merit),M.Ed, (SLTS-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திரு.வே.செல்வகுமார் அவர்கள்
## வழங்குகின்ற
## வாழ்த்துச் செய்தி

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வகை II பாடசாலைகளில் ஒன்றான எமது பாடசாலை 1963ம் ஆண்டு தை மாதம் 11ம் நாளில் அரசினால் பொறுப்பேற்கப்பட்டு முறையாக கற்றல் செயற்பாடுகளினை ஆரம்பித்து அறுபது ஆண்டுகளினை நிறைவு செய்துள்ள நிலையில் எனது சேவைக்காலத்தில் வைரவிழா நிகழ்வினையும் இவ் நிகழ்வில் வெளிவரும் மலருக்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

எமது பாடசாலையானது 1960களில் உயர்திரு க.சிவபாதசுந்தரம் அவர்களின் முயற்சியின்பயனாக உருவாகிய இப்பாடசாலையானது இக்கிராமத்தவர்களுக்கு அயற் கிராமத்தவர்களுக்கும் கல்விப்பசி போக்கும் நிறுவனமாக இன்று பிரகாசிப்பதற்கு உழைத்த முன்னைநாள் ஆரம்பகால அதிபர் க. சிவபாதசுந்தரம் அவருடன் இணைந்த ஆசிரியர் குழாம் பின் அவர்கள் பணியினை தொடர்ந்து சேவையாற்றிய அதிபர்கள் ஆசிரியர்கள் பெரும் பணியினால் பாடசாலை வளர்ச்சி கண்டு காலத்துக்குக் காலம் இடம்பெயர்ந்து 2010 இல் சொந்த இடத்தில் மக்கள் மீள்குடியமர்வினைத் தொடர்ந்து பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டு வகை II பாடசாலையாக தரம் 1-8 வரையிலான வகுப்புக்களை கொண்ட பாடசாலையாக இயக்கி வந்தமைக்கு அரும்பணி ஆற்றியவர்களை வாழ்த்துகின்றோம்.

2012ம் ஆண்டு பாடசாலையினைப் பொறுப்பேற்றது முதல் ஆசிர்யர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், வலய, மாகாண கல்வி அதிகரிகள் பங்கேற்புடன் பாடசாலை படிப்படியாக இன்றுவரை வளர்ச்சி கண்டு வருகின்றது.

2012ம் ஆண்டு இப்பாடசாலையானது இரு கட்டங்களை மட்டும் கொண்டு செயற்பட்ட வேளையில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையில் 60 x 20 வகுப்பறை, நீர்த்தாங்கி, சிறுவர் விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டு கற்றல் செயற்பாடு உத்வேகமாக செயற்பட்டதனை தொடர்ந்து 2013ல் தரம் 09 இனை நடாத்த அனுமதி வழங்கிய மகாண கல்விப்பணிப்பாளருக்கு இன் நாளில் நன்றி தெரிவிக்கின்றோம்.

தொடர்ந்து பாடசாலையில் கற்றல் கற்பித்தல் சாதனங்களின் இணைக்கலைத் திட்ட செயற்பாடுகளுக்கான உபகரணங்களின் தேவையறிந்து பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், சமூக சேவை அமைப்புக்கள் ஒத்துழைப்பின் மூலம் பல்வேறு வளங்களினை பெற்றுக்கொள்ள முடிந்தமை சிறப்பிற்குரியதும் பாராட்டுக்குரியதுமான விடயமாகும்.

2016ம் ஆண்டு வரை 1-9 வகுப்புக்களினை கொண்டு விளங்கிய பாடசாலை பௌதீக வளத்தேவையினை கவனத்தில் கொண்ட மீள்குடியமர்வு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 2017ம் ஆண்டு 80 x 25 வகுப்பறைத் தொகுதியினை கொண்ட கட்டடம் உருவாகுவதற்கு உதவிய மாவட்ட செயலக, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அரசியல் பிரமுகர்கள் அனைவர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றிகள்

இவ்வாண்டு கல்வி வளர்ச்சியல் ஓர் பரிணாம வளர்ச்சி கண்டது எம் பாடசாலை. தரம் 10 வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு புதிய உத்வேகத்துடன் கல்விச் செயற்பாடுகள் நடைபெற்று வந்தது. இந்நிலை உருவாக அப்போதைய வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.க.முருகவேல் அவர்களின் வழிப்படுத்தல் போற்றுதற்குரியது.

பாடசாலையின் பொதுப் பரீட்சைகளின் ஒன்றான தரம் 5 புலமைப்பரீட்சையில் மீள் குடியமர்வினைத் தொடர்ந்து 2014 இல் இரு மாணவிகள் வெட்டப்புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்றனர். குறிப்பாக செல்வி உதயகுமார் நிலவரசி 2018 இல் 192 புள்ளிகளை பெற்று பளைக்கோட்டத்தில் இன்று வரை உயர்புள்ளி பெற்ற மாணவியாக திகழ்கின்றார்.

இணைக்கலைத்திட்டசெயற்பாடுகளில் ஒன்றான மெய்வல்லுனர் விளையாட்டு போட்டியில் செல்வி நேயநிலா, செல்வி சூரியகுமார் பவித்திரா இக்காலத்தில் கோட்ட, வலய, மாகாண, மட்ட போட்டிகளில் சாதனை நிலை நாட்டி தேசிய போட்டியில் பங்கேற்றமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

2017இல் தரம் 10 ஆரம்பித்து 2018இல் தரம் 11 வகுப்பின் முதலாவது அணியினர் பரீட்சைக்கு தோற்றி 90% சித்தியினையும் 2019 இல் 87.5% சித்தியினையும் 2020 இல் 94% சித்தியினையும் 2021 இல் 100% சித்தயினையும் பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் சாதனைப்பாடசாலையாக திகழ்வதுடன் செல்வி சி.தேயநிலா 8A, C சித்தியினையும் (2020), செல்வி பத்மநாதன் சுகிர்தனா 8A, C (2021) சித்தியினைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவிகளினை பாராட்டுகிறேன்.

பாடசாலை வளர்ச்சியில் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் முயற்சியினால் முகப்பு மதில் 100 அடி ஆனது 2013 காலத்தில் உருவாகுவதற்கு உழைத்த அபிவிருத்திக் குழுவினருக்கும் மாணவர் கற்றல் தேவையினை நிறைவுசெய்யும் முகமாக 40x16 அரை நிரந்தர வகுப்பறைகளினை பிரதேச நிதி ஒதுக்கீட்டில் ஒழுங்கமைத்த மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினருக்கும், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கௌரவ ப.அரியரட்ணம் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் பூர்த்தி செய்யப்படாமல் இருந்த 20x20 வகுப்பறை முழுமை பெறுவதற்கும் தளபாடத் தேவையிளை நிறைவு செய்யும் முகமாக ஒரு தொகுதி கதிரைகளை பெறுவதற்கு உதவிய அவருக்கும் எமது நன்றிகள்.

மாணவர்களின் கற்றல் மேம்பாடு, கழிப்பறை வசதிகள் மேம்பாடு என்பவற்றை கருத்திற் கொண்டு கௌரவ பிரதேச தவிசாளர் சு.சுரேன், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோர்களின் ஒழுங்கமைப்பில் திறன் வகுப்பறைகருவி, புதிய பெண் மலசலகூட தொகுதி என்பன உருவாக்கத்திற்கான அற்பணிப்பினை ஆற்றியோருக்கும் நன்றிகள்.

பாடசாலை இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளில் ஒன்றான விளையாட்டுப் போட்டி சிறப்பாக அமைவதற்கு ஏதுவாக 2013ல் இப்பிரதேச மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம், கிராம அபிவிருத்திசங்க பெற்றோர்கள் இணைந்து $3^1/_4$ பரப்பு காணியை கொள்வனவு செய்து வழங்கியோருக்கும் சம காலத்தில் திரு.திருமதி.சுவேந்திரன் குடும்பத்தினர் பாடசாலைக்கு தர்மசாதனமாக வழங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் பணிக்கு எமது நன்றிகள்.

பாடசாலையானது வளரச்சி நிலையில் உச்சத்தினை தொட வேண்டும். என்ற சிந்தனையுடன் செயற்படும். என்னால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் அனைத்திற்கும் ஆசிரியர்கள் பெற்றோர்கள், உள்ளூர் புலம்பெயர் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் இவர்களுடன் திணைக்கள உத்தியோகத்தர்கள் மாவட்ட செயலாளர் பிரதேச செயல உத்தியோகத்தர்கள் அரசியல் பிரமுகர்கள் அனைவரது பங்களிப்பிற்கும் தலை வணங்குகின்றேன்.

இன்று புலம் பெயர் நாடுகளில் பல பாடசாலைகளின் பெயரில் பழைய மாணவர் சங்கம், ஒன்றியங்கள் ஸ்தாபிக்கப்பட்டு பல அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுப்பதனைப் போல இப்பாடசாலைக்கும் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு வளர்ச்சி நோக்கிய நகர்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

கல்வி, பண்பாடு. பொருளாதார வளர்ச்சியில் இப்பாடசாலை ஓர் விடிவெள்ளியாக மிளிரவும் அதன் மூலம் ஒவ்வொருவருடைய எதிர்காலமும் ஒளிமயமாகட்டும் என வாழ்த்துகின்றேன் இன்னும் இப்பாடசாலையை நேசிக்கின்ற அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்

**திரு.வே.செல்வகுமார்**
**(அதிபர்)**
**கிளி/தர்மக்கேணி அ.த.க பாடசாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் அவர்கள் வழங்குகின்ற வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் தர்மக்கேணி எனும் கிராமத்தில் இயங்கிவரும் கிளி/தர்மக்கேணி அ.த.க.பாடசாலை பல இன்னல்களிற்கு மத்தியிலும் பரிணாம வளர்ச்சியோடு வைரவிழா காணும் இப் பள்ளித் தாய்க்கு சூட்டப்படும் வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை கொள்கின்றேன்.

திரு.க.வேலுப்பிள்ளையின் எண்ணத்தில் உதித்து பின்னர் அரசினால் பொறுப்பேற்கப்பட்ட போதிலும் அக்கிராம அபிவிருத்திச்சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், மாதர் அபிவிருத்திச்சங்கம், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், என பலரும் இப்பள்ளித்தாயின் கனவுக்கு கரம் கொடுத்து நின்றதும் நிற்பதும் கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு இதன் வகிபங்கை கட்டியம் காட்டுகிறது.

இயற்கை அனர்த்தம் மற்றும் அசாதாரண சூழலிலும் தனது இலட்சியத்தை நோக்கி இம்மியளவும் இழக்காமல் நலன்புரி முகாமில் கூட நன்மை பல செய்ததை நாம் மறப்பதற்கில்லை.

எனவே நல்லுள்ளங்களின் நெஞ்சறையில் உதித்து இடர்பாடுகளுக்கிடையிலும் வெற்றி நடைபயின்று தன்னுடைய சோதனைகளையும் சாதனைகளையும் வைரவிழா மலரிலே வரலாறாக பதிவு செய்து எதிர்கால சந்ததியினரின் கைகளில் பெரும் பொக்கிசமாக திகழவிருக்கும் இவ் வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி கூறுவதில் பேரின்பமடைவதுடன் இப்பாடசாலை சமூகத்தினருக்கு வாழ்த்துக்களைக் கூறி அமைகின்றேன்.

**திருமதி .ரூ.கேதீஸ்வரன்**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்**
**கிளிநொச்சி மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திரு.ம.பற்றிக் டிறஞ்சன் அவர்கள்
## வழங்குகின்ற
## வாழ்த்துச் செய்தி

ஆரம்ப பருவ பிள்ளைகளுக்கான கல்விப்பணியுடன் ஆரம்பிக்கப்பட்ட கிளி/ தர்மக்கேணி அ.த.க பாடசாலையின் கல்விச்செயற்பாடுகள் படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று தரம் 1 முதல் க.பொ.த.சாதாரண தரம் வரையிலான வகுப்புக்களைக் கொண்ட வகை II பாடசாலையாக வளர்ச்சி பெற்று திகழ்கின்றமை சிறப்பானதாகும். நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் வளத்தினை கொண்ட இப் பாடசாலையானது மாணவர்களுக்கான கல்வியினை சிறப்பாக வழங்கி வருகின்றது. புலமைப்பரிசில் பரீட்சை க.பொ.த. சாதாரண பரீட்சை போன்றவற்றில் மாணவர்கள் தோற்றி சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளமை இப் பாடசாலையின் சிறப்பான கல்விச் செயற்பாட்டினை எடுத்துக்காட்டி நிற்கின்றது.

க.பொ.த சாதாரணப் பரீட்சைக்கு வருடாந்தம் தோற்றுகின்ற மாணவர்களில் 85 வீதம் இற்கு மேற்பட்ட மாணவர்கள் உயர்தரம் கற்பதற்கு தகுதி பெறுவதுடன், புலமைப்பரிசில் பரீட்சையிலும் மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைகின்றமை பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். முன்னைய காலங்களோடு ஒப்பிடுகையில் அண்மைக்காலங்களில் உயர் சித்தி வீதங்களினை மாணவர்கள் வெளிப்படுத்தி நிற்கின்றமை இப் பாடசாலையின் கல்வி வளர்ச்சியின் உன்னத போக்கினையே வெளிக்காட்டி நிற்கின்றது,

மாணவர்கள் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுப்போட்டிகள், இணைபாடவிதான செயற்பாடுகள் போன்றவற்றிலும் மிளிர்கின்றமை இப் பாடசாலையானது பல்துறைசார் செயற்பாடுகளை மாணவர்களுக்கு வழங்குகின்ற கல்விக்கூடமாக திகழ்கின்றமை புலனாகின்றது. மாணவர்கள் மெய்வல்லுனர் திறனாய்வில் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்று தேசிய மட்டப்போட்டிகளில் பங்கு பற்றியுள்ளமை இதற்கு தக்க சான்றாகவுள்ளது.

வைரவிழாக் காணும் இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் ஏனைய நலன் விரும்பிகள் அனைவரையும் பாராட்டுவதுடன் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவும் இறையாசியை வேண்டி பாராட்டி மனதார வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.ம.பற்றிக் டிறஞ்சன்**
**செயலாளர்**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை**
**மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**
**வடமாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திரு.தி.ஜோன் குயின்ரஸ் அவர்கள்
## வழங்குகின்ற
## வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள கிளி/தர்மக்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

1960ஆம் ஆண்டு திரு.சி.சிவபாதசுந்தரம் அவர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்டு அக்கிராமத்தை சேர்ந்த திரு.க.வேலுப்பிள்ளை அவர்களால் பாடசாலைக்கென வழங்கப்பட்ட 05 பரப்பு காணியில் தற்காலிக கொட்டகையுடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையானது 1963.01.11ஆம் திகதி அரசினால் பொறுப்பேற்கப்பட்டு நிரந்தர கட்டடம் அமைக்கப்பட்டு தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையான வகுப்புக்களுடன் செயற்பட்டு வந்தது. பின்னர் தரம் 06, 07, 08 வகுப்புக்களும் 2013 ஆம் ஆண்டு தரம் 09 வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது.

அயலவர்களினால் அன்பளிப்பாக காணிகள் வழங்கப்பட்டமையினால் பாடசாலை பரப்பானது விரிவுபடுத்தப்பட்டு பாடசாலை மைதானம் அமையப்பெற்றமை பாராட்டுக்குரிய விடயமாகும். அதிபர், ஆசிரியர், மற்றும் அபிவிருத்திச்சங்கத்தின் அயராத உழைப்பினால் இப்பாடசாலையானது தற்போது தரம் 11 வரையான வகுப்புக்களை கொண்ட இருபாற் பாடசாலையாக அபிவிருத்தியடைந்துள்ளமை கண்கூடாகும்.

இங்கு கல்வி பயின்ற மாணவர்கள் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் கடந்த பத்து வருடங்களாக சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டமையும் க.பொ.த..சாதாரண பரீட்சையில் தொடர்ச்சியாக 85 வீதம் இற்கு மேலான சித்தி வீதத்தை வெளிப்படுத்தியமையும் பாராட்டுக்குரிய விடயமாகும். அத்தோடு கல்வி மட்டுமன்றி இணைபாட விதான செயற்பாடுகளிலும் மாகாண தேசிய மட்டங்களில் பாடசாலையின் புகழை நிலைநாட்டியுள்ளார்.

இப்பிரதேச மக்களின் ஆரம்ப மற்றும் இடைநிலைக்கல்விக்கு பெரிதும் உதவுவதுடன் மாணவர்களின் கல்வி மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளின் மேம்பாட்டிற்கும் அத்துடன் நல்லொழுக்கம் மற்றும் ஆளுமையுடன் கூடிய மாணவர்களாக திகழ்வதற்கும் சிறந்த மாணவர்களை உருவாக்குவதற்கும் இப்பாடசாலையானது ஆற்றிவரும் பணியானது அளப்பெரியதாகும்.

வைர விழாக்காணும் கலைக்கூடம் மேலும் பல சிறப்பான பணிகளை கல்விச் சமூகத்திற்குஆற்றி இன்னும் பல நூற்றாண்டுகளை கடந்து கல்விக்கான சேவையினை வழங்கி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திரு.தி.ஜோன் குயின்ரஸ்**
**மாகாணக்கல்விப்பணிப்பாளர்**
**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திரு.க.அ.சிவனருள்ராஜா அவர்கள்
## வழங்குகின்ற
## வாழ்த்துச் செய்தி

பச்சிலைப்பள்ளி மண்ணில் தர்மக்கேணியூர் கிராமத்தில் வாழும் மாணவர்களின் கல்வித்தேவையை பூர்த்தி செய்யும் நற் பாடசாலையாகத் திகழும் கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலையின் வைரவிழாவை முன்னிட்டு வெளிவரும் இம்மலரிற்கு வாழ்த்து வழங்குவதில் அகமகிழ்வடைகின்றேன்.

1960ம் ஆண்டு திரு.சி.சிவபாதசுந்தரம் அவர்கள் எடுத்த முயற்சியின் பயனாக 1963.01.11இல் இலங்கை அரசினால் பொறுப்பேற்கப்பட்டு குறைந்தளவு ஆசிரியர் வளத்துடன் சிறிதளவான மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பல பரிணாம வளர்ச்சி கண்டு இப்பிரதேச மாணவர்களுக்கு நிறைந்த கல்வியை வழங்கும் சிறந்த கல்விக்கூடமாகத் திகழ்கின்றது.

இப்பாடசாலை கல்வி,விளையாட்டு, இணைபாடவிதானச் செயற்பாடுகளில் தொடர்ந்து சாதனைகள் நிலை நாட்டி வருகின்றமை காலத்திற்கு காலம் பணி ஆற்றிய அதிபர்கள்,நல்ஆசிரியர்கள், மாணவர்கள் இக்கிராம மக்கள் ஆகியோரின் ஒன்றுபட்ட முயற்சி எனலாம்.

கிளிநொச்சி வடக்கு வலயப் பாடசாலைகளில் பல்வேறு துறைகளிலும் சாதனைகளைப் படைத்து வரும் இப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களின் பங்களிப்புடன் மேன்மேலும் வளர்ச்சியுற்று அப் பிரதேச மக்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் தனது செயற்பாட்டை சிறப்பாக வெளிக்காட்டுவதற்கு எல்லாம் வல்ல இறைவனின் ஆசி வேண்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**திரு.க.அ.சிவனருள்ராஜா**
**வலயக் கல்விப்பணிப்பாளர்,**
**கிளிநொச்சி வடக்கு**
**வலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு.சி.ச.கிருஷ்ணேந்திரன் அவர்கள்**

**வழங்குகின்ற**

**வாழ்த்துச் செய்தி**

வளமும் வலிமையும் கண்டு வரலாற்று தடமும் கொண்டு கலையோடு கல்வியுமாய் நிலை வாழ்வின் பெருமைகளுமாய் வாழ்வியல் சிறப்புக்களோடு வையத்துள் சிறந்து விளங்கும் பச்சிலைப்பள்ளி மண்ணிலமைந்துள்ள கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலை வைர விழா மலருக்கான வாழ்த்து செய்தி வழங்குவதில் நான் பேருவகையடைகின்றேன்.

தனியாளின் ஆளுமையை வளர்த்தெடுத்து அதன் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு இட்டு சென்று சமூகமானது அழியாமல் பாதுகாக்கும் கருவியாக விளங்கும் கல்வியை வழங்குவதற்கு பாடசாலைகள் இன்றியமையாதது. அந்த வகையில் தர்மக்கேணி பிரிவில் திரு சி.சிவபாதசுந்தரம் அவர்களின் முயற்சியின் பயனால் 1963ல் ஆரம்பக்கப்பட்ட இப் பாடசாலையானது ஒரு சிறு புள்ளியென ஆரம்பித்து அதன் பயணத் தடங்கள் யுத்த வடுக்களுக்குள் சிக்கித் தவித்த போதும் சாம்பலில் மீண்டெழும் சாகசப் பறவையாய் புத்துயிர்ப்புடன் இன்றைய தொழில்நுட்ப உலகுடன் போட்டியிட்டு சாதனை தடம் பதித்துள்ளது.

பாடசாலையின் தூண்களான மாணவ மாணவிகள் கற்றலுக்குள் மட்டும் நின்று விடாது இணைப்பாட விதானங்களில் விண்தொடும் நோக்கில் வசதி வாய்ப்புக்களை உருவாக்கி மாகாண,தேசிய சாதனைகளை நிலைநாட்டி பிரதேசத்திற்கு பெருமைசேர்த்துள்ளமை பாராட்டுக்குரியதொன்றாகும்.

“இந்த உலகையே மாற்றக்கூடிய பலமான ஆயுதம் ஒன்று உண்டு அதுதான் கல்வி” என்கிறார் தென்னாபிரிக்க தலைவரான நெல்சன் மண்டேலா. அதற்கமைய இப்பாடசாலையில் பெருமைக்கு அழகு சேர்க்கும் வகையில் பணியாற்றும் அதிபர் வே.செல்வகுமார் அவர்களுக்கு எனது வாழ்த்துகளை தெரிவிக்கும் அதே வேளை இப்பாடசாலை மென்மேலும வளர்ச்சி கண்டு மிளிரவும் இம்மலர் உருவாக்கத்திற்கு அயராது பாடுபடும் மலர்க்குழுவிற்கும் பாடசாலை சமூகத்திற்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.சி.ச.கிருஷ்ணேந்திரன்**
**பிரதேச செயலாளர்**
**பிரதேச செயலகம்**
**பச்சிலைப்பள்ளி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.தி.திலீபன் அவர்கள் வழங்குகின்ற வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் தர்மக்கேணி கிராமத்தில் இயங்கிவரும் கிளி/தர்மக்கேணி அ.த.க பாடசாலையின் வைரவிழாவை முன்னிட்டு வெளியீடு செய்யும் வைரவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

1963.01.11 இல் அரசினால் பொறுப்பேற்றக்கப்பட்டு தரம் 01 முதல் க.பொ.த (சா/த) வகுப்புக்களைக் கொண்டு காலத்துக்காலம் முகாமைத்துவம் செய்த அதிபர்கள் ஆசிரியர்களின் கடின உழைப்பின் வெளிப்பாடாக இன்று சாதனை நிலை நாட்டி நிமிர்ந்து வகை II பாடசாலையாக மிளிர்கின்றது. மீள்குடியமர்வின் பின் இப்பாடசாலை அதிபரின் செயற்பாடுகளால் உயர்ந்து மிளிர்வது பாடசாலைச் சமூகத்திற்கு கிடைத்த வரமாகும்.

நவீனத்துவக் கற்றலுடன் அறிவியல் தொழிநுட்ப வளர்ச்சிக் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் தற்போதைய தலைமுறையினரின் கல்வி, கலை, ஒழுக்கம், விளையாட்டு என்பவற்றில் சாதனை படைத்து பாடசாலைக்கு பெருமை சேர்க்க வேண்டும் எனவும் இறையாசி வேண்டி வைரவிழாவில் வெளிவரவுள்ள மலர் சிறப்புற அமைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.தி.திலீபன்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்**
**பளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திரு.ப.அரியரத்தினம் அவர்கள்

## வழங்குகின்ற

## வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி வடக்கு வலயக்கல்வி நிருவாகத்துக்குட்பட்ட பளைப் பிரதேசசெயலர் பிரிவில் உள்ளடங்கும் தர்மக்கேணி கிராமத்தில் இயங்கும் தர்மக்கேணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வைரவிழா மலருக்காக வாழ்த்துச்செய்தி ஒன்றை வழங்க கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும்பாக்கியமாக கருதி இவ் வாழ்த்துச் செய்தியை வழங்குகின்றேன்.

தர்மக்கேணி பிரதேச மக்களால் நீண்ட காலமாக தம் பிரதேசத்தில் ஒரு பாடசாலை நிறுவப்பட வேண்டும். என்னும் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் அம்முயற்சி 1960ம் ஆண்டு இறைவனின் கருணையாலும் உயர்திரு சி.சிவபாதசுந்தரம் அவர்களின் பெருமுயற்சியாலும் கைகூடி தருமக்கேணி அ.த.க. பாடசாலை உருவானது. திரு வே. வேலுப்பிள்ளை எனும் பரோபகாரியால் 05 பரப்பு காணி பாடசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டு அதில் தற்காலிக கொட்டகையையும் அமைக்கப்பட்டு தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் ஒரு படியான வளர்ச்சியை காணவேண்டுமாகில் அதனை தர்மக்கேணி அ.த.க. பாடசாலையில் நன்கு அவதானிக்க முடியும் பளைக்கோட்டத்தில் கொத்தணிக் கல்வி ஆரம்பிக்கப்பட்டபோது உப கொத்தணி அதிபராக திரு.சி. கிருஸ்ணசாமி விளங்கினார். திரு.க.ரட்ணகுமார் அவர்கள் காலத்தில் வருடாவருடம் தரம் 6, 7, 8 வரை வகுப்புக்கள் அதிகரிக்கப்பட்டது. இந்நிலையில் எமது பிரதேசங்களில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் 1996ம் ஆண்டு தொடக்கம் 2001ம் ஆண்டு வரை பாடசாலை இடம் பெயர்ந்து பல்வேறு பாடசாலைகளுடன் இணைந்து செயற்பட்டு வந்த நிலையில் 2008 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு இடப்பெயர்வை சந்தித்தது. எனினும் 2010ம் ஆண்டு மீண்டும் பெற்றோரும் அதிபரும் எடுத்த பகீரதப்பிரயத்தனங்களால் தனது சொந்த இடத்தில் இயங்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இந்நிலைமையில் பெற்றோர், அதிபரது அயரா முயற்சியாலும் அரசின் வரப்பிரசாதத்தாலும் 2012ம் ஆண்டு இப்பாடசாலையின் அதிபராக திரு.வே.செல்வகுமார் அவர்கள் நியமிக்கப்பட்டார். இவரது காலமே இப்பாடசாலையின் பொற்காலமாகவும் ஒரு படிமுறை வளர்ச்சியை ஆய்வு செய்பவர்கள் பார்வையிட வேண்டிய பாடசாலையாகவும் எனது பணிக்காலத்தில் கூற வேண்டிய கடமையும் உள்ளது.

இவ் அதிபர் சமூகத்துடன் பல்வேறு தொடர்புகளை ஏற்படுத்தியதன் விளைவாக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினர் 60x20 வகுப்பறை கட்டடத்தை அமைத்து இடப்பிரச்சனைக்கு தீர்வுகாணப்பட்டது. கல்வி சீரமைப்பில் 2013ம் ஆண்டு தரம் 09 அமைக்கப்பட்டது. அத்துடன் பாடசாலையின் விஸ்தீரணம் படிப்படியாக அதிகரித்தது. இவ் அதிபரின் தனி முயற்சியினால் 3 $^{1}/_{4}$ பரப்பு காணி கொள்வளவு செய்யப்பட்டது. $^{1}/_{2}$ பரப்பு காணி நன்கொடையாக வழங்கப்பட்டது. அத்துடன் அதிபரின் தனித்துவ முயற்சியால் 100 அடி நீளமானமதிலும் அமைக்கப்பட்டு பாடசாலை சிறந்த ஒரு தோற்றம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் தனித்துவ செயற்பாடுகளாலும் வலயக்கல்வி அலுவலகத்துடன் அதிபர் பேணிய நற்தொடர்புகளாலும் 2017ம் ஆண்டில் தரம் 10, 2018 இல் தரம் 11ம் வகுப்புக்கள் வைக்கப்பட்டு 2018 ஆண்டிலிருந்து க.பொ.த சா.தர பாடசாலையாக விளங்குகின்றது. இப்பகுதி பெற்றாரும் பழைய மாணவர்களும் அதிபருடன் பேணிய நல்லுறவே இவ் வளர்ச்சியின் காரணங்களாகும்.

பாடசாலையின் வகுப்புக்கள் உயர்வடைந்ததுடன் கல்வி வளர்ச்சியிலும் இப்பாடசாலை வைரவிழாவுக்கான தகுதியை நிரூபித்துள்ளது. தரம் 11 இல் கல்வி கற்ற மாணவர்கள் 2018ல் இருந்து 2021 வரை 87.5 ற்கு மேற்பட்ட சித்திவீதத்தைப் பெற்றுள்ளனர். பொதுமக்களால் இன்று பேசப்படும் கல்வி வளர்ச்சியில் தரம் 05 மாணவர்கள் பெற்ற சித்திவீதம் மிக மிக பாராட்டத்தக்கது. 2018ம் ஆண்டு செல்வி.உ.நிலவரசி கோட்டமட்டத்தில் 192 புள்ளிளைப் பெற்றமை. யாவராலும் பாராட்டப்பட்டது. மேலும் 70 புள்ளிகளுக்கு மேல் 2014ம் ஆண்டிலிருந்து 2022 வரை 12 மாணவர்களும் பெற்றிருப்பது ஒரு சாதனையாகும்.

எனினும் அதிபர் ஆசிரியர்களது ஒன்றிணைந்த செயற்பாடுகளும் அதிபர், பெற்றோர்கள் தொடர்பும், அதிபர் கல்வித்திணைக்கள தொடர்புகளும் இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாகும். ஒரு வைரவிழாவை எதிர்நோக்கும் பாடசாலை கொண்டிருக்க வேண்டிய சகல தகுதிகளையும் கிளி/ தர்மக்கேணி அ.த.க. பாடசாலை கொண்டுள்ளதென்பதை இம் மாவட்டத்தின் முன்னைய கல்விப்பணிப்பாளர் எனும் வகையிலும், முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் எனும் வகையிலும் சிபார்சு செய்வதில் மிக மகிழ்வடைகிறேன்.

**திரு.ப.அரியரத்தினம்**
**முன்னாள் மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்**
**வடக்கு மாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.ந.தாமோதரம்பிள்ளை அவர்கள் வழங்குகின்ற வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் பளைக் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஒன்றே கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலையாகும். இப்பாடசாலையால் வெளியிடப்படும் வைரவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"இன்னறுங் கனிச்சோலைகள் செய்தல்
இனிய நீர்தண் சுனைகள் இயற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள கருமங்கள் யாவும்
பெயர் விளம்பி ஒளிர வைத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்."

என்ற பாரதியாரின் பாடலுக்கமைய கோடி புண்ணியம் கிடைக்கச் செய்யும் பாடசாலை அமைத்தலான சிறந்த நற்பணியை செய்வதற்கு முல்லையடி பளையில் வசித்த திரு.சி. சிவபாதசுந்தரம் அவர்கள் திடங்கொண்டார்.

இவர் பாடசாலையை அமைப்பதற்கு தர்மக்கேணி கிராமத்தை தேர்ந்தெடுத்தால் இக் கிராமத்தில் வாழ்ந்தவரான திரு.க.வேலுப்பிள்ளை அவர்களின் உதவியினால் 1960ஆம் ஆண்டு ஐந்து பரப்புக் காணியை பெற்று அதில் கீற்றுக் கொட்டகைகள் அமைத்து தென்னங் குற்றிகளை இருக்கைகளாகப் பாவித்து செல்வி மு.பாக்கியம்மா அவர்களை உதவி ஆசிரியையாக நியமித்து பாடசாலையை நடாத்தி வந்தார். இச்சந்தர்ப்பத்தில் நானும் திரு பு.கணபதிப்பிள்ளை ,செல்வி சோதீஸ்மதி,திருமதி சி.நாகேஸ்வரி ஆகியோரும் இவர்களுடன் இணைந்து கொண்டோம்

அரசாங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்க வேண்டுமாயின் ஓர் அரசாங்கப்பாடசாலை எவ்வாறு செயற்பட வேண்டும். என்பதே நிபந்தனையாகும். இவர்களது நிபந்தனைகளுக்கு அமைய
பாடசாலை நடாத்துவது இலகுவான காரியமல்ல

"பண்டு முளைப்பது அரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்- கொண்டபர்
ஆற்றல் உடையவர்க்கும் ஆகாதளவின்றி
ஏற்ற கருமம் செயல்"

என்ற ஔவைப்பாட்டியின் பாடலுக்கமைய பக்கபலமின்றி எக்கருமத்தையும் நிறைவேற்றல் சிரமம். கல்வித்திணைக்களத்தினர் பாடசாலையின் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டுமென்பதை எடுத்துக் கூறுவார்கள். பெற்றோர், நலன் விரும்பிகள், அயலூரவர் எனப் பலரும் வேண்டிய நேரங்களில் தம்மாலான உதவிகளைச் செய்தனர். நாங்களும் ஒழுங்காக செயற்பட்டதால் அரசாங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11.01.1963ஆம் ஆண்டு பொறுப்பேற்றது. இப்பாடசாலையின் சிறப்பம்சமாகும்.தான் உருவாகும் போது ஆறு ஆசிரியர்களையும் உருவாக்கியதேயாகும். சுயநல சிந்தனையுடன் இம் முயற்சியால் ஈடுபட்ட நான் அன்று தொட்டு இன்றுவரை மேலதிக வகுப்புக்களை நடாத்தி கற்பித்தல் பணியை தொடர்ந்து செய்து வருகின்றேன்.

பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்ற திகதியிருந்து கணக்கிட்டே இன்று இப்பாடசாலை வைரவிழாவை கொண்டாடுகின்றது. பாடசாலையை பொறுப்பேற்றதும் காரைநகரைச் சேர்ந்த திரு.எ.செல்லையா அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரைத்தொடர்ந்து பல அதிபர்களும் ஆசிரியர்களும் கடமையாற்றியுள்ளார்கள். இக்காலம் நிதி வளம் குறைந்ததாகவும் ஆசிரியர் வளம் குறைந்ததாகவும் இருந்த காரணத்தாலும் போர்ச்சூழ்நிலை இடப்பெயர்ச்சி காரணமாகவும் அதிபர் ஆசிரியர்களால் முன்னேற்றகரமான செயற்பாடுகளில் ஈடுபடமுடியாதவர்களாக முன்னேற்றகரமான செயற்பாடுகளில் ஈடுபடமுடியாதவர்களாக இருந்துள்ளனர். இடவசதி கருதி பெயர்களையோ செயற்பாடுகளையோ விபரமாக கூற முடியவில்லை.

2010ஆம் ஆண்டு மீளக் குடியேறியபின் பல முன்னேற்றங்கள் நாட்டில் ஏற்பட்டது. திரு.வே.செல்வகுமார் அவர்களே 10.05.2012ல் அதிபராக பொறுப்பேற்றார். இவர் பாடசாலைக்கு கிடைக்க வேண்டிய வளங்களை தவறாது பெற்று பெற்றோர், ஆசிரியர், நலன் விரும்பிகளின் உதவியுடன் முறைப்படி பயன்படுத்தி பாடசாலையை வளம்படுத்தியுள்ளார். இவரது காலத்தை பொற்காலம் என்று கூறலாம்.

பொற்காலம் தொடரவும் ,வைரவிழா சிறப்பாக நடைபெறவும் வைரவிழாமலர் பயனுள்ளதாக அமையவும் அருள்பாலிப்பாய் என்று இங்கு எழுந்தருளியுள்ள விநாயகப்பெருமானின் பாதாரவிந்தங்களை பக்தி சிரத்தையுடன் வழிபட்டு வாழ்க! வாழ்க! மனம் போல் வாழ்க என வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

**திரு.ந.தாமோதரம்பிள்ளை**
**ஓய்வுநிலை அதிபர்**
**பேராலை பளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு.க.ரட்ணகுமார் அவர்கள் வழங்குகின்ற வாழ்த்துச் செய்தி

கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலை இன்று தனது வைரவிழாவைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்பள்ளியில் நான் கடமையாற்றியதை பாக்கியமாக கருதுகின்றேன். "எல்லாம் அவன்செயல்" என்னும் பொன்மொழிக்கமைவாக இறைவன் அருளால் 09.01.1989 தொடக்கம் 19.02.1996 இடப்பெயர்வு வரை கடமையாற்றினேன். சுற்றி வர வேலி அமைத்து முன்பக்கம் பனைமட்டையால் வடிவமைத்து ஒரு புல் பூண்டு கூட இல்லாது வெள்ளை மணலில் நடுவிலே அழகாக காட்சி தரும் இப்பள்ளியானது அன்றே இரண்டு பட்டதாரி ஆசிரியைகளும் இரண்டு நிரந்தர ஆசிரியர்களும், நான்கு தொண்டர் ஆசிரியர்களும் கடமையாற்றினார்கள். ஆசிரியர்கள் அர்ப்பணிப்பான சேவை மற்றும் கல்விப்பணியுடன் பள்ளியில் அழகையும் மெருகூட்டினார்கள்.

எனது காலத்தில் தரம் ஐந்து வரை மாணவர்கள் இருந்தார்கள் இதனை தரம் எட்டு வரையும் கொண்டு சென்றோம். தர்மக்கேணிப் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என்ன தேவையோ அவற்றை குறைவின்றி வழங்கினார்கள். இக்காலத்தில் பள்ளியின் பெயர்ப்பலகை, பள்ளிக்கான இலட்சணை மற்றும் பாடசாலைக்கீதம் போன்றவற்றைக் கொண்டு வந்தோம். இணைபாடவிதான செயற்பாட்டில் பல போட்டிகளில் பங்கேற்று யாழ் மாவட்ட பாடசாலைகளுடன் போட்டியிடக்கூடியவாறு இருந்ததை மறக்க முடியாது. கல்வியிலும், புலமைப்பரிசில் பரீட்சையிலும் சித்தி பெறக்கூடியவாறு மாணவர்கள் இருந்தார்கள்.

இன்று இப்பள்ளி எழுச்சி கண்டுள்ளமைக்கு எனது காலத்தின் மாணவர்களே பெற்றோராக இருக்கின்றனர். இவர்களுக்கு இட்ட அத்திபாரம் தற்போது மிளிர்வதைக்கண்டு பூரிப்படைகின்றேன். இப்பள்ளியானது மென்மேலும் வளர்ச்சி பெறும் என்ற நம்பிக்கையுடன் எனது வாழ்த்துரையை வழங்குகின்றேன். நான் இன்னாளில் பல பிரபல பாடசாலைகளின் அதிபராக கடமையாற்ற இப்பள்ளியின் சேவையே உதவி புரிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**திரு.க.ரட்ணகுமார்**
**ஓய்வு நிலை அதிபர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமதி செ.ஜோ.பாலேந்திரா அவர்கள் வழங்குகின்ற வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி வடக்கு வலயத்தின் பளைக் கோட்டத்தின் சிறப்பாக இயங்குகின்ற பாடசாலைகளுள் கிளி/தர்மக்கேணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையினது வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து பல அதிபர்களைக் கண்டிருந்தபோதிலும் நான் 1997ம் ஆண்டு தைமாதம் அப்பொழுது உப அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்த திருமதி கேதீஸ்வரி தனபாலசிங்கம் அவர்களிடமிருந்து பாடசாலைப் பொறுப்பினைக் கையேற்றேன்.

அக்காலம் யுத்த மேகம் சூழ்ந்திருந்த காலம் இடப்பெயர்வு எமக்கு பழக்கப்பட்டொன்றாக இருந்தது. பல தடவைகள் இடப்பெயர்வைச் சந்தித்தோம். இதே வகையில் 2000ம் ஆண்டு மாவட்ட ரீதியாக இடம்பெயர்ந்து வடமராட்சி நோக்கிச் சென்றோம். பலரது உதவிகளின் நிமித்தம் பாடசாலையை அங்கும் இயக்க கூடியதாக இருந்தது.

அதன் பின்னர் 2002ம் ஆண்டு மீளக்குடியமர்ந்தும் பல பிரயத்தனத்தின் மத்தியில் மீளவும் பாடசாலையை இயக்கினோம். குறைந்தளவு மாணவர்களுடன் அதற்கேற்ப ஆசிரியர்களுடனும் தரம் 08 வரை நன்றாக இயங்கிக் கொண்டிருந்த வேளை யுத்தம் ஆரம்பமானதைத்தொடர்ந்து எமது பச்சிலைப்பள்ளி மக்கள் அனைவரும் வன்னிப்பெருநிலப்பரப்பிற்குச் செல்ல வேண்டியதாயிற்று.

போரானது உக்கிரமடைந்து இருப்பினும் எனது பொறுப்பிலிருந்த பாடசாலைப் பொருட்கள் ஆவணங்கள் அனைத்தையும் உயிரையும் மதிக்காது எனது உறவினர்கள் சிலரது உதவியுடன் ஏற்றிச்சென்றோம்.

கோரக்கன் கட்டுச் கிராமத்தில் பிரத்தியேகமாக ஓர் பாடசாலை திறக்கப்பட்டு கோயில்வயல் சி.சி.த.க பாடசாலையும் எமது பாடசாலையும் இயங்கி வந்தது.

இக் காலப்பகுதியில் மீண்டும் போர் ஆரம்பமானது இதனால் பெரும் சிரமங்களுக்கும், துயரங்களுக்கும், சவால்களுக்கும், மத்தியில் பிள்ளைகளையும் பாடசாலையையும் காப்பாற்ற வேண்டிய நிலை உருவானது. இவ்வேளை 22.12.2007ல் எனது ஓய்வு நிலையானதால் திரு.வ.ஜீவரத்தினம் அவர்கள் புதிய அதிபராக நியமிக்கப்பட்டதன் பிரகாரம் அவரிடம் பாடசாலைப் பொறுப்பினை உத்தியோக பூர்வமாக கையளித்தேன்.

தற்பொழுது சொந்த இடத்தில் இயங்குகின்ற பாடசாலை அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அதிபர் திரு.வே.செல்வகுமார் அவர்களது வழிகாட்டலில் தரம் 11 வரை உயர்ந்து கல்வி, விளையாட்டு, கலைத்திறன், மட்டுமன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லொழுக்கத்திலும் சிறந்து விளங்குவதாக அறிந்து மிகவும் மனமகிழ்வடைகின்றேன்.

தர்மக்கேணியானது சிறிய கிராமமாக இருந்த போதிலும் நற்பண்பும் பெரியோரை மதிக்கும் தன்மையும் மாணவர்கள், பெற்றோர்கள், மக்கள் மத்தியில் இயல்பாகவுள்ள குணாம்சமாகும்.

இன்றைய வைரவிழா நன்நாளிலே அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு பாடசாலையானது மேன்மேலும் வளர வேண்டும் எனவும் உயரவேண்டும் எனவும் விழா சிறப்பாக நடைபெறவேண்டுமெனவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**திருமதி செ.ஜோ.பாலேந்திரா**
**அதிபர் (ஓய்வு நிலை)**
**கனடா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமதி.புஸ்பரதி விஜயலஷ்மன் அவர்கள் வழங்குகின்ற வாழ்த்துச் செய்தி

எமது பாடசாலை கிளி/தர்மக்கேணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வைரவிழாவிற்கான வாழ்த்து செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலாளர் பிரிவில் தர்மக்கேணி கிராம அலுவலர் பிரிவின் 1960ம் ஆண்டு திரு சி.சிவபாதசுந்தரம் அவர்கள் எடுத்த முயற்சியின் பயனாக உருவானதே கிளி/தர்மக்கேணி அ.த.க பாடசாலை ஆகும். 1963ல் அரசாங்கத்தினால் பதியப்பெற்று அங்கீகாரம் பெற்ற பாடசாலையாகத் திகழ்கின்றது.

இக் கிராமத்தில் வாழ்ந்த அமரர் க.வேலுப்பிள்ளை அவர்களின் உதவியால் பாடசாலைக்கென 5பரப்பு காணி வழங்கப்பட்டது. இவரின் உந்து சக்தியின் மூலம் இப்பாடசாலையானது இந்த இடத்தில் நிலை கொண்டது. எனது அம்மப்பா அமரர் க.வேலுப்பிள்ளை அவர்களை நினைத்து இந்த இடத்தில் பெருமை கொள்கின்றேன்.

ஆரம்ப காலத்தில் இப் பாடசாலையானது தரம் 05 வரை இடம்பெற்று வந்தது. பிற்பட்ட காலங்களில் தரம் 08 ஆக தரம் உயர்த்தப்பெற்றது. அக்காலத்தில் அயராது உழைத்த அதிபர் க.ரட்ணகுமார் அவர்களை போற்றுகின்றேன்.

நான் இப்பாடசாலையில் தரம் 08 வரை கல்வி கற்றுள்ளேன். அப்போது இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட அதிபர் திரு.க.ரட்ணகுமார், திருமதி பாலேந்திரா மற்றும் தங்களையே உருக்கி எம்மை ஆளாக்கி வளர்த்த ஆசிரியர்கள் அனைவருக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பின்னர் இப்பாடசாலையின் அதிபர்களாக கடமையாற்றியவர்கள் அனைவரையும் பாராட்டி 2012ம் ஆண்டில் அதிபராக திரு.வே.செல்வகுமார் அவர்களின் அதீத உழைப்பினாலும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், மற்றும் நலன் விரும்பிகளின் ஒத்துழைப்போடும் இப்பாடசாலை தரம் 11 வரை உயர்த்தப்பட்டது.

நாட்டின் இடம்பெற்று வரும் அசாதாரண நிகழ்வுகள் காரணமாக எமது கிராமத்தில் உள்ள பிள்ளைகள் அனைவரும் எமது பாடசாலையில் O/L வரை கல்வி கற்கலாம். என பெற்றோர்கள் மத்தியில் அதீத மகிழ்ச்சி ஏற்பட்டது. இவ்வாறு எமது பாடசாலை எல்லா வளங்களையும் பெற்று புதுப்பொலிவுடன் நிமிர்ந்து விளங்க காரண கர்த்தாவாக விளங்கிய எமது அதிபர் திரு.வே.செல்வகுமார் அவர்களுக்கு பெற்றோர் சார்பில் நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இப்பாடசாலையின் பழைய மாணவியும் பெற்றோரும் ஆகிய நான் என்னை வளர்த்து நல்ல நிலைக்கு ஆளாக்கிய எனது அன்னைக்கு ஆண்டுகள் அறுபதில் உளமார வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமை கொள்கின்றேன்.

மென்மேலும் எமது அன்னை வளர வேண்டும் என்றும் எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் கிடைக்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி.புஸ்பரதி விஜயலஷ்மன்**

**செயலாளர், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்வி.லோ.குகவதனி அவர்கள் வழங்குகின்ற வாழ்த்துச் செய்தி

பச்சிலைப் பள்ளி பிரதேசத்திற்கு வரமாக அமைந்த கிளி/தர்மக்கேணி அ.த.க பாடசாலையின் வைரவிழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ்வடைகின்றோம்.

சின்னஞ் சிட்டுக்களாய் பறந்து வரும் சிறார்களை தரம் 1 இல் உள்வாங்கி படிப்படியாக வளர்தெடுத்து தரம் 5 ஊக்கமாய் ஊக்குவித்து சாதனை படைக்க வைத்தாய். அவற்றோடு மட்டும் நின்றுவிடாது இன்று சாதாரண தரம் வரை எம் சகோதரர்கள் கல்வி கற்க வாய்ப்பை வழங்குகின்றாய். அத்தகைய சாதனைகளுடன் எமது பள்ளி சிறிய பாடசாலையாக இருந்தாலும் விளையாட்டுப் போட்டிகள், விஞ்ஞானம், நுண்ணறிவு, கலை கலாச்சாரம் என்பவற்றில் முன்னிலையில் நின்ற எம்மை தற்போதைய வளர்ச்சிக்கு ஏற்ப எம்மை வளப்படுத்தி நெறிப்படுத்தி செயற்படுத்தும் உன்புகழ் வரையறை செய்ய முடியாது. இந்நிலையில் இன்னும் பல சாதனைகள் படைத்து இப் பாரினில் மேலோங்க எம் பழைய மாணவர் சங்கம் சார்பாக வாழ்த்துகின்றேன்.

**செல்வி.லோ.குகவதனி**
**செயலாளர், பழைய மாணவர் சங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியர் சிந்தனையிலிருந்து...

கிளி/தர்மக்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வைரவிழா மலருக்கு இதழாசிரியராக இருப்பதற்கு வாய்ப்புத்தனை வழங்கியமையை இட்டு பேருவகை அடைகின்றேன். 1960ம் ஆண்டு திரு.சி.சிவபாதசுந்தரம் அவர்களின் எண்ணத்தில் உருவாகி இக் கிராமத்தில் வாழ்ந்த திரு.க.வேலுப்பிள்ளை அவர்களின் உதவியால் வழங்கப்பட்ட 5 பரப்புக் காணியில் சிறு விதையாக உதயமாகி படிப்படியாக வளர்ச்சியடைந்து விருட்சமாக காட்சியளிப்பதைக் காணலாம்.

பசுமைமிகு பச்சிலைப் பள்ளியின் தரணிக்கோர் எடுத்துக்காட்டாக தன்னிகரில்லா அறிவுசார் பெருந்தகைகளை உருவாக்கிய தர்மக்கேணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை திகழ்வதற்கு காவல் தெய்வமான பூதவராயரும், தாயாக இருந்து காத்தருளும் முத்துமாரியம்மன் ஆலயமும் இரு சுடர்களாக ஒளிர்கின்றன.

கடமைதனைக் கண்ணியமாய், கச்சிதமாய் செய்திடும் நுண்மதிசார் அதிபர், ஆசுகளை களைந்து அறிவுபசியை ஊட்டிடும் ஆசிரியர் குழாம் பெற்றெடுத்து பிள்ளைகளை பேரும் புகழுடனும் பெருமையுடனும் வளர்க்க எதிர்பார்க்கும் பெற்றோர்கள் பாடசாலையில் பற்றுடன் மிளிரும் பழைய மாணவர்கள் குழாமுடன் புலம்பெயர் நாட்டில் வசித்து வரும் பள்ளித் தோழமைகள் அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக செயற்படுவதற்கும் ஓங்கு புகழுடன் திகழ்வதற்கும் ஏதுவாய் அமைகிறது.

இம் மலருக்கு பொறுப்புடனும் பொலிவுடனும் திகழ்வதற்கு ஆசிரியர்களையும், வாழ்த்துகளையும், சிறப்பான ஆக்கங்களையும் தந்துதவிய அறிவுசார் ஆன்றோர் பெருந்தகைகளுக்கும் மனமார்ந்த நன்றிகளை நவில்வதோடு இன்னும் மலருக்கு மகத்தான மாணவர் கட்டுரைகள், கவிதைகள், நாடகம், சிறுகதை போன்றனவும் அமைந்துள்ளன.

நூலின் அட்டைப்படமானது தண்ணொளி பொருந்திய தர்மக்கேணி ஊரின் பெருமைதனை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. மலரின் இதழ்களிலே பாடசாலைக் கீதம், தமிழ்த்தாய் வாழ்த்து, வைரவிழா வாழ்த்துப் பாமாலை என்பன வனப்புடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. இம்மலரில் வெளியாகின்ற ஆக்கங்களுக்கு ஆக்கம் வழங்கிய ஒவ்வொருவருக்குமே பொறுப்பாகும். இதே போன்று பாடசாலை வரலாறானது 2012 முற்பட்ட காலத்தினுடைய விடயங்கள் யாவும் பலரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலே தொகுக்கப்பட்டுள்ளன. பிற்பட்ட கால வரலாறானது ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது என்பதனையும் தெரியப்படுத்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலருக்கான புகைப்படங்களை நேர்த்தியாக உரிய வேளையில் தந்துதவிய புகைப்பட K.S.M நிறுவனத்தினருக்கும் இதழினை வடிவமைத்து தந்த சிவகஜன் பதிப்பகத்தினருக்கும், அவர்தம் ஊழியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அந் நூல் சிறந்த நூலாக திகழ்வதற்கு நிதி உதவியை வழங்கிய திரு.சுந்தரம்பிள்ளை குடும்பத்தினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். என்னோடு உறுதுணையாக நின்று உதவிய மலர்க் குழுவினருக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் பல்துறை சார்ந்த பனுவல் நம் கைகளில் தவழ்வதற்கும் உதவிய அனைத்து நல்லுள்ளங்களிற்கும் நன்றியினை நயந்து நவில்கின்றோம்.

**திரு.சி.கோகுலதர்சன்**

**இதழாசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையின் ஸ்தாபகர்



உயர்திரு.சி.சிவபாலசுந்தரம்
[ஓய்வுநிலை அதிபர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை உருவாக்கத்தின் ஆரம்ப பங்குதாரர்



# கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரம்பகால ஆளணியினர் [1963]



மாணவ முதல்வர் சின்னம் சூட்டுதல்



மாணவர் பாராளுமன்றம் — 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலையை அலங்கரித்த அதிபர்கள்



க.சிவபாதசுந்தரம்
(1963-1968)



K. செல்லையா
(1968-1972)



A.கந்தப்பு
(1972-1974)



க.சிவபாதசுந்தரம்
(1974-1977)



S. வேலுப்பிள்ளை
(1977-1979)



S. கருணாகரன்
(1963-1968)



S. கிருஷ்ணசாமி
(1982-1989)



K.ரட்ணகுமார்
(1982-1996)




செ.ஜோ.பாலேந்திரா
(1996-2008)



வி.ஜீவரட்ணம்
(2008-2010)



க.சசிகுமார் (பதில் அதிபர்)
(2010.05-2010.10.17)



S. அகஸ்ரின்
(2010-2012)



வி.விக்டர் அன்ரனி (பதில் அதிபர்)
(2012.01.02-2012.05.09)



K.ஞானராசா
(2017.01.11-2017.02.21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை ஆளணியினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் வரலாறு

தர்மக்கேணி மண்ணில் பெரு விருட்சமாக வளர்ந்து ஒளி பரப்பிக் கொண்டிருப்பதே தர்மக்கேணி அ.த.க பாடசாலையாகும். இப் பாடசாலை 60 வருடப் பூர்த்தியை 2023ஆம் ஆண்டு வைரவிழாவாகக் கொண்டாடுவதில் தர்மக்கேணிச் சமூகம் பெருமை கொள்கின்றது. 1960ம் ஆண்டு இப்பிரதேசத்திற்குப் பாடசாலை இல்லை. என்பதனை உணர்ந்த திரு.சி.சிவபாதசுந்தரம் அவர்கள் பாடசாலையை ஆரம்பிப்பதற்கான முயற்சியினை மேற்கொண்டார். அவரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு அயற்பிரதேசங்களில் இருந்து ஐந்து ஆசிரியர்கள் இணைந்து கொண்டனர். இவர்களின் முயற்சியினை அறிந்து இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த திரு.க.வேலுப்பிள்ளை என்பவர் தனது குடும்ப உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் ஐந்து பரப்புக் காணியினை பாடசாலை ஆரம்பிப்பதற்காக உகந்தழித்தார். அதன் பயனாக சிறு கீற்றுக் கொட்டகை அமைத்து தென்னங் குற்றிகளை இருக்கையாகப் பயன்படுத்தி கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது. இச் செயற்பாட்டினை அடிப்படையாக வைத்து 1963.01.11 இல் பாடசாலை அரசினால் பொறுப்பேற்கப்பட்டு 60 x 16 அளவுள்ள கட்டிடம் அமைக்கப்பட்டு தரம் 01 தொடக்கம் 05 வரையான வகுப்புக்களுக்கான கற்றல் செயற்பாடு பாடசாலையின் மகுட வாசகமான "கற்க கசடற கற்க" என்பதனைத் தாங்கி தர்மக்கேணி பிரதேசத்தில் கிளி/தர்மக்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எனும் நாமத்தை தாங்கி திரு.சி.சிவபாதசுந்தரம் அதிபராக பொறுப்பேற்று பாடசாலை கல்விப் பணி ஆரம்பிக்கப்பட்டு பெரு விருட்சமாக ஒளிவீசிக் கொண்டிருக்கின்றது.

அதனைத் தொடர்ந்து K.செல்லையா 1968 இல் இருந்து 1972 வரை கடமையாற்றினார். சூழலுக்கும் காலத்துக்கும் ஏற்ப பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்தார். தொடர்ந்து A.கந்தப்பு என்பவர் 1972 - 1974 வரை கடமையாற்றினார். தற்துணிவு மிக்க அதிபராகவும் முன்னைய அதிபர் விட்டுச் சென்ற பணியை மேலும் மெருகூட்டி கல்விப்பணி, நிர்வாகச் செயற்பாடு என்பவற்றில் வளர்ச்சி கண்ட அதிபராகத் திகழ்ந்தார்.

அடுத்து மீண்டும் சி.சிவபாதசுந்தரம் அதிபராக 1974 - 1977 வரை தனது பணியினை மிகவும் சிறப்புற மேற்கொண்டார். இக்காலத்தில் பாடசாலையில் தனது கடமையை கண்ணென நினைத்து பணியாற்றினார்.

தொடர்ந்து S.வேலுப்பிள்ளை அவர்கள் 1977 - 1979 வரை அதிபராகக் கடமையாற்றினார். இவர் தற்துணிவும் ஆளுமையும் பொருந்திய அதிபராக காணப்பட்டார். பின்னர் 1979 - 1982 வரை S.கருணாகரன் அவர்கள் கடமையாற்றினார். இவருடைய காலத்திலும் பாடசாலையின் வளர்ச்சி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிலும் முன்னேற்றம் காணப்பட்டதனை அறிய முடிகின்றது. அதன் மூலம் இவருடைய ஆளுமைத் தன்மையைக் காண முடிந்தது.

அடுத்து S.கிருஸ்ணசாமி அவர்கள் 1982 - 1989 வரை கடமையாற்றினார். இவரது காலம் பாடசாலை வளர்ச்சியில் கல்வி, இணைபாடவிதானச் செயற்பாடுகள் வளர்ச்சி கண்ட காலமாகும். இவர் சிறந்த ஆளுமைத் திறனும் செயற்திறனும் மிக்க அதிபராகத் துலங்கியதனை இவருடைய கால பாடசாலை வளர்ச்சி மூலம் அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் தொடர்ந்து திரு.க.ரட்ணகுமார் அவர்கள் 1989.01.09 - 1996.04.25 வரையான ஏழு வருடங்கள் கடமையாற்றினார். கடமைதனைக் கச்சிதமாகச் செய்து பிரதேச மக்களின் மனங்களில் இடம்பிடித்து பாடசாலைக்குத் தன்னுடைய காலத்தில் ஏதோ ஒன்றைச் சாதித்து விட்டுச் செல்ல வேண்டும் என்ற நன்னோக்குக் கொண்ட இவரின் முயற்சியால் திரு.க.வேலுப்பிள்ளை அவர்கள் தனது குடும்ப உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் மீண்டும் நன்கொடையாக ஏழு பரப்புக் காணியினைப் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கினார். இத்தோடு நின்றுவிடாது கல்வி, இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் சாதனையை நிலைநாட்டியதனை அறிய முடிகின்றது. 1994ம் ஆண்டு பாடசாலை வரலாற்றில் முதன் முதலாக செல்வி.சு.புஸ்பமலர் என்ற மாணவியை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையச் செய்தமையை அறிய முடிகின்றது. இதனைவிட பாடசாலைத் தரத்தினை உயர்த்தும் முகமாக தரம் 06, தரம் 07, தரம் 08 வகுப்புக்களும் உருவாக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் நடைபெற்றன. இவை அனைத்தும் இவருடைய காலத்தில் பாடசாலை வளர்ச்சியில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தி வளர்ச்சியடைந்த காலமாக அறிய முடிகின்றது.

இவரைத் தொடர்ந்து திருமதி.செ.ஜோ.பாலேந்திரா 1996 - 2008 வரையான இடர்நிறைந்த காலத்தில் கடமையாற்றிய முதலாவது பெண் அதிபர் என்ற பெருமையைத் தன்னகத்தே கொண்டிருந்தார். 1996ல் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை காரணமாக இடப்பெயர்வினால் கிளி/பளை மத்திய கல்லூரியுடன் மூன்றுமாத காலம் இயங்கி வந்ததுடன் தொடர்ந்தும் தனியார் காணி ஒன்றில் இயங்கி மீண்டும் சொந்த இடத்தில் இயங்கிக் கொண்டிருந்த காலத்தில் 1997ல் மீண்டும் செல்வி.சு.யோகலட்சுமி என்ற மாணவி தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை சித்தியெய்தி சாதனை படைத்தது இவருடைய கல்விப் பணியின் வளர்ச்சியை அறிய முடிகின்றது.

இதனைவிட 2000ம் ஆண்டு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக யா/நெல்லியடி மெ.மி.த.க பாடசாலையுடன் இணைந்து கற்றல் செயற்பாடு, இணைபாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வளர்ச்சி கண்டதனைக் காணமுடிகிறது. மீண்டும் 2003.01.28ல் தொண்ணூற்று ஐந்து மாணவர்களுடன் தனது சொந்த இடத்தில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு கிடைத்த வளங்களைக் கொண்டு இயங்கிக் கொண்டிருந்த காலத்தில் மீண்டும் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 2006.08.11ல் இயங்க முடியாத சூழல் ஏற்பட்டது. பின் 2006.09.14 இல் கிளி/முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயத்துடன் இயங்கத் தொடங்கியது. பின்பு கோரக்கன் கட்டுப் பிரதேசத்தில் கிளி/தர்மக்கேணி அ.த.க பாடசாலை எனும் பெயருடன் திறப்புவிழா செய்து தனது ஆளுமையை வெளிக்காட்டினார். அன்றைய விழாவில் வலயக் கல்விப் பணிப்பாளர் கலந்து கொண்டதுடன் உதவி அரச அதிபர் திரு.சி.சத்தியசீலன் அவர்கள் பாடசாலையைத் திறந்து வைத்தார். இப் பாடசாலையுடன் இணைந்து கிளி/கோவில்வயல் சி.சி.த.க பாடசாலையும் இயங்கி வந்தது.

அடுத்து திரு.வ.ஜீவரட்ணம் அவர்கள் 2008.01.02 தொடக்கம் 2010 வரை கடமையாற்றினார். இவருடைய காலம் கடும் சவால்மிகக் இடரான காலமாகக் காணப்பட்டது. இடப்பெயர்வும் நலன்புரி நிலையத்தில் கற்றல் செயற்பாடும் மறக்க முடியாது. இக்காலத்தில் விளையாட்டுப்போட்டி சிறப்பாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. கோட்டமட்ட, வலயமட்டப் போட்டிகளில் எல்லாம் மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை படைத்தனர். இதனூடாக இவரின் சிறந்த ஆளுமைத் தன்மையைக் காணமுடிகின்றது.

அதனைத் தொடர்ந்து பதில் அதிபராக திரு.க.சசிகுமார் அவர்கள் 2010.05.03 - 2010.10.17 வரை கடமையாற்றினார். பாடசாலைக்கான எந்த அடிப்படை வசதிகளும் அற்ற நிலையிலும் பாடசாலையைத் திறம்பட நடாத்தியிருந்தார். தொடர்ந்து திரு.சூ.அகஸ்ரின் அவர்கள் 2010.10.18 தொடக்கம் 2012.01.01 வரை அதிபராகக் கடமையாற்றினார். தன்னுடைய சாந்தமான குணத்தினால் அனைவரையும் கவர்ந்து பாடசாலையைத் திறம்பட நடாத்தியமையைக் காண முடிந்தது. அக்காலத்தில் கற்றல் செயற்பாட்டின் மூலம் பல சாதனைகளை நிலைநாட்டியிருந்தார். இதனைத் தொடர்ந்து திருமதி.வி.விக்ரர் அன்ரனி அவர்கள் பதில் அதிபராகக் கடமையினைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் நான்கு மாதங்களாகக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை சிறப்பாகச் செய்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து பாடசாலையினை திரு.வே.செல்வகுமார் அவர்கள் 2012.05.10ம் திகதி பொறுப்பேற்றுக் கொண்டார். பாடசாலை வரலாற்றில் ஒரு பொற்காலமாக அமைந்திருக்கின்றது. இக் காலத்தில் பௌதீகவளம், கற்றல் செயற்பாடு, இணைபாடவிதானச் செயற்பாடுகள் என அனைத்து விடயங்களிலும் பெரு வளர்ச்சி அடைந்தமையைக் காணலாம். அந்த வகையில் 2012ம் ஆண்டு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் 60'x 20' வகுப்பறை, நீர்த்தாங்கி, சிறுவர் விளையாட்டு முற்றம் வழங்கப்பட்டது. பின்பு 2013ல் தரம் 09 வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு கற்றல் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. 2017ம் ஆண்டு வகுப்பறைத் தேவையினைப் பூர்த்தி செய்யும் முகமாக 80'x25' கட்டடத் தொகுதியினை மீள்குடியேற்ற புனர்வாழ்வு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு நிதியுதவியில் இருந்து அமைக்கப்பட்டது.

பாடசாலை வளர்ச்சியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினுடைய முயற்சியால் பாடசாலைக்கான 100' அடி மதில் 2013ம் ஆண்டு அமைக்கப்பட்டது. மாணவர்கள் கற்றல் தேவையினை நிறைவு செய்யும் முகமாக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டில் பகுதி அளவிலான நிரந்தரக் கட்டிடம் அமைக்கப்பட்டது. இதன் மிகுதி வேலைகளை நிறைவு செய்வதற்கு பெருமிதத்துடன் கௌரவ மாகாணசபை உறுப்பினர் பசுபதி அரியரட்ணம் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் பூர்த்தி செய்யப்பட்டதுடன் தளபாடத் தேவையினை நிறைவு செய்யும் முகமாக ஒரு தொகுதி கதிரையினையும் பெற்றுத் தந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனைவிட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்களின் ஒழுங்கமைப்பில் கௌரவ பிரதேசசபை தவிசாளர் சுப்பிரணியம் சுரேன் அவர்களின் சிபார்சின் பெயரில் திறன் வகுப்பறை தொகுதி ஒன்றும் பெண்களுக்கான மலசலகூடத் தொகுதி ஒன்றும் வழங்கப்பட்டது. அதேபோன்று பாடசாலையின் முன்பகுதி மிகுதி மதில் வேலையினை கிராமத்துடனான கலந்துரையாடல் வேலைத்திட்டத்தின் ஊடாக 140 அடி மதில் 2022 இல் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இத்துடன் பாடசாலையின் நிலப்பரப்பினை அதிகரிக்கும் முகமாக கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் பெற்றோர்கள் இணைந்து $3^{1}/_{4}$ பரப்புக் காணியை வழங்கிய வேளை திரு.திருமதி.சுவேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினர் அரைப்பரப்புக் காணியினை தர்ம சாதனமாக வழங்கியமை பாடசாலையின் இன்னொரு கட்ட வளர்ச்சியாக காண முடிகின்றது.

பௌதிக வள வளர்ச்சியுடன் நின்று விடாது கல்வியில் அடுத்த கட்ட வளர்ச்சியினை ஏற்படுத்தியதை காண முடிகின்றது. அதாவது 2017ல் தரம் 10 ஆரம்பிக்கப்பட்டு 2018ல் தரம் 11 ஆரம்பிக்கப்பட்டு க.பொ.த சாதாரண தரத்துக்கு முதலாம் அணி மாணவர்கள் தோற்றி 90% சித்தியினைப் பெற்றார். தொடர்ந்தும் க.பொ.த (சா/த) மாணவர்கள் சித்திய வீதத்தில் 87.5% க்குக் குறையாது சாதனையினைப் புரிந்து வருவதுடன் 2020ம் ஆண்டு செல்வி.சி.தேநிலா முதலாவதாக உயர் பெறுபேறாக 8A, C பெற்று சித்தியடைந்தார். எமது பாடசாலை மாணவர்கள் அதிகளவிலானவர்கள் உயர்தரத்தில் கணித, விஞ்ஞானப் பாடங்களைத் தெரிவு செய்து கற்பதனைக் காணமுடிகின்றது. இது எமது பாடசாலைக் கல்வி வளர்ச்சியில் உச்சத்தினை எடுத்துக் கூறுகின்றது. எமது பாடசாலையில் 2018ல் க.பொ.த (சா/த) கற்ற முதலாம் அணி மாணவர்களில் மூன்று பேர் பல்கலைக்கழகம் தெரிவாகியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இக்காலப் பகுதியில் ஆரம்பக் கல்விப் பிரிவிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை சித்தி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு காண முடிகின்றது. 2014ம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் இரண்டு மாணவர்கள் பெற்றனர். இதே போன்று 2018ல் செல்வி.உ.நிலவரசி அவர்கள் 192 புள்ளியினைப் பெற்று சாதனை படைத்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார். இதனை விட 2020ம் ஆண்டில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெறுபேறு பெறும் மாணவர்களில் இன்னும் ஒரு படி வளர்ச்சியாக மூன்று மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று பாடசாலை வரலாற்றில் சாதனையை நிலை நாட்டினர். இவ்வாறாக ஆரம்பகல்வியின் வளர்ச்சியினைக் காணமுடிகின்றது.

கல்வி வளர்ச்சியுடன் மட்டுமல்லாது இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் சாதனை படைத்ததனைக் காண முடிகின்றது. மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி உயரம் பாய்தலில் செல்வி.தி.நேயநிலா, செல்வி.சூ.பவித்திரா இருவரும் தேசிய போட்டியில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. கட்டுரையாக்கத்திறன் போட்டியில் செல்வி.பா.சுகிர்தனா தேசிய ரீதியில் 2ம் இடத்தினைப் பெற்று சாதனையை நிலைநாட்டினார். இவர்களோடு செல்வி.உ.நிலவரசி விஞ்ஞான வினாடிவினாப் போட்டியில் மாகாண மட்ட ரீதியில் முதலாவது நிலையினைப் பெற்று பாடசாலைக்கும், தனக்கும் பெருமையைச் சேர்த்துக் கொண்டார். இதனைவிட எமது மாணவச் செல்வங்கள் கோட்ட ரீதியாகவும், வலயமட்ட ரீதியாகவும் நடைபெறும் போட்டிகளில் பல மாணவர்கள் வெற்றி பெற்றமை இப் பாடசாலையின் இணைபாட விதான வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது.

இதனூடாக கிராமத்துடனான உறவு, புலம்பெயர் உறவுகளுடனான தொடர்பு, அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் இடைத் தொடர்பு, நலன்விரும்பிகளினுடைய தொடர்பு என்பவற்றின் ஊடாக அவரின் ஆளுமைப் பண்பும் தற்துணிவும் நல்ல நிர்வாக ஆளுமைப் பண்பும் ஒருங்கே இணைந்ததே பாடசாலையின் வளர்ச்சியாகக் காணப்படுகின்றது.

இவ்வாறாக அதிபர் ஆசிரியர் குழாத்தின் அயராத முயற்சியுடன் மாணவச் செல்வங்களின் துடிப்பான செயற்பாடும் இணைந்து பல நல்ல விளைவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கி வருகின்றன. பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு பழைய மாணவர் சங்கம் என்பன அவ்வப்போது காட்டிய உற்சாகமும் ஒத்துழைப்பும் மேலும் பக்க பலமாக இருக்கின்றன. இவ்வகையில் இப் பாடசாலை மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டும் எனவும் மாணவர்கள் நல்லொழுக்கம் உள்ளவர்களாகவும் வளர வேண்டும் எனவும் ஆளுமை கொண்ட அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு, பழைய மாணவர்கள், புலம்பெயர் உறவுகள், நலன்விரும்பிகள் சகிதம் அறுபதாவது ஆண்டு விழாவை கொண்டாடுவதில் பெருமையடைகின்றோம்.

"வாழ்க் கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலை
வளர்க மேன்மேலும் அறிவு
மலர்க எம் சிறார்கள் ஒழுக்கமும் கல்வியும்"

**பாடசாலைச் சமூகம்.**



## விநாயகர் பாடல்

### பல்லவி

ஆறிரு கரத்தான் அண்ணன் - ஐந்து கரத்தான்
ஆனைமுகத்தான் அடியவர்க்கு அருள் புரிவான்

### அனுபல்லவி

நாளும் கோளும் கெடுதல் செய்யினும் - உம்மை
நாடி வருவோர்க்கு நலம் தரும் நாயகா

### சரணம்

பெற்றவரை உலகெனச் சுற்றி வந்து மாங்கனி
பெற்ற பெரும்பேழை வயிற்றோன் - தினம்
வேண்டுவார் வேண்டுவதை ஈய்ந்தருளும் - பள்ளி
வேப்பமரத்தடி அமர்ந்த வேழமுகத்தவனே
(ஆறிருகரத்தான்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துப்பாமாலை

தண்ணொளி பொருந்திய தர்மக்கேணியூரில்
தரணிக்கோர் எடுத்துக்காட்டாம் எம் கல்விக்கூடம்
கண்ணெனப் போற்றும் கலைத்தாயே..
திண்ணிய நெஞ்சுடன் திகழ்திடுவாய்
பண்ணார்ந்து பாரினில் பேர் புகழோங்கி
பல்லாண்டு வாழி வாழி!

கற்ற கல்விதனை கசடறக்கற்று
கல்வி மான்களை உருவாக்கிய
வற்றாத கல்வியின் ஊற்றே
நற்பெயருடன் நாடோறும்
பொற்புடனும் பொலிவுடனும்
பெரும்புகழ் பெற்று வாழி!

தித்திக்கும் தேனமுதே தெவிட்டாது
புத்திக்கு வழிகாட்டும் முத்துமாரி
நித்திலத்தில் இருந்து காப்பதனால்
எத்திசையும் மாண்புற்று
பல நூறு ஆண்டுகள்
பத்திரமாய் முத்தமிழோங்கி வாழி!

செந்நெல் வயல்களும் தென்னம் சோலைகளும்
கன்னல் கனிகளும் சூழ
எண்ணையும் எழுத்தையும் பண்ணையும்
கண்ணெனத் காத்து நாளும்
எண்ணிய துறைகளெல்லாம் ஏற்றமுடன்
என்றொன்றும் மேலோங்கி வாழி!

பன்னீரைந்து ஆண்டு அகவைதனில்
பன்னுசீர் கவியுறு கல்விதனை
முன்னின்று முறையாக இன்னும்
பன்னூறு ஆண்டுகள்
பவள விழா, அமுதவிழா, நூற்றாண்டு விழா
காண்பாய் வாழி! வாழி!!

**இதழாசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரம்பக்கல்வி மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனிஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடைநிலைப் பிரிவு மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகாமைத்துவக் குழு



பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பப் பிரிவு மாணவர்களின் உளநலம் பேணுதலில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் செயற்பாடுகள்

அறிமுகம்

இன்றைய பாடசாலை மாணவர்கள் மத்தியில் உளச்சீர் குலைவுடன் தொடர்புபட்ட பல பிரச்சினைகள் நாளாந்தம் தோன்றிய வண்ணமுள்ளன. வீட்டில், பாடசாலையில், நாட்டில் என்று எங்கும் குழப்பங்களும் சிக்லிகளும் மலிந்த நிலையில் அவர்கள் மத்தியில் பதட்டம், மனப்பதகளிப்பு, வெறுப்பு, விரக்தி, கவலை போன்றவைகள் அவர்களின் கல்வி அடைவு மட்டங்களிலும் தாக்கங்களை ஏற்படுத்தி விடுகின்றன. மாணவர்களின் உளநலம் என்பது முக்கியமாக ஆசிரியர்களாலும், பெற்றோர்களாலும் அவதானிக்கப்பட வேண்டியதொரு விடயமாகும். ஆனால் பிள்ளைகளின் பரீட்சை அடைவு மட்டம் என்ற ஒன்றையே கருத்திற் கொண்டு ஆசிரியர்கள், பெற்றோர்கள் செயற்படுகின்றார்களே ஒழிய அவர்களின் உளச் சுகாதாரம் பற்றிய எண்ணம் சிறிது கூட இல்லாமல் இருப்பது எதிர்காலத்தில் ஏற்படும் சிறுவர் சார்ந்த ஆபத்தை வளர்த்து விடுவதாகவே அமைகின்றது.

உளநலம் என்பது தனியான ஒரு விடயத்தை மட்டும் குறிப்பிடுவதில்லை. ஆரோக்கியமான உடல்நிலை, ஆரோக்கியமான சமூகச் சூழல், ஆரோக்கியமான ஆன்மீக ஈடுபாடு என்பவற்றோடு தொடர்புடையதாகவே இருக்கின்றது. உளநலம் சிறப்பாக அமைகின்ற பிள்ளை தனது வயதிற்கு ஏற்றதாகத் துலங்கவும், செயற்படவும் முடிகின்றது. பிள்ளைகளின் ஒவ்வொரு தொகுதியினதும் இயக்கப்பாடுகள் ஆரோக்கியமாக அமைகின்ற போது பிள்ளைகள் உளநலமுடன் இருக்கின்றார்கள் என அறியமுடிகின்றது.

உளநலம் - விளக்கம்

உடல் நலமாக இருப்பது போல் உளமும் நலமாக இருத்தல் அவசியமாகும். நலமாக இருத்தல் என்னும் போது உடல் சார்ந்த நிலைமைகளையும் தாண்டி உளம் சார்ந்த, சமூகம் சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த நிலைமைகளையும் விபரிப்பதாகவே அமைகின்றது. உடல், உளம், சமூகம், ஆன்மீகம் என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளதாக அமையும் போது அவற்றில் ஒன்றில் ஏற்படும் ஒரு பிரச்சினை ஏனையவற்றையும் பாதிப்பதாக அமைகின்றது. ஆகவே உளத்தை மகிழ்வுடன் வைத்திருத்தல் பிள்ளைகளை எதிர்காலத்தின் அபாயத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றும்.

உள நலம் என்பது எம்மால் நேரடியாகக் காணமுடியாது. ஆனால் அதே நேரத்தில் அதற்குப் பரிகாரம் தேட வைத்தியர்களை நாடிச் செல்கின்றோம். உடலில் ஏற்படும் நோய்களை உடனடியாகக் கண்டு விட்டலாம். ஆனால் உள நலமில்லாத நிலையில் அவர்கள் சோர்ந்து போகின்றார்கள். பிள்ளைகளினது சிந்தனை, செயற்பாடு, உணர்ச்சி வெளிப்பாடு, நடத்தைக் கோலங்கள், கற்றல் விருத்தி, ஆக்கத் திறன் போன்றவைகளில் பிள்ளைகள் சிறப்பாக இயங்கும் நிலையானது பிள்ளைகளின் சிறந்த மனநிலையைக் குறித்து நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தின் செயற்பாடுகள், அதன் மூலமான வெளிப்பாடுகள் பலவாகும். இதன்படி அவர்களின் கற்றல் செயற்பாடுகளும் அவர்களது உளநலத்தில் தங்கியிருக்கின்றன எனலாம். கற்றலுக்கான ஆர்வம், உந்துதல், கருத்தூன்றல், கிரகித்தல், ஞாபகத்தில் இருத்தல், நுண்ணறிவு விருத்தி எனக் கற்றலின் எல்லா நிலைகளும் ஒழுங்காக நடைபெறுவதற்கு மாணவர்களது உளநலம் சிறப்பாக இருக்க வேண்டும். மாறாக உளநலப் பிரச்சினைகளை உடைய பிள்ளைகள் பெரும்பாலும் மற்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்துபவர்களாகவே இருப்பார். ஏனைய மாணவர்களைக் குழப்புதல், கற்பித்தல், செயற்பாடுகளில் ஆசிரியர்களுடன் ஒத்துழையாமை, சமூக மயமாகும் தன்மைகள் குறைவாக இருத்தல் போன்ற வெளிபாடுகளைக் காட்டுவர்.

தற்போதுள்ள கல்வி முறைகள் பரீட்சையையும் சிறந்த பெறுபேறுகளையும் முக்கியத்துவப் படுத்துவதனால் மாணவர்களுக்கு ஆரம்ப வகுப்புக்களில் இருந்தே மன அழுத்தம், மனக்குலைவு போன்றவைகள் ஏற்படுகின்றன. பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களின் உளர்ந்த பெறுபேற்றை நோக்கமாகக் கொள்கின்றார்களேயல்லாமல் பிள்ளைகளின் உளநலத்தைக் கவனத்திற் கொள்வதில்லை. இதனால் எல்லாப் பிள்ளைகளும் ஒரே அளவான உளநலத்தைக் கொண்டிருப்பார்கள் என எண்ணுவது தவறாகும். ஆளுக்கு ஆள் இது வேறுபடலாம்.

பிள்ளைகளின் உளநலத்திலே இரு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

1. பரம்பரைக் காரணிகள்
2. சூழற் காரணிகள்

பிள்ளைகயின் வளர்ச்சியில் பரம்பரைக் காரணிகளின் செல்வாக்கு ஓரளவு இருக்கின்ற போதிலும் இவை பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று கண்டால் அதற்குரிய சிறந்த சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோர்கள், ஆசிரியரகளினது கடமையாகும். இயலுமான அளவு பிள்ளைகளின் உள நலத்தை மேம்படுத்த பெரியோர்கள் முயற்சி எடுக்க வேண்டும். அதீதமான மனக்குழப்பம் உள்ள பிள்ளைகளை ஆசிரியர்கள் இனங்கண்டால் பெற்றோர்களிடம் கலந்தாலோசித்து உளவியல் நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுதல் அவசியமாகும்.

## மாணவர்களின் உளநலப் பாதிப்புக்கான காரணம்

இன்றைய அவசரமான பதட்டம் நிறைந்த உலகிலே பிள்ளைகள் நாளாந்தம் பல நெருக்கடிகளுக்கு ஆளாகுகின்றார்கள். சில பிள்ளைகள் தமது குடும்பங்களில் இருந்தே உள நெருக்கீட்டின் தாக்கத்தினால் அவதிப்படுகின்றனர். பெரியவர்கள் தம்மைப் பார்ப்பதனால் பிள்ளைகளைப் பிள்ளைகளாகப் பார்க்காமல் பெரியவர்களாகவே நோக்குகின்றார்கள். உண்மையில் ஒரு பிள்ளையின் ஆரோக்கியமானதும் மகிழ்ச்சிகரமானதுமான வளர்ச்சிக்குக் குடும்பமே முக்கியமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்படுவதனால் பிள்ளைகளின் உளநலத்தில் குடும்பத்தின் பங்களிப்பு அதிகமானது எனலாம். எனவே எல்லா விடயங்களும் ஆரம்பிக்கும் இடம் குடும்பம் எனலாம். அவ்வகையில் பிள்ளைகளின் உளநலக் கோளாறுக்கு முக்கியமான சில காரணிகள் உள்ளன.

1. குடும்பம் :-

குடும்பம் கூட்டுக் குடும்பம், தனிக் குடும்பம் என்று அழைக்கப்படும் நிலையில் இன்று பெரும்பாலும் தனிக்குடும்பங்களே பரவலாகக் காணப்படுகின்றன. இக் குடும்ப அமைப்புக்கள் நாளாந்தம் பல பிரச்சினைகளைச் சந்தித்தே வருகின்றன. குடும்பங்களின் பிரச்சினைக்கு முக்கிய காரணம் பொருளாதாரப் பிரச்சினையாகும். பல குடும்பங்களின் வறுமை காரணமாகப் பிள்ளைகள் மத்தியில் கல்விக்கு பெரும் சவால் ஏற்பட்டு விடுகின்றது. இத்தகைய குடும்பங்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. பெற்றோர்களின் போதைவஸ்த்துப் பாவனை, விவாகரத்துப் பெற்று பெற்றோர், ஒன்றுக்கு மேற்பட்ட திருமண உறவு, அளவுக்கதிகமான பிள்ளைகள் போன்ற பல காரணிகளால் பிள்ளைகள் மத்தியில் கல்வியில் பல பின்னடைவுகள் ஏற்படுகின்றன. ஆகவே பிள்ளைகளின் கல்வியைக் கருத்திற் கொண்டு பெற்றோர்கள் வேண்டத்தகாத பழக்கங்களைக் கைவிட வேண்டும்.

மாறாக ஆரோக்கியமான குடும்பம் ஒன்றில் குடும்ப அங்கத்தவர்கள் மத்தியில் அன்பும், ஆதரவும் மிகுந்து காணப்படும். குடும்பத் தலைவன், தலைவி என்ற உறவு முறையின் கீழ் பிள்ளைகள் செயற்படும் போது ஒரு கட்டுக் கோப்பான அமைப்பாக அது விளங்கும். குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக்கு மற்றவர் ஆதரவாக விளங்குவர். குடும்ப அங்கத்தவர்களின் உணர்வுகளைப் புரிந்து வாழ ஏனையோர் முற்படுவார். குடும்பத் தலைவனிடம் தலைமைத்துவப் பண்புகள் காணப்படும் அதே வேளையில் அவர் ஏனையோருக்கு முன்னுதாரணமாக நடக்க முற்படுவார். இவ்வாறான குடும்ப அமைப்பில் இருந்து வரும் பிள்ளையானது கல்வியில் ஆர்வமாக இருக்கும் அதே வேளையில் தேவையற்ற மன உளைச்சல்களுக்கு ஆளாகாமல் இருப்பதோடு மகிழ்ச்சியாக இருக்கும். மகிழ்ச்சியான தருணங்களில் அதன் கல்வி நிலையில் நல்ல மாற்றம் ஏற்படலாம்.

எனவே குடும்ப அமைப்பு என்பது பிள்ளைகளைப் பொறுத்த மட்டில் மிக முக்கியமானது. பொருளாதார நிலையில் பின்னடைவு அடைந்த குடும்பமாக இருந்தாலும் பிள்ளைகளின் அன்புத் தேவை நிறைவு செய்யும் அளவுக்குப் பெற்றோர்கள் மத்தியில் பாசப் பிணைப்பு இருந்தால் பிள்ளைகளுக்கும் வாழ்க்கையில் ஒரு அர்த்தம் தென்படும். இலட்சிய வாழ்க்கை ஒன்றை வாழ வைப்பதற்கான

வழிகாட்டல் குடும்பத்தில் இருக்கும் போது பிள்ளைகளும் அவ்வழியைப் பின்பற்றுவார். ஆயினும் சில குடும்பங்களில் பெற்றோர்கள் மத்தியில் எதுவிதமான மேம்பட்ட சிந்தனைகள் இல்லாத பட்சத்தில் பிள்ளைகளின் வளர்ச்சி முற்றாகத் தடைப்படுகின்றது. அவர்களுக்குப் போதியளவு அன்பு, போசாக்கு, பாதுகாப்பு போன்றவைகள் வழங்கப்படுவதில்லை. இதனால் பிள்ளைகளின் குடும்பத்தை அறிந்து ஆசிரியர்கள் பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்குவதோடு அவர்களுடனான தொடர்பைப் பேணிக் கொள்ளல் அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளரீதியாகப் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள் ஆதரவினை வழங்குதல் அவசியமாகும். பிள்ளைக்கு ஏற்படும் பாதிப்பினை அறிந்து பெற்றோருடன் தொடர்பை ஏற்படுத்தலாம். சில நிறுவன அமைப்புக்கள் ஊடாகப் பிள்ளையின் பெற்றோருடன் தொடர்பை ஏற்படுத்தி சில பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்டலாம். இதனால் ஆசிரியர்கள் இவ் விடயத்தில் கவனம் எடுத்து பிள்ளையின் உளநலத்தை மேம்படுத்த முன்வர வேண்டும். ஆகவே ஆசிரியர்கள் இதனைச் செய்ய வேண்டும் என்று முன்வர வேண்டும்.

1. குடும்ப ஒற்றுமை பற்றியும் அதன் நன்மை பற்றியும் பெற்றோருக்கு விளக்கமளித்தல்.

2. வகுப்பிலும் பாடங்கள் கற்பித்திடும் வேளையிலும் குடும்பம் தொடர்பான நல்ல கருத்துக்களை முன்வைத்தல்.

3. குடும்ப அங்கத்தவர்கள் மத்தியில் நல்ல உறவுகளைக் கட்டியெழுப்ப ஆலோசனை வழங்குதல்.

4. பிள்ளைகள் தமது பெற்றோரை மதித்து நடக்க வழிகாட்டல்.

5. குடும்பத்தின் கூட்டுச் செயற்பாடுகளுக்கு ஊக்கம் அளித்தல்.

6. தேவையற்ற ஆடம்பரச் செலவுகளின் விளைவுகள் பற்றி விளக்குதல்.

7. சில இடங்களில் தனது தனிப்பட்ட செல்வாக்கைக் கூட பயன்படுத்தி குடும்பத்தின் சில தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தல்.

இவ்வகையில் ஆசிரியர்கள் பாடசாலையில் கற்பித்தலோடு மட்டும் நின்று விடாது குடும்பத்தின் நிலையை அறிந்து அதற்கேற்ப ஆலோசனை வழங்கலும் முக்கியமானது. எனவே சிக்கல்களிலிருந்து பிள்ளைகளை மீட்டெடுக்க வேண்டும்.

### 2. பிள்ளைகளிடம் ஏற்படும் பய உணர்வுகள் :-

பயம் என்பது சிறியவரகளுக்கு மட்டுமல்லாமல் பெரியவர்களுக்கும் ஏற்படும் ஓர் உணர்வு ஆகும். ஆனாலும் சில ஆபத்துக்களில் இருந்து எம்மை விடுபட வைப்பதும் எம்மிடமுள்ள பய உணர்வு ஆகும். எனவே இப் பயம் சில இடங்களில் தவிர்க்க முடியாததாகும். உதாரணமாக இரவில் ஒரு திருடனைக் கண்டால் அல்லது ஒரு பாம்பைக் கண்டால் ஏற்படும் பயம் அர்த்தமுள்ளது.

சில பிள்ளைகள் பாடசாலையின் முதல் நாளில் பயந்து அழுவார்கள். இதுவும் தவிர்க்க முடியாதது. ஆனாலும் பாடசாலை என்றவுடன் நாளாந்தம் பயம் ஏற்படுதல் ஆபத்தான ஒரு விடயமாகும். அவர்களை அறியாமலே அவர்களிடம் ஒரு வித பய உணர்வு இருந்து கொண்டே இருக்கும். காரணம் இல்லாமல் பயப்படுதல், அழுகை என்பன பிள்ளைகளின் மன உளைச்சல்களை மேலும் அதிகமாக்கும். பயத்தினால் பாதிக்கப்படுவதனால் பதட்டப்படுபவர்களாகவும் அநேகமான நேரங்களில் எல்லாம் சமநிலை இழந்தவர்களாகவும் இருப்பார்கள். எனவே பிள்ளைகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையற்ற பயத்தில் இருந்து விடுவிக்கப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அவர்களைச் சரியான முறையில் வழிநடத்த வேண்டும்.

வீட்டில் பெற்றோர்களின் செயற்பாடுகளும் பிள்ளைகளைப் பயம் என்ற உணர்வுக்குள் தள்ளிவிடுகின்றது. தேவையில்லாத விடயங்களுக்கு எல்லாம் பிள்ளைகளைப் பயமுறுத்தி வைக்கின்றார்கள். பயமுறுத்தி எதனையும் பிள்ளைகளைக் கொண்டு செய்விப்பது பெற்றோர்களின் ஒரு செயலாகும். குழந்தைப் பருவத்தில் உணவு ஊட்டுவதில் இருந்து பயமுறுத்த ஆரம்பிக்கப்படுகின்றது. பிள்ளைகள் சாப்பிட மாட்டேன் என்று அடம்பிடிக்கும் போது பெற்றோர்கள் பயமுறுத்தி உணவு உண்ண வைக்கின்றார்கள். இப்பழக்கம் நிரந்தரமாகி விடும். இதனால் சிறு வயதிலேயே பிள்ளைகள் பயப்பட ஆரம்பிக்கின்றார்கள். இது மனதில் ஒரு வித பதட்டத்தைப் பிள்ளைகள் மத்தியில் ஏற்படுத்தி விடுகின்றது. அத்துடன் பாடசாலையில் சக பாடிகள் ஒன்று சேர்ந்து பயங்கரமான கதைகளை கதைத்தல், பேய், பிசாசு என்ற மாயைகளை ஏற்படுத்துதல், இரவில் பயங்கரமான கனவு கண்டு அலறிப் பயப்படுதல் போன்றவைகள் எல்லாம் பிள்ளைகள் மத்தியில் மனக் குலைவை எற்படுத்தி விடுகின்றது. இவை எல்லாம் மனம் சார்ந்த பிரச்சினைகளே. ஆதலால் பிள்ளைகளை உடல்,உள ரீதியாக உறுதியுள்ளவர்களாக மாற்றியமைத்தல் பெற்றோர்கள் ஆசிரியர்களது கடமையாகும்.

சில பிள்ளைகள் மத்தியில் அவர்களை அறியாமலேயே ஒருவித பய உணர்வு ஏற்பட ஆரம்பிக்கும். இது நாளடைவில் அதிகமாகி விடும். இவ்வாறான பிள்ளைகள் மற்றவர்களுடன் பழகுவதை இயலுமான வரை தவிர்த்து விடுவார்கள். பாடசாலையிலும் கற்றலின் போது தெரிந்த விடயங்களையும் கூறாது பேசாமல் இருப்பார்கள். இவர்களுக்கு ஏதோ ஒரு விதமான அச்சுறுத்தல் ஏற்பட்டு இருக்கலாம். இல்லையேல் தமக்குத் தாமே ஒருவிதமான பயம் என்ற மாயையை உருவாக்கி இருக்கலாம். இதனால் இவ்வகையில் பாதிக்கப்படும் சிறுவர்களுக்கு பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் ஆதரவான வார்த்தைகள், செயற்பாடுகள் மிக மிக அவசியமாகும். பாடசாலையில் ஆசிரியர்கள் இவ்வாறான பிள்ளைகளின் தேவைகளை உணர்ந்து அவர்களுக்கு ஆதரவான வார்த்தைகளைக் கூறி சூழலுக்கு ஏற்ற வகையில் இசைவாக்கம் அடைந்து தமது பயத்தை நீக்கி வாழப் பக்கபலமாக இருக்க வேண்டும். இவர்களில் பலர் பல சந்தர்ப்பங்களில் பெற்றோரின் உதவியின்றி தனிமைப்படுத்தப்படல், ஏதோ ஒரு வகையான அச்சுறுத்தும் நிகழ்வு அல்லது ஒரு அசம்பாவிதம் ஏற்பட்டிருத்தல் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகியிருத்தல் என்பவற்றிற்கு ஆளாகியிருப்பார்கள். ஆகவே எதற்கும் தேவையற்ற பயம் ஏற்பட்டிருக்கும், இதனால் இவர்கள் தமது பயத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

சிறுவர் துஷ்பிரயோகம் :-

இன்றைய கால கட்டத்தில் அதிகரித்து வருகின்ற சிறுவர் மீதான துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களை மிகவும் அதிகமோகப் பாதித்து வருகின்றது. இத்தகைய துஷ்பிரயோகங்கள் காரணமாகச் சிறுவர்கள் உடல் - உள ரீதியாகத் தாக்கமடைந்து வருவதோடு கல்வியிலும் மோசமான பின்னடைவைச் சந்தித்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றனர். இதனால் கலாச்சார, பண்பாட்டு விழுமியங்கள் மிக மோசமாகப் பாதிப்படைந்து வருகின்றன. இத்தகைய துஷ்பிரயோகங்கள் காரணமாகப் பிள்ளைகள் மட்டுமல்லாமல் பெற்றோர்களும் பாரிய மன உளைச்சல்களுக்கு ஆளாகின்றார்கள்.

யாழ் மாவட்டத்தில் இத்தகைய சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்வதனைக் காணமுடிகின்றது. பொதுவாகக் வடக்கில் போருக்குப் பின்னரான சூழலில் இவை அதிகரித்துச் செல்கின்றமையைப் புள்ளி விபரங்கள் எடுத்துக் கூறுகின்றன. சிறுவர் துஷ்பிரயோகம் என்பது பல்வேறுபட்ட பிரிவுகளைக் கொண்டது.

உடல் ரீதியானது

உள ரீதியானது

என்ற வகையில் பிரித்து நோக்கத்தக்கது. பிள்ளையின் உடலுக்கு ஊறு விளைவிப்பது பாடசாலைககளில் தண்டனை வழங்குவது, அதிகளவு சுமையான வேலைகளில் ஈடுபடுத்துவது போன்ற செயற்பாடுகள் எல்லாம் உடல் ரீதியானதாகும். உடல் ரீதியாகப் பிள்ளைகளுக்கு ஊறு விளைவிக்கும் பல செயற்பாடுகள் பாடசாலையில் பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்றது. சிறுவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுதல், சிறுவர் துஷ்பிரயோகம் என்ற வகையில் அடங்குகின்றன. சில பாடசாலைகளில் பிள்ளைகள் ஆசிரியர்களால் உதாசீனம் செய்யப்படுகின்றனர். தேவையில்லாத திட்டுக்கள், தண்டனைகள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மத்தியில் ஆசிரியர்கள் பெற்றோர்களின் இத்தகைய செயற்பாடுகள் பிள்ளைகள் மத்தியில் மனக் குலைவை ஏற்படுத்த விடுகின்றன. தொடர்ச்சியான இத்தகைய செயற்பாடுகளினால் பிள்ளைகள் உளவியல் தாக்கங்களுக்கு ஆளாகுகின்றார்கள். இதனால் அவர்களுக்கு சரியான முறையில் ஆலோசனைகள், வழிகாட்டல்கள் இடம் பெற வேண்டும்.

இவற்றை விட வீட்டில் பெற்றோர்களின் கடுமையான போக்கு, பிள்ளைகளுக்கு அடித்தல், ஏசுதல், அதிகமான வேலைகளைச் சுமத்தி விடுதல், சிறுவர் உழைப்பை அங்கீகரித்தல், கல்வியை நிறுத்தி விடுதல் போன்ற பல செயற்பாடுகளால் பிள்ளைகள் ஒருவிதமான மனச் சோர்வுடனும், மன உளைச்சலுடனும் காணப்படுகின்றார்கள். சில சமூகங்கள் மத்தியில் பிள்ளைகள் வேலைக்குச் உழைத்துக் குடும்பத்தினருக்கு தம் உழைப்பை வழங்குவதையும் காண முடிகின்றது. இவை எல்லாம் அடிப்படை உரிமை மீறலாகும். இதனால் பிள்ளைகள் தமது கல்வியில் அக்கறை காட்ட முடியாத நிலை தோன்றுகின்றது. ஆகவே குடும்பத்தில் பிள்ளைகளது கருத்துக்களுக்கு மதிப்பளித்து அவர்களது பிரச்சினைகளை விளங்கி அவர்களை மனச் சோர்வுக்கு ஆளாகாது பாதுகாத்தல் வேண்டும். சில பெற்றோர்கள் மத்தியில் இத்கைய பிரச்சினைகள் அவர்களால் விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கின்றது. எனவே ஆசிரியர்கள் இப் பிரச்சினைகளை இனம் கண்டு பாதிப்படைந்த பிள்ளைகளுக்கு வழி காட்டி விடுதல் அவசியமானதாகும்.

### ஆசிரிய மாணவ உறவு முறையில் விரிசல்

மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தலுக்கு வழி கோலுபவர்கள் ஆசிரியர்களாவர். ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பிப்பவர் மட்டுமல்லாமல் அவர்களுடைய ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றத்தின் படிக்கற்களாகவும் விளங்க வேண்டும். அறிவாகிய ஒளியைப் பரப்புவதனால் இவர்கள் ஞான விளக்குகள் என்று பிளேட்டோவினால் வர்ணிக்கப்பட்டவர்கள். இத்தகைய ஆசிரியர்கள் பல்வேறு நடி பங்குகளைத் தாங்குபவர்கள் பிள்ளைகளின் நல்வாழ்விற்கான வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் மேம்படுத்துவதற்குப் பக்கபலமாக இருப்பது ஆசிரியர்களது அன்பும் அரவணைப்புமேயாகும். பெற்றோர்களை விட்டுப் பிரிந்து பாடசாலைக்கு வரும் பிள்ளைகளுக்கு பெற்றோராக இருந்து அவர்களை வழிப்படுத்த வேண்டும். இதனால் தான் பிள்ளைகளின் முதலாவது ஆசிரியர்களாகிய பெற்றோர்களுக்கும் இரண்டாவது பெற்றோர்களாகிய ஆசிரியர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு அவசியம் எனப்படுகின்றது.

ஆசிரிய மாணவ உறவு எப்போதும் நெருக்கமாக இருக்க வேண்டும். மாணவர்களின் கற்றல் வளர்ச்சிக்கு இது ஒரு முக்கியமான காரணி ஆகும். ஆசிரிய மாணவ உறவில் விரிசல் நிலை ஏற்படும் பட்சத்தில் பிள்ளைகளுக்குக் கல்வியில் ஆர்வம் குறையும். ஆசிரியர்கள் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதில் விழிப்புணர்ச்சியும் அவதானமும் உடையவர்களாக இருக்க வேண்டும். மாறாக சில ஆசிரியர்கள் மாணவர்களுடன் தமது உறவை ஒரு அதிகாரத் தொனியில் வைத்திருப்பார்கள். பிள்ளைகளைப் பயமுறுத்தி அச்சமான ஒரு சூழலில் வைத்திருப்பதையே அவர்கள் விரும்புவார்கள். அடக்கியாள்பவர்களாக ஆசிரியர்கள் இருப்பது சரியானதல்ல. பிள்ளைகளை அன்புடன் அணுகி அவர்கள் தேவைகளை நிறைவேற்றுபவர்கள் ஆசிரியர்களாவர்.

இன்று ஆசிரிய மாணவ உறவில் நெகிழ்வுத்தன்மை காணப்படுகின்ற போதிலும் சில ஆசிரியர்கள் அதிகாரத் தன்மை அதிகமுள்ளவர்களாக மாணவர்களால் அணுக முடியாதவர்களாக உள்ளார்கள். இதனால் மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்ட முடியாதவர்களாக இருப்பதோடு அவர்களுடைய உளச் சுகாதாரம் பாதிப்படைகின்றது. இதனால் கல்வியின் அடைவு மட்டம் குறைவுபடுகின்றது. ஆகவே பல்வேறு குடும்ப அமைப்பில் இருந்து பல பிரச்சினைகளோடு பாடசாலைக்கு வரும் பிள்ளைகளை அன்பு காட்டி அரவணைத்துப் பாடம் புகட்டும் போது பிள்ளைகளின் உளநலம் சிறப்படைகின்றது.

## சமூகப் பொருத்தப்பாடின்மை

பிள்ளைகளின் உளச் சுகாதாரம் பாதிப்படைவதில் அவர்கள் சமூகப் பொருத்தப்பாடு காணாமல் இருப்பதும் முக்கிய காரணியாகின்றது. சமூகம் என்பது நாளாந்தம் பலவகை மாற்றங்களுக்குள்ளாகின்றது. இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால் சமுதாயத்தில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. அத்துடன் மக்களது அறிவு நிலை, சமய நம்பிக்கைகள், சடங்குகள் பின்பற்றப்படும் மரபுகள் போன்றவற்றிலும், நடகம், இலக்கியம் முதலிய நுண்கலை வடிவங்களிலும் மக்களின் இரசனையிலும் ஏற்படும் மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டும் சமூக மாற்றம் ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே ஒரு சமூகத்தில் பிறக்கின்ற ஒரு பிள்ளையானது எக் காரணம் கொண்டும் சமூக நியமங்களில் இருந்து விலகி நடக்க முடியாது. ஒரு பிள்ளையின் வளர்ச்சியில் சமூகத்தின் பல்வேறு விதமான பங்களிப்புக்கள் உண்டு. இதனால் பிள்ளைகளைப் பொறுத்த வரையில் சமூகம் என்பது முக்கியமானதொரு விடயமாகும். ஆகவே அச் சமூகத்தோடு பொருத்தப்பாடு காணாது விட்டால் பிள்ளைகள் மத்தியில் பல வேறுபட்ட மனக்குழப்பங்கள் ஏற்படுவதற்கு இடமுண்டு.

இவ்வகையில் உளநலம் பாதிப்படையும் போது பிள்ளைகளின் கற்றல் வேகம் குறைவடையும். எனவே பாடசாலைச் சூழலானது பிள்ளைகளது கற்றல் செயற்பாடுகளில் மாத்திரமன்றி உளநல விருத்தியிலும் உடநல விருத்தியிலும் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆகவே பாடசாலைச் சூழலானது பிள்ளைகளது உளநல விருத்திக்கு உகந்ததாகக் காணப்படும் போது அவர்களது மனமும் கற்றற் செயற்பாடும் இயல்பாக விருத்தி நிலையை அடையும். எனவே சமூக மயப்படுத்தப்பட்ட பிள்ளைகளிடம் சில இயல்புகள் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

- ஆசிரியர் கூறும் அறிவுறுத்தல்களுக்கு இணங்கிச் செயற்படுவதுடன் தாமாகவும் சில செயல்களைச் செய்ய முன்வருவார்.
- ஆசிரியரை விருப்புடன் ஏற்றுக் கொள்வது மட்டுமல்லாமல் ஆசிரியர்களோடு பரஸ்பரம் கலந்துரையாடித் தமது சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வார்.
- தமது கற்றற் செயற்பாடுகளை மகிழ்ச்சியோடு முன்னெடுப்பார்கள்.
- பாடசாலையின் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் அக்கறையுடன் செயற்படுவார்கள்.
- எதிலும் திருப்தி அடைந்து கொள்வார்கள்.

இவ்வகையில் மாணவர்கள் மத்தியில் இன்று ஒரு சமூகமாகப் பங்கு பற்றும் நிலை காணப்படுகின்றது.

எனவே மாணவர்கள் ஏனைய மாணவர்களோடு சேராமல் தனித்து ஒதுங்கியிருக்கும் நிலையில் அவர்களது உளநலம் பாதிப்படைகின்றது. இந்நிலையில் அவர்களைச் சமூகப் பொருத்தப்பாடு உடையவர்களாக மாற்றி அவர்களது உளநலத்தைப் பேணுவதில் பெற்றோர்களும், ஆசிரியர்களும் கூடுதலான கவனம் செலுத்துதல் அவசியமாகும்.

### பரீட்சை அடைவு மட்டம் குறைவடைதல்

பாடசாலைகளில் மாணவர்களின் நிலை தொடர்பாக அறிவதற்குக் கணிப்பீடு என்பது மிகவும் முக்கியமானது. இத்தகைய கணிப்பீட்டு முறைகள் வேறுவேறுபட்டதாக அமைந்திருந்தாலும் அவற்றின் நோக்கம் ஒன்று தான். எமது பரீட்சை முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மாணவர்களின் மன உளைச்சல்களை அதிகரித்துச் செல்வதனை அவதானிக்க முடிகின்றது. கற்றல் நோக்கங்களை மாணவர்கள் அடைந்துள்ளனரா என அறிவதற்கு ஆசிரியர் பல்வேறு வகையான மதிப்பீட்டு முறைகளை கையாள்கின்றார்கள். பாடசாலைகளில் சாதாரணமாக இடம் பெறும் தவணைப் பரீட்சைகளை (Term Test) விடத் தொடர் அகவய மதிப்பீடு (Continuous internal Assessment) ஒப்படைகளைத் தயாரித்தல் (Submission of Assignments) போன்ற பரீட்சைகளும் இடம் பெறுகின்றன. இப் பரீட்சைகள் மாணவர்களின் வகுப்பையும், வயதினையும் கருத்திற் கொண்டு வேறுபடுகின்றன. ஆனால் ஒரு வகுப்பில் மீத்திறன், சராசரி, மெல்லக் கற்போர் என்ற வகையில் மாணவர்கள் இருப்பார்கள். இவற்றுள்ளும் ஏதோ ஒரு முறையில் ஒரு சோதனையை வைக்கும் போதும் இத்தகைய மாணவர்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். இன்றைய கலைத்திட்டத்தில் இத்தகைய சுதந்திரப் போக்கு இல்லாத காரணத்தினால் மெல்லக் கற்கும் மாணவர்கள் மன முறிவுகளுக்கு ஆளாகின்றார்கள்.

குறிப்பாக இன்று ஆரம்பப் பிரிவு மாணவர்களின் தரம் 5 வகுப்புக்குரிய புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களைப் பொறுத்த வரையில் அது மிகப் பெரியதொரு சவாலாக அமைகின்றது. மாணவர்களின் வயதிற்கும், வகுப்பிற்கும் அவர்கள் கொள்ளும் சக்திக்கும் அப்பாற்பட்டதொரு பரீட்சையாக அமைந்து விடுகின்றது. வறிய மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்காக வழங்கப்படும் இப் பரீட்சையின் நோக்கம் இன்று திசை மாறியே நிற்கின்றது. வசதி படைத்த மாணவர்கள் மிகப் பெரிய அளவு பணத்தினைச் செலவழித்து தனியார் கல்வி நிலையங்களிலும் தனிப்பட்ட வகுப்புக்களிலும் சென்று கல்வி கற்பதனால் அவர்கள் பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்று சித்தியடைவதன் மூலம் ஏழைப் பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகளை அவர்கள் எட்டிப் பிடிக்க முடியாத நிலையில் இருக்கின்றார்கள். இதனால் அவர்கள் மத்தியில் மன முறிவுகள் ஏற்படுகின்றன. இதன் மூலம் அவர்களின் உளச் சுகாதாரம் பாதிக்கப்படுகின்றது.

ஆரம்பப் பிரிவு மாணவர்களைப் பொறுத்த வரையில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை பிள்ளைகளின் மகிழ்ச்சியையும் சுதந்திரத்தையும் பறித்தெடுத்து அவர்களின் குழந்தைப் பருவத்தை அவர்கள் அனுபவிக்காது செய்து விடுகின்றது. தூரத்தில் தெரிகின்ற நிச்சயமற்ற எதிர்காலத்திற்காக நிகழ்காலத்தில் பிள்ளைகளை வாட்டி வதைக்கக் கூடாது என்ற இயற்கை வாதியான ரூசோவின் சிந்தனைகளை ஆசிரியர்களும் பெற்றோரகளும் உணர்ந்து செயற்படும் போது நிச்சயமாகப் பிள்ளைகளின் எதிர்காலம் இன்பமயமானதாக இருக்கும். இதனால் அவர்களின் உளநலம் சிறப்பானதாக மாற்றமடையும்.

## இணைப்பாட விதானச் செயற்பாடுகளின் பங்குபற்றல்

முன்பள்ளிகளோ அல்லது பாடசாலைகளோ கற்றல் என்னும் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்குத் தனித்துப் பாட நூல்கள் மட்டும் துணை போவதில்லை. ஆரம்பப் பிரிவு மாணவர்களைப் பொறுத்த வரையில் பல்வேறு விதமான முறைகளில் பிள்ளைகள் நாளாந்தம் கற்பதற்கான வாய்ப்புக்கள் இருந்த போதிலும் பாடசாலைகள் அவற்றையெல்லாம் பெரிதுபடுத்துவதில்லை. பாடத்திட்டத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட பாட நூல்கள் இல்லையெனில் கற்பித்தலும் இல்லை என்று கருதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிற்கு இன்றைய பெற்றோர் தவறான எண்ணம் கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் இணைப் பாட விதானச் செயற்பாடுகளினூடாக ஒரு பிள்ளை ஆளுமை, தலைமைத்துவம், அழகியல், உடல் உறுதி, தன்னம்பிக்கை போன்ற தன்னம்பிக்கைகளை வளர்த்துக் கொள்கின்றது. அதாவது விளையாட்டு, மன்றச் செயற்பாடுகள், அழகியற் செயற்பாடுகள் போன்றவற்றோடு பலவிதமான போட்டிச் செயற்பாடுகளில் அவர்களைப் பங்கு பெறச் செய்வதன் மூலம் அவர்கள் சிறந்த உளநலத்தைப் பெற்று கல்வி நடவடிக்கைகளில் விருப்புடன் ஈடுபட வாய்ப்பளிக்கப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் முன்வர வேண்டும்.

ஆகவே ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மத்தியில் உளநலம் பேணுவதோடு மகிழ்ச்சியாகக் கற்றல் என்னும் குறிக்கோளை முன்னெடுத்துச் செல்வதற்குரிய பல வழிகாட்டல்கள் இருந்த போதும் பெற்றோர்கள் கற்கும் பாடசாலைகள் மகிழ்ச்சிகரமான ஒரு பூங்காவாக விளங்க வேண்டும். அவர்கள் தம் விருப்பப்படி ஓடியும் ஆடியும் விளையாடியும் கல்வி கற்க வேண்டும் என்பதையே உளவியலாளர்களும் வலியுறுத்தியுள்ளார்கள். எனவே இன்றைய பரீட்சை நெருக்கடிகளில் இருந்து பிள்ளைகளை மீட்டெடுத்து அவர்களின் உள மகிழ்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் கலைத்திட்டம் அமைவதோடு பெற்றோர்களும் ஆசிரியர்களும் அவர்களுக்குச் சிறந்த மகிழ்ச்சியான எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுத்தல் அவர்களின் கடமையுமாகும்.

**அடிக்குறிப்புகள்**


1. Santrock, 2006, Educational Psychology, Tata MC – Graw Hill Publishing Company Ltd, New delhi.

2. Scott Brand, 2002, Teaching Technology, Neal schuman Publishers, London.

3. தேசிய கல்வி ஆணைக் குழு. 2003. இலங்கையின் பொதுக் கல்வி பற்றிய தேசிய கொள்கைச் சட்டகமொன்றுக்கான ஆலோசனைகள், இலங்கை.

4. பொதுக்கல்விக்கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான தேசிய குழு. 2009. இலங்கையின் பொதுக் கல்விக்கான புதிய கல்விச் சட்டம். முன்மொழிவுகள்.



**திருமதி.வி.இராசநாயகம்**

**துறைத்தலைவர்,**

**கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மூன்றாம்நிலைக்கல்வி வழங்கும் நிறுவனங்கள்

அறிமுகம்

இடைநிலைக்கல்விக்கு பின்னரான கல்வி, மூன்றாம்நிலைக்கல்வி எனப்படுகின்றது. மூன்றாம்நிலைக் கல்வியானது நாட்டின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், மற்றும் வறுமையைக் குறைப்பதற்குமான ஒரு கருவியாக உள்ளது.

இலங்கையில் மூன்றாம்நிலைக்கல்வியை அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழக கல்லூரிகள், உயர்தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் என்பன வழங்குகின்றன. அந்த வகையில் இந்தக் கட்டுரையானது இலங்கையில் மூன்றாம்நிலைக்கல்வி வழங்கும் நிறுவனங்கள் தொடர்பாக ஆராய்கின்றது.




உரு - 1: இலங்கையின் கல்விக்கட்டமைப்பு

## இலங்கையில் பல்கலைக்கழகக்கல்வி (University Education in Sri Lanka)

இலங்கையில் நவீன பல்கலைக்கழக முறைமையானது லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரியொன்றாக 1921 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் ப்பட்டது. இலங்கை பல்கலைக்கழகமானது 1942 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை பல்கலைக்கழக கடட்ளைச சட்டத்தினால் தனியான சுயாதீனமுள்ள, நிறுவனமொன்றாக 1942 ஆம் ஆண்டு யூலை மாதம் முதலாம் திகதியன்று கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்டதோடு, பலவருடங்களின் பின்னர் இரண்டாவது வளாகம் பேராதனையில் நிர்மாணிக்கப்பட்டது.

இலங்கையில் புல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பின்வரும் 17 அரச பல்கலைக்கழகங்கள் செயற்பட்டு வருகின்றன.

- கொழும்புப் பல்கலைக்கழகம்
- இராஜரட்டப் பல்கலைக்கழகம்
- பேராதனைப் பல்கலைக்கழகம்
- சப்பிரகமுவப் பல்கலைக்கழகம்
- ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்
- வயம்பப் பல்கலைக்கழகம்
- களனிப் பல்கலைக்கழகம்
- இலங்கை ஊவாப்பல்கலைக்கழகம்
- மொறட்டுவப் பல்கலைக்கழகம்
- இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- வவுனியாப் பல்கலைக்கழகம
- றுகுணுப் பல்கலைக்கழகம்
- இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
- இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
- கடப் ல மற்றும் அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம்
- கம்பகா விக்கிரமரராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம்

இலங்கை உயர்தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் **(Sri Lanka Institute of Advanced Technological Education - SLIATE)**

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் 1995 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. உயர் தேசிய டிப்ளோமா மற்றும் தேசிய டிப்ளோமா கற்கைநெறிகளை நடாத்துவதற்கான தன்னாட்சி நிறுவனமாக இது செயல்படுகிறது. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்ற ஒரு சட்டப்பூர்வமான கல்வி நிறுவனமாகும்.

இலங்கை உயர் தொழில்நுடப் வியல் கல்வி நிறுவகம் பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப் ப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாறிவரும் பொருளாதார தேவைகளுக்கு ஏற்ப ஒட்டு மொத்த தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி முறையை மறுசீரமைத்தல்.
- தேசிய அபிவிருத்திக்கு தேவையான மனிதவளத் தேவைகளைப் பூரத்ி தி செய்தல்.
- தொழில்நுட்ப நிபுணத்துவ பயிற்சி பெற்ற தொழில்நுட்ப மனிதவள வளங்களை உருவாக்கல்.

SLIATE ஆனது இரண்டாம்நிலைக் கல்விக்கு பின்னரானநிலையில் உயர்மட்ட தொழில்நுட்பக் கல்வியை வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது. தொழில்நுட்பக் கல்விக்காக ஒவ்வொரு மாகாணத்திலும் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களை (ATI) நிறுவுவது கட்டாயமாகக் ்பபட்டுள்ளது. தற்போது இது 19 உயர் தொழில்நுட்ப நிறுவனங்களை, நிர்வகித்து மேற்பார்வை செய்கிறது. பணிப்பாளர் நாயகம் அவர்கள் SLIATE இன் தலைமை நிர்வாக அதிகாரியாக செயற்படுகிறார். ஒவ்வொரு உயர் தொழில்நுட்ப நிறுவனங்களும், ஒரு இயக்குனர் அல்லது கல்வி ஒருங்கிணைப்பாளரால் வழிநடத்தப்படுகின்றன. உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் அம்பாறை, பதுளை, தெகிவளை, காலி, கம்பகா, யாழ்ப்பாணம், கண்டி, கேகாலை, குருநாகல் மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. உயர் தொழில்நுட்ப நிறுவனங்களால் பின்வரும் கற்கைநெறிகள் நடாத்தப்படுகின்றன.

விவசாயம் (Agriculture) கணிய அளவையியல; (Quantity Survey)

ஆங்கிலம் (English) கட்டட சேவைகள் (Building services)

முகாமைத்துவம் (Management) வுணிக நிதி (Business Finance)

கணக்கீடு (Accounting) பொறியியல் (Engineering)

தகவல் தொழில்நுட்பம; (Information Technology)
சுற்றுலாத்துறையும் உபசரிப்பும் (Tourism and Hospitality)

வுணிக நிர்வாகம் (Business Administration) உணவுத் தொழில்நுட்பம் (Food Technology)

பல்கலைக்கழக கல்லூரிகள் **(University Colleges)** பல்கலைக்கழகக் கல்லூரிகள், இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இவை பாடசாலைக் கல்வியை முடித்தவரக் ளுக்கு சிறந்த தொழில்நுட்பக் கல்வியை வழங்குவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை கொண்டுள்ளன. மேலும், பல்கலைக்கழகத்தில் இருந்து இடைவிலகியவர்கள் மற்றும் NVQ 4 தகுதி நிலை கொண்டவர்களுக்கான அடுத்தகட்ட தொழில்நுட்பக் கல்வியை (NVQ 5 & NVQ 6) வழங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகக் கல்லூரிகள், அனுராதபுரம், குழியாப்பிட்டி, மாத்தறை, இரத்மலானை, யாழ்ப்பாணம் மற்றும் பட்டன்கல ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. பல்கலைக்கழக கல்லூர்ரிகளால் பின்வரும் கற்கைநெறிகள் நடாத்தப்படுகின்றன.

Aquaculture and Aquatic Resources Technology
Automobile Technology
Building Services Technology
Construction Technology
Cosmetology
Drafting Technology
Electrical Technology Technology
Electronic Technology
Event Management
Farm Machinery Technology Technology
Fashion Designing Technology Technology
Food Technology
Hospitality Management
Maritime and Logistics Management
Mechatronics Technology
Post-Harvest Technology
Production Technology
Quantity Surveying
Refrigeration and Air Conditioning
Telecommunication Technology
Travel and Tour Management
Television Programme Production
Television Post Production

தொழில்நுட்பக் கல்லூரிகள் **(Technical Colleges)**

இருபத்தியோராம் நூற்றாண்டின் தொழில்நுட்ப சவால்களை எதிர்கொளஞ் ம் வகையில் தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் நோகசே காடு தொழில்நுட்பக் கல்லூரிகள் செயற்பட்டுவருகின்றன.

தற்போது இலங்கை முழுவதும் 39 தொழில்நுட்பக் கல்லூரிகள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த நிறுவனங்கள் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின்கீழ் செயல்படும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் துறையால் நிர்வகிக்கப்படுகின்றன. கிட்டத்தட்ட 544 விரிவுரையாளர்களும் 2000 கல்விசாரா ஊழியரக் ளும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பணியாற்றிவருகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்ப பல்கலைக்கழகம் **(University of Vocational Technology - UoVT)**

2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க பாராளுமன்றச்சட்டம் மூலம் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (UoVT) ஸ்தாபிக்கப்படடது. திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின்கீழ் செயல்படுகிறது. பட்டப்படிப்புகளையும் குறுங்காலப் பயிற்சிகளையும் பின்வரும் பீடங்களினூடாக வழங்குகின்றது.

1. பொறியியல் தொழில்நுட்பபீடம் (Faculty of Engineering Technology)
2. கைத்தொழில் தொழில்நுட்பபீடம் (Faculty of Industrial Technology)
3. தகவல் தொழில்நுட்பபீடம் (Faculty of Information Technology)
4. கல்விப்பீடம் (Faculty of Education)




உரு - 2: தேசிய தொழில்தகைமை மட்டங்கள் (National Vocational Qualification (NVQ) Levels)

மூன்றாம் நிலைக்கல்வி எதிர்நோக்கும் சவால்கள்

- உயர் கல்விக்காக தகைமைபெற்ற அனைவருக்கும் அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைப்பதில்லை.
- கலைத்துறைப் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு குறைவாகக் காணப்படுகின்றது.
- தனியார் மருத்துவத்துறைப் பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி மறுக்கப்பட்டு ள்ளது.
- இளைஞர் மற்றும் யுவதிகளிடத்தில் தொழில் கல்வி தொடர்பான ஆர்வமும் விழிப்புணர்வும் குறைவாகக் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாவியவை


1. https://www.ugc.ac.lk/

2. http://www.sliate.ac.lk/

3. http://univotec.ac.lk/

4. https://tamilguru.lk/university-college-admission-2021/

5. https://uck.ac.lk/index.php?lang=en

6. https://ucj.ac.lk/

7. https://www.vtasl.gov.lk/program/qualification/

8. https://www.researchgate.net/figure/the-education-and-training-system-in-srilanka_fig11_319920278



**ஆ.நித்திலவர்ணன், சிரேஸ்ட விரிவுரையாளர், கல்வியியல்துறை,**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயிர் கொட்டிகளை வெறுக்காதீர்கள்

மயிர் கொட்டிகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவை பார்வைக்கு அழகற்றவையாக இருப்பதுடன் அவற்றின் மயிர்கள் உடம்பில் பட்டால் சுணைக்கும். இலைகளை உண்டு வாழும் இவ் உயிரியை பயத்தினால் விரும்பாததுடன் உயிருடன் எரித்து விடுகின்றோம். இவற்றை அழிக்காது விட்டால் அழகான கவர்ச்சியான வண்ணத்துப்பூச்சிகளைப் பார்த்து இரசிக்கலாம்.

பொதுவாக வகுப்பறைகளில் வண்ணத்துப்பூச்சிகளாகவும் மயிர் கொட்டிகளாகவும் இருவகை மாணவர்கள் இருப்பதை இனங்காணக்கூடியதாக இருக்கின்றது. ஆசிரியர்கள் சொல்வதை அமைதியாக செவிமடுக்கும் அடக்கமான மாணவர்களாகப் பாடங்களைக் கற்பதுடன் வீட்டு வேலைகளாக ஒப்படைக்கும் பணிகளையும் செவ்வனே செய்து பரீட்சையில் நல்ல புள்ளிகளையும் பெற்றுக்கொள்கின்றனர். இவர்கள் ஆசிரியரின் பாராட்டைப் பெறும் வண்ணத்துப்பூச்சிகளாவர்.கற்பிக்கும் போது கவனம் செலுத்தாத பாடங்களைச் சரியாகச் செவிமடுக்காத ஆசிரியர்கள் சொல்வதை ஏற்றுச் செயற்படுத்த விரும்பாத குழப்படியான குறைந்த புள்ளிகளைப் பெறுவோர் மயிர் கொட்டிகளைப் போன்றவர்கள்.

பாடசாலைக் காலங்களில் பின்பு பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று வேலைக்காக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களான வண்ணத்துப்பூச்சிகள் வேலையில்லாப்பட்டதாரிகளாக சமூகத்திற்கும் பெற்றோர்க்கும் சுமையாக சலிப்புடன் வாழ்க்கையில் மயிர்கொட்டிகள் பாதையில் "ஏறுங்கள் ரீச்சர்" என ஆட்டோவில் அழைத்துச் செல்பவர்களாக களைப்பாற தேனீர் அருந்தச் செல்கையில் கடை உரிமையாளராக பணம் வாங்க மறுத்து உபசரிப்பவர்களாக இன்னும் கொஞ்சம் உயர்வாக வர்த்தக நிறுவகத்தில் பொருட்களை வாங்கி அதனை ஏற்றிச் செல்ல வாகனம் தேடுகையில் மரியாதையுடன் தனது ஊழியர்களூடாக தமது வாகனத்திலேயே வீட்டுக்கு ஏற்றியிறக்கித் தருபவராக செயற்படுவதையும் பார்த்திருப்பீர்கள்

இங்கு அத்தியாவசியத் தேவைகளை வழங்கும் தொழிலாளர்களாக வர்த்தகராக எம்மால் கைவிடப்பட்ட மயிர்கொட்டிகள் பணிவுடன் செயற்பட வண்ணத்துப்பூச்சிகளாக இவை கண்டோர் ஆசிரியர் ,மருத்துவர், பொறியியலாளர்,நிர்வாகிகள் என வழிநடத்தலின் கீழ் தமது தொழிற்பாதுகாப்பு,சுயவாழ்க்கை என சிறிய வட்டத்தினுள் வாழ்கின்றனர். சிறுவயதிலேயே ஆராய்ச்சி கண்டு பிடிப்பு என பரிசோதனைகளில் ஈடுபட்டு படிப்பை இடைநிறுத்திய குழப்படி மாணவர்கள் தொழில் முனைவோர்களாகி பட்டம் பெற்றவர்களுக்கு தொழில் வழங்குபவர்களாகவும் நாட்டுச் சேவை செய்கின்றனர்.

இதிலிருந்து வெளிப்படுத்த விரும்புவது ஆசிரியர்களாகிய நாம் வண்ணத்துப்பூச்சிகளான மாணவர்களுக்கு A.B சித்திகளைப் பெற மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிப்பதன் மூலம் சித்தியெய்தும் சதவீதத்தை அதிகரிக்க முடியாது மயிர்கொட்டிகளான மாணவர்களைச் சித்திபெற வைப்பதன் மூலம் சித்தியின் சதவீதத்தைக் கூட்டமுடியும். மாணவர்கள் மயிர்கொட்டிகளாக உருவாகுவதற்குக் காரணங்களாக அமைபவற்றை இனங்கண்டு உதவியளிப்பதனூடாக அவர்களை சித்தியடையச் செய்ய வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும். அவர்களது இயலுமையை இனங்காண வசதியளிப்பவராக, நண்பனாக,படைப்பாளியாக வழி காட்டி பல்வேறு வகிபங்குகளை ஏற்று இணைந்து செயற்பட்டு ஏணியாக இருப்போம்.

ஆசிரியர்கள் தமக்கு அறிவு இருக்கிறதென்று அனைத்து மாணவர்களுக்கும் அறிவைப்பெறும் வகையில் கற்பிக்க முடியாது. வண்ணத்துப்பூச்சிகள் ஆசிரியர் எதிர்பார்க்கைக்கேற்பக் கற்பார்கள். மயிர்க்கொட்டிகள் தமக்கேற்ற முறைகளுக்கு ஏற்பவே கற்பார்கள். அவர்களின் கற்றல் விடயப்பரப்பினுள் அடங்காது. எமது கல்வியறிவில் பல பாடங்களைப் பரீட்சையின் பின் மறந்து விடுகின்றோம். படித்ததை மறப்பதால் பட்டம் பெற்றவர்கள் செய்யும் வேலையை படிக்காதவர்களும் செய்கின்றனர். Nalai Weetuku wa படிக்காத நண்பர் தனது நண்பனுக்கு அனுப்பிய குறும் செய்தி வண்ணத்துப்பூச்சி படிக்கும் பொதே இதனை அனுப்பும் மயிர்க்கொட்டியை பிடிக்கும் காலத்தின் இனம் இவை கண்டிருந்தால் ஆங்கிலத்தில் சித்தியடைய வைத்திருக்க முடியும். ஆசிரியர்கள் தமது எல்லையினுள்ளேயே நிற்பதால் தொடர்பற்ற கேள்விகளை எழுப்புவோரை குழப்படி என ஒதுக்கி விடுகின்றனர் தாமாக தேடியறிந்து புலனாய்வு செய்து விளங்கினாலே ஏற்றுக்கொள்ளும் தன்மையை சொல்வழி கேளாதவரென அலட்சியப்படுத்துவதால் ஆராய்வூக்கம் மழுங்கடிக்கப்படுகிறது. மயிர்க்கொட்டிகளை வண்ணத்துப்பூச்சிகளாக மாற்றும் நோக்கிலேயே கற்பித்தல் முறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றன. Dale இனது அனுபவக்கூம்பும் இதனையே விளக்குகின்றது. மாணவரது முழுத்திறமை யையும் புரிந்து செயற்படும் ஆசிரியராக நாம் செயற்பட்டு அழகான வண்ணத்துப்பூச்சிகளை உருவாக்குவோம்.

"அன்னையும் தந்தையும் குழந்தையை உலகிற்குத் தருகின்றனர். ஆசிரியர் உலகத்தையே குழந்தைக்கு தருகின்றனர்"


**திருமதி .ஹேஜினி மணிகண்டன்**

**கலைப்பட்டதாரி**

**வரலாறு**

**கிளி/தர்மக்கேணி அ.த.க.பாடசாலை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதங்களும் அனுட்டான நியமங்களும்

எமக்கு எல்லா நலன்களையும் எப்போதும் வழங்கிக் கொண்டிருக்கின்ற இறைவனை மறவாது நினைந்து வாழ்த்தியும் வணங்கியும் இருத்தலே கடமையாகும். பகுத்தறிவற்ற பிற உயிரினத்திற்கு அது இன்றியமையாததாயினும் பகுத்தறிவு படைத்த மனிதனிற்கு இது இன்றியமையாதது எனினும் உலகின் சூழல்களால் அக்கடமையை ஆற்ற இயலாத நிலையில் இருப்பதால் குறிப்பிட்ட சில நாட்களிலேனும் மக்கள் அக்கடப்பாட்டில் நிற்றல் வேண்டும். அந் நாட்களே விரத அனுட்டானங்களாகும்.

"மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம் வா்க்கு காயம் எனும மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதல் விரதமாகும். (நாவலர் பெருமான்)

இது ஆன்ம ஈடேற்றம் கருதிச் செய்யும் சாதனையாகும். விரதம் "நோன்பு"என்றும் கூறப்படும்.

விரதம் என்றால் ஐம்புலனடக்கம் என்பது பொருள் அதாவது சித்தத்தை ஒரு முகப்படுத்தல் மனமானது பொறிவழிச் செல்லாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் திரிகரண சுத்தியுடன் இறைவனைச் சிறப்பாக வழிப்படுத்தல்

விரதம் அனுஸ்டிப்பவர் விரத காலங்களில் தாம்புலந்தரித்தல், புகைப்பிடித்தல், பகலில் நித்திரை செய்தல், சிற்றின்பம் துய்த்தல் முதலியன செய்தலால் பிராச்சித்தம்ற பால தண்டனைக்களுக்குள்ளாக்கப்படுவர்.விரதங்கள் மனிதனுடைய வாழ்வை மேன்மையுறச் செய்து நன்மை நோக்கி இட்டுச் செல்கின்றன. இவ் விரதத்தினை மாத அடிப்படையில் நோக்குவோம்

## சித்திரை

### சித்திரை பூரணை

தமிழ் வருடம் பிறந்து முதலாவது பூரணை என்பதோடு எமது தலைவிதியை நிர்ணயிக்கும் எமது வாழ்நாள் கணக்குகளை எழுதிப்பேணும் யமதர்மராஜனின் கணக்குப் பிள்ளையாகிய சித்திரகுப்தர் திருவவதாரம் செய்த நாளாகும்.

தமது தாயை இழந்தவர்கள் இந்நாளில் தாயை நினைத்து விரதமனுஸ்டித்துப் பிரார்த்தனை செய்வதால் அன்னாரின் ஆத்மா சாந்தியடைகின்றது. அன்றைய தினம் உப்பை தவிர்த்து பசும்பால் தயிர் உண்ணாமல் இருத்தல் சிறப்பு இதனால் பாவச்சுமை குறையும்.

## வைகாசி

### வைகாசி விசாகம்

வைகாசி விசாகமானது முருகனின் நட்சத்திரமாக காணப்படுகிறது. முருகன் அசுரர்களை அழித்தொழித்துத் தேவர்களைக் காத்தருளியதன் மூலம் அதர்மத்தை ஒழித்துத் தர்மத்தை நிலைநாட்டியது மட்டுமன்றி முழு உலகமுமே உய்வடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்டுச் சரவணப்பொய்கையில் முருகப்பெருமான் திருவவதாரம் செய்த தினமாகையால் முருக வழிபாட்டிற்குச் சிறந்த தினமாகும். இவ் விரதத்தை அனுட்டிப்பதன் மூலம் கணவர், மனைவி ஒற்றுமை குழந்தைப்பேறு தொழில் வளர்ச்சி தரும் அற்புத விரத நாள்

### ஆனி- ஆனிஉத்தரம்

எமது இறைவனாகிய சிவபெருமான் நடராஜர் என்ற நாமத்தில் தனது அடியார்களுக்காகத் தில்லையில் திருநடனம் புரிந்தது இத்தினத்திலாகும். தனது குருநடனத்தின் மூலம் எம்பெருமான் பஞ்சகிருத்தியங்களையும் புரிகின்றார். இத்தினம் நடராஜர் தரிசனத்திற்கு சிறந்த நாளாகும.இம்மாதம் சைவ வைணவமதத்திற்கு உரியமாதமாகும். இம்மாதம் உத்தராயண மாதத்தின் இறுதி நாளாகும்.

### ஆடி- ஆடிச்செவ்வாய்

இவ் விரதம் அம்பாளிற்கு உரிய விசேட தினமாகும். விவாகமாகாத கன்னிப்பெண்கள் இத்தினத்தில் ஈடுபடுவதன் மூலம் மாங்கல்ய பாக்கியம் கிடைக்கப்பெறுவர்செவ்வாய் தோசமுள்ளவர்களும் ஏனையோரும் செவ்வாய்க்கிழமை விரதத்தை ஆடிச்செவ்வாயன்று கோவிலில் சங்கற்பம் செய்து ஆரம்பிப்பது உத்தமமானது. ஒரு பொழுது அன்னமோ அல்லது பால் பழமோ உண்டு இவ் விரதத்தை கடைப்பிடிப்பது சிறந்தது.

### ஆடி- அமாவாசை

இத்தினம் பிதிர்க்கடன் செய்வதற்குச் சிறந்த நாளாகும். தந்தையை இழந்தவர்கள் இத்தினத்தில் விரதமிருந்து வழிபாட்டில் ஈடுபட்டுத் தானங்கள் செய்வதால் பிரிந்த ஆன்மாக்கள் ஈடேற்றம் அடைகிறது.

### ஆடிப்பூரம்

உலக மாதாவாகிய உமாதேவியார் ருதுவாகிய தினமான இத்தினம் அம்பாள் விரதத்திற்கும் தரிசனத்திற்கும் உகந்த நாளாகும். அம்பாளின் எட்டுவகைச் சித்திகளையும் பெற உன்னதமானது.

### ஆவணி ஆவணிச் சதுர்த்தி (ஆவணி மாத வளர்பிறை 4ம் நாள்)

ஆவணி மாதத்துப் பூர்வபக்கச் சதுர்த்தி விநாயகப் பெருமான் திருவவதாரம் செய்த தினமாகையால் விநாயக விரதத்தற்கும் வழிபாட்டிற்கும் சிறந்த நாளாகும்.

ஸ்ரீ நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகங்களில் இத்தினத்தில் நடைபெறும் அபிஷேகம் ஒன்றாகையால் இத்தினம் நடராஜ தரிசனத்திற்குச் சிறந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணி- ஞாயிறு

ஞாயிற்றுக்கிழமை எல்லா மாதங்களிலும் வருகின்றபோதிலும் ஆவணி மாதத்தில் வரும் ஞாயிற்றுக் கிழமை சூரிய விரத்திற்கும் வழிபாட்டிற்கும் சிறந்ததாகும். இம்மாதத்தில் சூரிய பகவான் சிங்கராசியில் பிரவேசிப்பதால் ஞாயிற்றுக்கிழமை முக்கியத்துவம் பெறுகிறது

## புரட்டாதி- நவராத்திரி விரதம்

புரட்டாதி மாதம் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி முடியவரும் ஒன்பது நாளும் கும்பத்திலே பூசை செய்து தேவியை அனுட்டிக்கும் விரதமாகும். இதில் வரும் அட்டமிக்கு மகாலட்சுமி என்றும் நவமிக்கு மகா நவமி என்றும் பெயர். இதனால் இதை மகாநோன்பு என்று சொல்லிக் கொண்டாடுவார். இது தேவி உபாசகர்களால் சிறப்பாக கொண்டாடப்படும் விரதமாகும். இந்த ஒன்பது இரவுகளிலும் முதல் மூன்று நாட்களிலும் வீரத்தை வேண்டித் துர்க்கையையும் அடுத்த மூன்று நாட்களில் செல்வத்தை வேண்டி திருமகளையும் இறுதி மூன்று நாட்களும் கல்வியை வேண்டி கலைமகளையும் நினைந்து பூசித்து விரதம் அனுட்டிப்பர் நோன்பு நோற்பவர்கள் பிரதமையில் எண்ணெய் முழுக்காடி நோன்பைத் தொடங்க வேண்டும். இந்நோன்பு நாட்களில் அபிராமி அந்தாதி குமரகுருபரரின் சகலாகலாவல்லி மாலை போன்ற பாடல்கள் பாராயணம் செய்தல் சிறந்தது.

## புரட்டாதிச்- சனி

பொதுவாகச் சனிக்கிழமை சனீஸ்வர வழிபாட்டிற்கான நாளாக இருந்த போதிலும் புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் அனுஸ்டிக்கப்படும் விரதமும் வழிபாடும் மேலான பலனைத் தரவல்லன.இத்தினத்தில் கறுப்பு எள் பொட்டளமாகக் கட்டி மண் சிட்டியில் வைத்து நல்லெண்ணெய் விட்டு எரித்து வழிபடுவார்கள்.

## கேதாரகௌரி விரதம்

இவ்விரதமானது புரட்டாதிமாத வளர்பிறை அட்டமி அல்லது நவமி அல்லது தசமித் திதியில் ஆரம்பமாகி ஐப்பசி மாதத் தேய்பிறை சதுர்த்தசியில் இருபத்தொரு நாளில் முடிவுறுகின்றது. இருபத்தொரு நாட்களைக்கொண்ட மகோன்னத விரதமாகும். உமாதேவியார் சிவபெருமானை நோக்கி சிவபூஜை செய்து அர்த்தநாரீஸ்வரரைப் போற்றி வழிபடப் பெற்ற விரதமாகையால் இது கேதார கௌரி விரதம் என்று சொல்லப்படுகின்றது.

திருமணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்கலமாக இருக்க வேண்டும் என்றும் மணமாகாத கன்னிப்பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்க்கை வேண்டியும் இதனை அனுஸ்டிப்பர்.மங்கலகரமான வாழ்க்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டி ஆண்களும் இவ்விரதத்தை அனுஸ்டிப்பதுண்டு இவ்விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகள் கொண்ட நூலில் ஒவ்வொரு நாளும் முடிச்சுக்களாக இடப்பட்டு இறுதி நாளன்று அந்த நூலைக்கோயில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கைகளிலும் பெண்கள் தமது இடதுகையிலும் அணிந்து கொள்வர்.

## மகாளயம்

மகாளய பட்சம் புரட்டாதி அமாவாசையன்று முடிவடையும் அதற்கு முந்திய பதினைந்து நாட்களாகும். இது பிதிர்களை நினைத்து அவர்களுக்குச் செய்யப்படும் தானமாகும். பிதிர்களை நினைத்து மாதந்தோறும் தானம் செய்ய முடியாதவர்கள் இந்த காலத்தில் தானங்களைச் செய்வதால் பன்னிரண்டு மாதங்களிலும் செய்த பலனைக் கொடுப்பதாகும்.பிதிர்கள் பூமிக்கு வரும் நாள் இதுவாகும்.

## ஐப்பசி மாதம்

சுக்கிரவாரம் என்றால் வெள்ளிக்கிழமை என்பது பொருள் வெள்ளிக்கிழமை விரதமானது ஐப்பசி மாதத்து முதலாவது வெள்ளிக்கிழமை தோறும் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அனுஸ்டிக்கும் விரதமாகும். இவ்விரத நாளில் உபவாசமிருத்தல் உத்தமம் அதற்கு இயலாதவர்கள் இரவிலே பழம் முதலியன உட்கொள்ளலாம். இதற்கும் இயலாதோர் ஒரு பொழுது பகலில் உணவு கொள்ளலாம். இவ் விரதம் மூன்று ஆண்டுகளுக்கேனும் அனுஸ்டித்தல் வேண்டும். இவ்விரதத்தை நிறைவு செய்யும் போது சாந்திக் கிரியையுடன் முடித்தல் வேண்டும்.

## கந்தசஷ்டி விரதம்

இவ் விரதம் ஐப்பசி மாதம் அமாவாசைக்கு அடுத்த பிரதமை முதல் ஷஷ்டி ஈறாகிய ஆறு நாளும் அனுஸ்டிக்கும் விரதம் இதுவாகும். ஒவ்வொரு நாளும் காலையில் நீராடி முருகப்பெருமானை வழிபட்டு சிறிதளவு நீர்மட்டும் அருந்தி உபவாசம் ஆறு நாளும் இருந்து ஏழாம் நாள் சிவனடியார்களுடன் பாரணை செய்வது இவ்விரதத்திற்கு நியமமாகும். இதற்கு இயலாதவர் முதலைந்து நாளும் ஒரு பொழுது உண்டு ஷஷ்டி உபவாசஞ் செய்யக்கடவர் இவ்விரதம் ஆறு ஆண்டுகள் அனுஷ்டித்தல் வேண்டும்.

## கார்த்திகை

## திருக்கார்த்திகை விளக்கீடு

முன்னொரு காலத்தில் தேவர்கள் சிவபிரானை வேண்டித் தவம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவகையான வரங்களைப் பெற்றனர் பின் ஆணவத்தால் இறைவனை மதியாது மயக்கமுற்றனர். அப்பொழுது சிவபிரான் அவர்கள் முன் ஒரு கிழவனாகக் காட்சியளித்து ஒரு தும்பை ஓர் இடத்தில் நட்டுவிட்டு இதையாவது பிடுங்குங்கள் என்று கூறினார். ஒருவராலும் அதைப் பிடுங்க முடியவில்லை. ஆணவ மமதை அடங்கி கிழவனைப் பார்த்தனர். அப்போது அவர் சோதி வடிவாய் நின்றார் அன்றைய தினம் கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரம் கூடிய பௌர்ணமி நாளாகும். இத்தினமே விளக்கீடு எனக் கொண்டாடப்படுகின்றது.

### விநாயக ஷஷ்டி விரதம்

இவ்விரதம் கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரம் கழிந்த மறுநாள் ஆரம்பித்து 21 ஆவது நாளாகிய சதய நட்சத்திரமும் ஷஷ்டித் திதியும் கூடிய நாளில் நிறைவு பெறுவதாகும் இது விநாயக விரதங்களில் மிகச் சிறப்பான விரதமாகும். இந்நாள் தான் விநாயகப்பெருமான் கஜமுகாசூரனைச் சம்சாரம் செய்த நாளாகும். இதில் காப்புக் கட்டுதல் முக்கிய நிகழ்வாகும். இவ் விரதத்தில் விநாயகர் அகவல்,விநாயக புராணம். என்பன படிக்கப்படும்.

### மார்கழி திருவெம்பாவை

மாதத்தில் சிறந்தது மார்கழி மாதமாகும் மேலும் மார்கழி தேவர்களுக்கு விடியற்காலம் எனவே இறைவனை நினைத்துக் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை ஆகியன பாடுவதற்கு மார்கழி உகந்த மாதமாகும்.

மார்கழி திருவாதிரை நட்சத்திரத்திற்கு முந்திய ஒன்பது தினங்களும் திருவெம்பாவை உற்சவ காலங்களாகும். திருவாதிரை நட்சத்திர தினத்தன்று திருவெம்பாவை நிறைவு பெறுகின்றது. திருவெம்பாவை நடராஜப் பெருமானுக்கு உரித்தான உற்சவம்

## திருவாதிரை விரதம்

மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய நன்நாளில் அனுஸ்டிப்பது திருவாதிரை விரதம். இவ் விரதம் சிவபெருமானுக்கு உகந்தது. இதனையொட்டியே சிவபெருமானை ஆதிரையின் முதல்வன் என்றும் ஆதிரையான் என்றும் கூறுவர்

## தை தைப்பூசம்

தைமாதம் பூரணையுடன் சேர்ந்து வரும் நட்சத்திர தினம் முருக வழிபாட்டிற்குச் சிறந்த நாளாகும். இத்தினத்தில் பலர் பாற்குடம், காவடி முதலியன எடுத்து முருகனை வழிபடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாசி

### மாசி மகம்

மாசி மாதத்தில் மக நட்சத்திரம் கூடிய நாளான இத்தினம் நடராஜப்பெருமானின் ஆறு அபிஷேகத் தினங்களில் ஒன்றாகையால் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும். அம்பிகை தாட்சாயணியாகத் தாமரை மலரில் அவதரித்த நாள் இதுவாகும்.

### மகா சிவராத்திரி

சைவசமயிகள் யாவராலும் அனுஸ்டிக்கப்பட வேண்டிய விரதம் சிவராத்திரி விரதமாகும்.மகாசிவராத்திரி மாசி மாதத்து தேய்பிறை சதுர்த்திய திதியில் சிவபெருமானை குறித்து அனுட்டித்து சிவராத்திரி விரதமாகும். இந் நாளில் உபவாசம் இருப்பதோடு இரவு முழுவதும் நித்திரையின்றிச் சிவபூஜையிலும் ,சிவவழிபாட்டிலும் செலவு செய்தல் வேண்டும். இரவில் நான்கு சாமப் பூசைகள் அவ்வவ்காலங்களில் செய்தல் உத்தமம் இதை விடுத்து நான்கு சாமத்தையும் சேர்த்து ஒரு காலத்திற் சேர்த்தேனும் செய்தல் வேண்டும். இது மத்திமமாகும்

இதனைவிட நான்கு சாமத்திலும் பூஜைசெய்வோர் முதற் சாமத்தில் பாலும் இரண்டாம் சாமத்தில் தயிரும் மூன்றாம் சாமத்தில் நெய்யும் நான்காம் சாமத்தில் தேனும் அபிஷேகம் செய்வதுடன் வில்வம் பத்திரிகையால் நான்கு சாமமும் அர்ச்சிப்பது சிறப்புக்குரியதாகும். இதன் மூலம் மேலான பலன் கிடைக்கும்.

## பங்குனி பங்குனி உத்தரம்

உலக மாதாவாகிய உமாதேவியார் மலையரசன் மகளாகத் திருவவதாரம் செய்து இத்தினமாகும். இத்தினத்தில் விழா எடுப்பது தரிசிப்பதற்கு சிறந்த நாளாகும். இவ்விரதத்திற்கு இரவில் பழமும் பாயாசமும் உண்பது நியதி இயலாதவர்கள் நண்பகல் ஒரு பொழுது உணவு உண்ணலாம்.

### பங்குனி திங்கள்

பங்குனி மாதத்தில்வரும் திங்கள் ஏனைய மாதங்களிலும் வரும் திங்களை விட விஷேசமான தினங்களாகும்.அதாவது பங்குனியிலே வரும்திங்கள் அம்பிகைக்கு உரித்தான சிறப்பான நாளாகும். இந்நாளில் விரதம் இருந்து வழிபாடாற்றுவது சாலச் சிறந்தது.

**திரு.சிவஞானம் கோகுலதர்சன்**
**கலைமானிப்பட்டதாரி**
**பயிற்றப்பட்ட ஆசிரியர் (ஆரம்பக்கல்வி)**
**கிளி/தர்மக்கேணி அ.த.க பாடசாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வணிக மன்றம்



மாணவ முதல்வர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரம்பக்கல்வி தமிழ் மன்றம்



ஆரம்பக்கல்வி ஆங்கில மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணித விஞ்ஞான மன்றம்



இந்துமா மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரார்வமே கற்றலின் முதல்படி

கற்றல் என்பது பேரார்வம் மிக்க ஒரு செயற்பாடாகும். மானிடர்களாகிய நாம் கற்றலின் மீது கொள்ளும் பேரார்வம் வாழ்க்கையின் இலக்குகளை வெற்றிகரமாக அடையவும் மனநிறைவோடு வாழ்வதற்கும் அடிப்படையாக அமையும் என்பதில் ஐயமில்லை. வாழ்க்கையின் இலக்குகளை வெற்றிகரமாக அடைந்து மனநிறைவோடு வாழத்தொடங்கினால் அடுத்த நிறைவுகள் தாமாகவே வந்து விடும். ''பிரெட்ச் ஹீகல்'' என்ற அறிஞர் ''பேரார்வம் அன்றி உலகில் எத்தகைய சிறப்பும் சாத்தியம் ஆனதில்லை'' என்றார்.

பேரார்வம் என்பது என்ன என்பதை அறிந்து கொள்வது கடினமானதாகும். பேரார்வம் கொள்ள கடின உழைப்பு ஒரு முகப்பட்ட கவனம் கற்றலின்பால் விருப்புடன் ஈடுபட்டு இலக்கை அடைவதும் முக்கியமானதாகும்.

கற்றலின் பேரார்வம் கொள்ளும் கற்றலின் விளைவுகள் பயனுள்ளதாக அமையும். கற்றலின் வெற்றி கிடைக்கும் போது அது கற்போரையும் அவன் சூழலில் வாழ்வோர்களையும் வெற்றி நடை நோக்கி அழைத்துச் செல்வதற்கான தொழில் வாய்ப்பு, மற்றும் வருமான உயர்வினையும் பெற்றுத் தரும். குறைந்த வேலை வாய்ப்புக்கள் ஆனால் அதனை நாடும் மக்கள் கூட்டம் இது தான் இன்றைய உலக நிலை இக் கட்டத்தில் உயர்ந்த கற்றல் திறன்களையும் மேலும் கற்றுக் கொள்ளும் ஆர்வமுள்ளவர்களையுமே வேலை உலகு தேடுகின்றது. ஆகவே கற்போன் தான் தெரிவு செய்த துறையில் பேரார்வத்துடன் கற்று முன்னேறுவதை கைக்கொள்ள வேண்டும். கற்றலின் கற்போன் பேரார்வம் கொள்ளும் போது அங்கே ஊக்கம், சக்தி என்பன இயல்பாகவே ஊற்றெடுக்கத்தொடங்கிவிடும்.

சில கற்போர்கள் தாம் தெரிவு செய்த துறை தொடர்பாக தொடர்ச்சியாக விருப்பம் அற்றவர்களாகவும் இருக்கின்றனர்.கற்றலுக்கான ஒரு துறையை கவனமாக தெரிவு செய்தல் வேண்டும். இத்துறையை தெரிவு செய்ய மற்றவர்களின் ஆலோசனைகளைப்பெறல் அவசியம் ஆனால் தனித்து மற்றவர்களின் ஆலோசனையில் மட்டும் தங்கியிருக்காது கற்போர் தனது ஆற்றல்களையும் விளங்கி கொண்டு கற்பதற்கான துறையை தெரிவு செய்தல் வேண்டும்.

உதாரணமாக உயர்கல்வியை தெரிந்தெடுக்கும் பல கற்றோர்கள் பின்வரும் நிலைகளில் தவறான முடிவுகளை எடுத்து பின்னர் தாம் தெரிவு செய்த துறை தொடர்பாக சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். அவையாவன.

1. பெற்றோர்களின் அழுத்தங்களுக்கு உட்பட்டு கற்பதற்கான துறையை தெரிவு செய்தல்

2. நண்பர்களின் வற்புறுத்தல்களால் மட்டும் ஒரு துறையை தெரிவு செய்தல்

3. பிரத்தியேக ஆசிரியர்களின் வழிகாட்டல்களை மட்டும் கவனத்திற்கொண்டு கற்பதற்கான துறையை தெரிவு செய்தல்

4. சமூகத்தில் கவர்ச்சிகரமான தொழில்களுக்கு இட்டுச் செல்லும் துறைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்தல் சிலவேறான இத்துறை தொடர்பாக கற்போனுக்கு ஆற்றல்கள் குறைவாக இருக்கலாம்.

5. விளம்பரங்களின் கவர்ச்சியால் உந்தப்பட்டு ஒரு துறையை தெரிவு செய்தல்

மேற்கண்ட வழிகாட்டல்கள் எல்லாம் தவறானவை அல்ல. ஆனால் கற்போன் தனக்கு கிடைக்கும் வழிகாட்டல்களோடு தனது சுய ஆற்றல்களை ஒப்பிட்டுப் பார்த்தே கற்பதற்கான துறையை தெரிவு செய்தல் வேண்டும். கற்பதற்கான துறையை சரிவர தெரிவு செய்யாவிட்டால் அங்கே கற்றல் தொடர்பான பேரார்வம் ஏற்படுவது சிக்கலாகிவிடும். கற்றலின் பேரார்வம் கொண்டவர்கள் பின்வரும் பண்புகளை உடையவர்களாக இருப்பார்.

1. கற்றலின் பெருமகிழ்வு கொள்ளல்,கற்றல் என்பது இவர்களுக்கு புத்துணர்வு தரும் அனுபவமாக காணலாம்.
2. கற்றலின் பேரார்வம் கொண்டவர்கள் சூழலில் உள்ளவர்களால் மதிக்கப்படுவார்கள் பாராட்டப்படுவார்கள் அவர்களிடம் ஆலோசனை கேட்க பலர் விரும்புவர்.
3. கற்றலின் பேரார்வம் கொண்டவர்கள் தமது கற்றல் இலக்குகள் பற்றி தெளிவுடன் இருப்பார்.
4. காணும் எதனையும் தனது கற்றலுடன் எப்படி இணைக்கலாம் அதனை தனது கற்றலை மேம்படுத்த எப்படி பயன்படுத்தலாம் என்ற சிந்தனையுடன் இருப்பர்.
5. தான் கற்ற விடயங்கள் பற்றி மற்றவர்களுடன் கலந்துரையாட ஆர்வத்துடன் இருப்பார்.

எனவே கற்றலுக்கான சுய உந்தல் என்பது கற்றலுக்கான பேரார்வத்துடன் இணைந்ததாகும்.

**அல்போன்சா விஜித பண்டார**
**உடற்கல்வி ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் செயன்முறையில் ஆக்கத்திறன்

அறிதல் என்பது "ஒரு விடயத்தைப் பற்றி அறிந்து விளங்கிக் கொள்கின்ற உளச்செயன்முறை" என மிக எளிமையாக குறிப்பிடலாம். ஆனால் பேரறிகை என்பது அறிவிலும் ஒருபடி மேலானது. இது ஒருவர் தனது சொந்த அறிவாற்றலால் தான் அறிந்தவற்றை உய்த்தறிந்து உணர்வதற்கான ஆற்றல் மற்றும் அவற்றை பகுத்தராய்தல் போன்ற பல உயர்மட்ட சிந்தனைகளுடன் தொடர்புபட்ட ஒரு சிந்தனைச் செயன்முறையாகும். இச் செயன்முறையின் போது கற்பவர் தனது சொந்தக் கற்றலைப் பற்றியும் கற்றற் செயன்முறையில் பயன்படுத்தப்படவேண்டிய உபாயங்கள் பற்றியும் அறிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் உடையவராகக் காணப்படுவார். இதனால் பேரறிகையானது கற்றலை சுயமேற்பார்வை செய்யும் செயன்முறையை உள்ளடக்கியுள்ளது எனலாம். இப்பேரறிகை சாதாரணமாக எல்லோரிடத்திலும் அமைந்திருக்கின்ற ஒரு ஆளுமை தற்திறன் ஆகும்.

கற்றலோடு தொடர்பு பட்டவகையில் பேரறிகையின் முக்கியத்துவம் இன்று பலராலும் முன்வைக்கப்படுகின்ற ஒரு விடயம் என்பதால் புதிய தொழில்நுட்ப வர்த்தக உலகில் பேரறிகை சார்ந்த உயர்மட்ட சிந்தனைத்திறன்களை மாணவர்களிடம் விருத்தி செய்யும் வகையில் கற்றல் கற்பித்தல் மற்றும் இணைபாடவிதானச்செயற்பாடுகள் இடம்பெறவேண்டும் என்பது சமகாலத்தில் வலியுறுத்தப்படுகின்றது. அந்த வகையில் பேரறிகை சார்ந்த உயர்மட்ட சிந்தனைகளுள் ஒன்றான ஆக்கத்திறன் பற்றிய முக்கியத்துவம் அதிகரித்து காணப்படுகின்றது. கல்வி என்பது ஆக்கத்திறன் மற்றும் புத்தாக்கத்திறனின் மையப்புள்ளியாக உள்ளது. கற்றலை வெற்றிகரமானதாக்குவதற்கு ஆக்கத்திறன் காரணமாக அமைவதுடன் அறிவின் பல்வேறு துறைகளுக்கிடையிலான தொடர்புகளை விளங்கிக்கொள்வதற்கும் அதுவே காரணமாகின்றது. ஆதலால் கற்றல் கற்பித்தல் செயன்முறையினுள் படைப்பாற்றல், கற்றல் மற்றும் புத்தாக்க கற்பித்தல் மிக முக்கிய அம்சங்களாக கருதப்படுகின்றது.

ஆக்கத்திறன், புதியனவற்றை புனையும் திறன் இன்று கல்வியுலகில் பரவலாகப் பயன்படுத்தப்படும் சொற்பிரயோகங்களாகும். இவை மிகவும் சிக்கலான பல் அர்த்தமுள்ள எண்ணக்கருவாகவும் பல் வரைவிலக்கணங்களையும் கொண்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை ஆக்கத்திறனின் இறுதி விளைவானது. உணரக்கூடிய அல்லது பயன்படுத்தக்கூடிய வகையில் அமையும் புதுப்பொருளோ அல்லது புதிய வழிமுறைகளோ என்கின்றது.

"கருத்து அல்லது துலங்கல் புதிய வடிவில் தொடர்புபடுத்தும் ஆற்றல்- Fieldma||

"முன் வேறு யாராயினும் ஒரு தனி நபர் இனங்காணாத ஆற்றலை இனங்கண்டு கொள்ளும் சக்தி"- Craft

"ஆக்கசிந்தனை என்பது ஒருவரது தனித்தன்மைக்கும் அவரது வாழ்வில் எதிர்ப்படும் பொருட்கள், மனிதர்கள், நிகழ்வுகள், சூழ்நிலைகள் ஆகியவற்றுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையே ஏற்படும் இடைவினைகளினால் புதுமையான பொருட்களோ அல்லது தொடர்புகளோ விளைவது"- காள்ரோஜர்ஸ் என்பன அவ் வரைவிலக்கணங்களில் சிலவாகும்.

ஆக்கத்திறன் என்பது ஆக்க சிந்தனையுடன் தொடர்புபட்டு, அடையாளம் காணக்கூடிய இலக்கொன்றை அடைவதற்கு உதவும் வகையில் புதியதும், அரியதுமான படைப்பொன்றினை உருவாக்கும் செயற்பாடாகும். இச் செயற்பாடு பயனுள்ள முறையில் இடம் பெறுவதற்கு ஆக்க சிந்தனை அவசியமாகும். இவ் ஆக்க சிந்தனையை சரியான முறையில் அமைப்பதற்கு உதவக்கூடிய பல்வேறு பண்புகள் ஆற்றல்கள் ஆகியவற்றின் தொகுப்பே ஆக்கத்திறன் எனலாம்.

பழைய எண்ணங்களைப் புதுவடிவில் அமைப்புறச்செய்தலும் அவற்றிடையே புதுத்தொடர்புகளை காணுதலும் ஆக்க சிந்தனையுடன் தொடர்புபட்டதாகும். ஒருவர் தனது சுதந்திரமான சிந்தனைக்கேற்ப தனித்தன்மையுடைய செயல்களில் ஈடுபடுவதற்கும் தொழினுட்ப சமுதாய வளர்ச்சி தேவைப்படுகின்ற புதிய கருத்துக்கள் கண்டு பிடிப்புக்களை முன்வைப்பதற்கும் ஆக்க சிந்தனை அவசியமாகும். ஆக்க சிந்தனையின் விளைவு "புதுமை" (Novelty) உடையதாக இருக்கும்.

ஆக்கத்திறனின் புதுமைப்படைப்புக்களாக ஒரு பாடல் அல்லது கவிதை ஒரு அறிவியல் கோட்பாடு, ஒரு இயந்திரம், ஒரு மென்பொருள் போன்றவையாக அமையலாம். இத்தகைய புதியன புனைதல் என்ற ஆக்கத்திறன் ஒவ்வொருவரிடமும் அமைந்திருப்பினும் தனியாள் வேறுபாடு என்ற தத்துவத்தின்படி ஒவ்வொருவரிடமும் அமைந்துள்ள அளவில் வேறுபாடு காணப்படுகின்றது. ஆக்கத்திறன் இயற்கையிலேயே குழந்தைகளிடம் அமைந்து இருந்தாலும் உகந்த கற்றல்-கற்பித்தல் முறைகளால் அவற்றை மலரச்செய்து வளர்க்க முடியும் என நம்பப்படுகின்றது.

ஆக்கத்திறனுக்கு ஆளுமை இயல்புகள் முக்கியமானவையாக அமைவதுடன், அவை சூழல் காரணிகள் மூலம் மேலும் விருத்தியடையும். அதனால் உள்ளார்ந்த ஊக்கலை ஏற்படுத்துவதற்கு கட்டுருவாக்க சூழல் காரணமாக அமையும். ஆக்கத்திறனின் செல்வாக்குச் செலுத்தும் மூன்று பிரதான காரணிகளாக ஊக்கல்(Motivation) நிபுணத்துவம் (expertize) மற்றும் ஆக்கபூர்வமான சிந்தனை (Creative thinking) என்பவற்றை குறிபபிடுகின்றனர். ஆக்கத்திறனுடைய நபர்கள் யாதாயினும் செயலில் ஈடுபட்டிருக்கையில் அச்செயலில் அவர்களின் முயற்சி விருப்பத்தினால் தொடர்ச்சியாக சலிப்பின்றி ஈடுபடுவார். உதாரணமாக தோமஸ் அல்வா எடிசன் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு முயன்று தவறல் மூலம் புத்தாக்கங்கள் பலவற்றை தந்துள்ளார். இங்கு அவரிடம் காணப்பட்ட நிபுணத்துவம் மற்றும் ஆக்க சிந்தனைக்கு மேலாக சுயஊக்கல் காரணமாகவே புதியனவற்றை காணமுடிந்தது.

ஆக்கத்திறனின் முக்கிய பண்புக்கூறுகளாக பின்வருவனவற்றை கில்போர்ட் குறிப்பிடுகின்றார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பிரச்சனைகள் பற்றிய நுண்ணுணர்வு
2. தடையின்றி துரிதமாக சிந்தித்தல்
3. சிந்தையில் நெகிழ்ச்சி
4. தனித்தன்மை
5. அகக்காட்சி தாவல்
6. விடாமுயற்சி/ தன்னம்பிக்கை
7. புதிய தொடர்புகளை காண விளைதல், என்பன அவையாகும்.

கல்வி செயற்பாட்டில் ஆக்கத்திறன் தொடர்பான எண்ணக்கருவைப்பயன்படுத்தி கொள்வதற்கு ஆக்க சிந்தனையின் படிநிலைகள் நான்கினை விளங்கிக் கொள்ளல் அவசியமானது.

1. ஆயத்தம் (ஆயத்த நிலையில் பிரச்சினை ஒன்று இனங்காணப்பட்டு பிரச்சனை விளக்கப்பட்டு வரையறுக்கப்படும்) அதாவது பிரச்சனையை ஒரு முகப்படுத்தி தொடர்புடைய விடயங்களைச் சேகரித்து, பிறருடன் விவாதித்தலும் மேற்கொள்ளப்படவேண்டிய உத்திகளை சிந்தித்தலும் இந்நிலையில் ஏற்படும்.

2. தற்சிந்தனை (புதிய படைப்பிற்கான வெளிப்புறச் செயல்களோ அறிகுறிகளோ இந்நிலையில் தென்படாது.) அதாவது தான் ஏற்கனவே பெற்ற அனுபவங்களையும் சேகரித்த தகவல்களையும் உள்வாங்கி புதிய கோணத்தில் இணைந்து சிந்திக்கின்ற செயல் இந்நிலையில் நடைபெறும்.

3. உள்ளொளி தோன்றுதல் (பிரச்சனைகளுக்குரிய தீர்வு இப்படி நிலையில் தோன்றும்) இது குறித்த விடயத்துடன் தொடர்பான உட்காட்சியின் விளைவால் ஏற்படும்.

4. சரிபார்த்தல் (ஆக்க சிந்தனையின் இறுதிப்படியாகும்.) இதில் பெறப்பட்ட தீர்வு சரியானதா? என்று பரிசோதனைக்கு உட்படுத்தி பெறப்பட்ட தீர்வுக்கு தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு தீர்வு முழுமையாக்கப்படும்

ஆக்கத்திறன் வெளிப்பாட்டில் இந்த நான்கு படிகளும் வரிசைப்படி கட்டாயம் நிகழ வேண்டும் என்று சொல்வதற்கில்லை.சில சந்தர்ப்பங்களில் உள்வளர்ச்சி நிலை இல்லாது உள்ளொளிக்காட்சி எழும் சிக்கலான பிரச்சனைகளில் இப்படிகள் நான்கும் சுழற்சி முறையில் பல தடவைகளில் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும்.

1ம் படியில் விடாமுயற்சியே அவசியமாகின்றது. சிறந்த கவிஞனோ, சிற்பியோ, ஓவியனோ, விஞ்ஞானியோ மேதையோ ஓரே நாளில் புகழ் பெற்று விடுவதில்லை.

2ம் படியில் துரிதப்படுத்தல் கட்டாயப்படுத்தல் ஆக்கசிந்தனையின் வளர்ச்சிக்கு தடையாக அமையலாம். தேவைப்படும் உரிய உள்வளர்ச்சி நிலையை அனுமதிக்காவிடில் ஆக்க சிந்தனை பாதியிலே தடைப்படலாம்.

3ம் படியில் உட்காட்சி எப்போது வேண்டுமானாலும் நிகழ முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு விஞ்ஞான கண்டு பிடிப்புக்கள் ஆதாரமாகின்றன.

4ம்படியில் முயன்று தவறல் இடம்பெறுவதுடன் பெறப்பட்ட கண்டு பிடிப்பு செயற்பாடானது சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கத்தை பொறுத்தே மதிப்பிடமுடியும்.

ஆக்கத்திறனை மதிப்பிடும் அளவு கோல்களாக புதுமை/ தனித்தன்மை, சுயசிந்தனை, சமுதாயத்தின் அங்கீகாரம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ் அளவு கோல்கள் ஆக்கத்திறனின் சிறப்பியல்புகளாகவும் கருத முடியும்.

ஆக்கத்திறனுடைய பிள்ளைகளை இனங்கண்டு ஊக்குவிப்பதற்கு, ஆசிரியர்கள், ஆக்கத்திறன் கொண்ட மாணவர்களின் குணவியல்புகள் பற்றி தெரிந்து கொள்ளல் தேவையானதாகும். அவற்றை பொதுவாக பின்வருமாறு பட்டியல்படுத்தலாம்.

✱பிள்ளைப்பருவத்தில் கொண்டிருக்கும உயர்ந்த நுண்ணறிவு ஈவு

✱சுயேச்சையான சுதந்திர செயற்பாடு

✱வகுப்பில் உள்ள மாணவரிடம் இருந்து விலகி இருக்கும் தனிமை பேணும் பண்பு

✱பரந்தளவிலான திறமைகள், நாட்டங்கள்

✱தன்னைப் பற்றிய நினைப்பு

✱புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் தயார்நிலை

✱நெகிழ் பண்பு

✱கலை இரசனை, அழகியல் உணர்வு வெளிப்பாடு

மேலும் கற்றல் கற்பித்தல் செயன்முறையின் போது பாடசாலையில் ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி மாணவர்களிடம் வெளிப்படும் இயல்புகளாக பின்வருவனவற்றை அவர்களின் துலங்கலைக் கொண்டு இனங்காணலாம்.

**ஆரம்பக்கல்வி மாணவர்கள்**

✱சுற்றாடலில் ஆர்வம்

✱நல்ல ஞாபக சக்தி

✱சொற்களஞ்சிய விருத்தி

✱பொருட்களை ஆராய்வதில் கையாள்வதில விருப்பம்

✱விடயங்களை விரைவில் விளங்கிக் கொள்ளும் ஆற்றல்

**இடை நிலை மாணவர்கள்**

✱விரைவான கிரகிப்பு

✱புதிய தொடர்புகளை இனங்காணல்

✱சொற்களஞ்சிய விருத்தி

✱கண்டு பிடிப்பு

✱புதிய கருத்துக்கள் வினாக்கள் உருவாக்கும் முயற்சி

✱தலைமைத்துவம்

✱கடினமான வேலைகளை இலகுவாக செய்யும் திறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✱சோர்வடையாது செயலொன்றை நிறைவு செய்யும் ஆற்றல்

இவ்வாறான ஆக்கத்திறன் மிக்க மாணவர்களை இனங்கண்டு வினைத்திறன் மிக்க வகுப்பறை ஒழுங்கமைப்பினை மேற்கொள்ள வேண்டியது ஒவ்வொரு ஆசிரியரதும் பணியாகும்.

அவையாவன

✱சுதந்திரமான சூழலில் தொழிற்படும் வாய்ப்பு

✱பிழையான தீர்வுகள் அல்லது முடிவுகளை கண்டிக்காமை

✱தீர்வுகளை முன்வைப்பதற்கு வற்புறுத்தல் இன்றிய வாய்ப்பு

✱கடின உழைப்பு

✱நீடித்த பயிற்சி

✱நெகிழ்ச்சியான நேரசூசி

✱நேர் நோக்கு நிலை என்பனவாகும்.

பிரச்சனைகளுக்கு புதுமையான வழிகளில் தீர்வைப்பெறல் என்பது ஆக்கத்திறனின் முக்கிய பண்பாகும். எனவே கற்பித்தல் நோக்கங்கள், கற்பித்தல் முறைகள், கணிப்பீட்டு முறைகள், கற்றலுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புக்கள் மற்றும் வகுப்பறைச் சூழல் என்பவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் மாணவர்களின் ஆக்கத்திறனை மேம்படுத்த முடியும். வகுப்பறையில் மாணவர் ஆக்கத்திறனை விருத்தியாக்க உதவும் முறைகளாக:-

◆ஏற்றுக் கொள்ளக் கூடிய சூழல் உருவாக்கம்

◆மாணவர் யோசனைகளுடன் இணைந்த செயற்பாடு

◆மாணவர்களின் சுயாட்சி ஊக்குவிப்பு

◆ஆக்கசிந்தனை மேம்பாடு தொடர்பான ஒப்படைகள்

◆மாணவர் ஆக்கத்திறன் குறித்த வெளிப்படையான கருத்து

என்பவற்றுடன் கற்பித்தலில் பின்வரும் புதிய ஆக்கபூர்வமான உத்திகளை கையாள வேண்டும்.

◆தவறான நடத்தைகளில் இருந்து விடுபட உதவுதல்

◆கடுமையான விடாமுயற்சி அவசியமென வலியுறுத்தல்

◆மாணவர்களின் ஆக்கத்திறன் பற்றி விவாதித்தல்

◆ஆக்கத்திற்கு மேலும் சவால்கள் வழங்கல்

◆பயிற்சிகள் வெறும் நினைவாற்றலை மட்டும் சோதிக்காமல் சிந்தனையை தூண்டும் வகையில் அமைத்தல்

◆கற்றலுக்கான உபகரண தயாரிப்புக்களை தயாரிப்பதற்கான வழிகாட்டல் வழங்குதல்

மரபு வழியில் விடையளிக்கின்ற முறையிலிருந்து புதிய அணுகுமுறையில் விடையளிக்கத் தூண்டுதல்.

◆மாணவர்களின் ஆய்ந்தறியும் பண்பினை தூண்டுதல்

◆குறைகூறுதல் தண்டனைகள் அற்ற நல்ல வகுப்பறைச் சூழலை அமைத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆சுயகற்றலையும் சுயதேடலையும் ஊக்குவித்தல்

மேலும் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு தடைகளாக இருப்பவற்றை இனங்கண்டு அவற்றை அகற்றுவதில் ஆசிரியர் பங்கு அவசியமானது. மாணவர்களின் ஆக்கத்திறன் வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு

◆களிப்புறும் மனப்பாங்கு

◆துருவி ஆராயும் செயல்

◆வகுப்பறைக்கு உள்வெளி பகிர்வு

◆தன் கருத்தை திணிக்காமை

◆மாணவர் கருத்துக்களை தொகுத்து அவர்களே கூற சந்தர்ப்பம் அமைத்தல்

◆வினாக்களுக்கு செவிசாய்த்தல்

போன்றனவாக அமைவதுடன் மாணவர்களின் உயர்மட்ட சிந்தனை ஆற்றல்களை வளர்க்கும் வகையில் கற்றல் கற்பித்தல் செயன்முறையை திட்டமிடுவதில் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டியது கட்டாயமானது ஆகும். தற்போது பாடசாலைகளில் அமுல்படுத்தப்படும் தேர்ச்சி அடிப்படையிலான கல்வி முறை மூலம் கண்டறிதல் மற்றும் மாணவன் கண்டுபிடித்ததை விளக்குதல் போன்ற சந்தர்ப்பங்கள் ஆக்கத்திறனுக்கு வழிகோலுகின்றன.

ஆக்கத்திறனை கலைப்பாடங்களுக்கு மட்டும் எல்லைப்படுத்தாமல் சகல பாடங்களிலும் பயன்படுத்தல் வேண்டும். உதாரணமாக உடற்கல்வியை புதிய விளையாட்டு ஒன்னை உருவாக்கல்

கணித பாடத்தில் பிரசினங்கள் தீர்ப்பதில் அல்லது புதிய எண்கோலம் ஒன்றினை உருவாக்கல் கோட்பாடுகளை முன்வைத்தல்

விஞ்ஞானத்தில் புத்தாக்க கருவி ஒன்றை உருவாக்கல்.

இவ்வாறாக கலைத்திட்டம்மூலம் கொள்கை சார்மற்றும் பிரயோக ரீதியல் மாணவர்களிடம் ஆக்கத்திறன் சிந்தனை சாதனை மட்டம், ஊக்கல், சுயநம்பிக்கை விருத்திகளை ஏற்படுத்த முடியும்.

ஆய்வுகளின் அடிப்படையில் இணைபாடவிதான செயற்பாடுகள் மூலம் ஆக்கத்திறனை விருத்தி செய்ய முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. உதாரணமாக பாடங்களுக்கான கண்காட்சி, களப்பயணம், சுவர்ப்பத்திரிகை, மாணவர் சஞ்சிகை, பாடதினம் போன்றவற்றை போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதால் மாணவர்களின் ஆக்க சிந்தனைவிருத்தி பெறுகின்றது. இதனாலேயே நாடாளவிய ரீதியில் பல்வேறு மட்டத்திலான ஆக்கத்திறன் போட்டிகள் நடாத்தப்பட்டு விருதுகள் வழங்கி கௌரவிப்புக்களை அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன.

முடிவாக தற்போதைய கற்றல்-கற்பித்தல் செயன்முறையினுள் ஆக்கத்திறன் விருத்திக்கான சூழலை கட்டியெழுப்புவதில் ஆசிரியர் வகிபங்கானது புதிய இலக்கு நோக்கு என்பவற்றை இனங்காணும் வகையில் மாற்றத்திற்கு உட்படுத்த வேண்டும். ஆக்கத்திறனை விரும்பும் ஆசிரியர் தமது கற்பித்தல் முறையியலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுவதற்கு விருப்பம் காட்ட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ஆதலால் நவீன தொழில்நுட்ப மாற்றத்துடன் இணைந்து செல்லக்கூடிய மாணவர் மைய கற்பித்தல் முறைமைகள் மூலம் பல்வேறு நுண்மதிமட்டம் மற்றும் கற்றல் பாங்குகளையுடைய மாணவர்களின் ஆக்க திறன் கற்றலை விருத்தி செய்வதற்கு வசதியளிபவராக ஆசிரியர் செயற்படுதல் முக்கியமானதாகும். மாணவர்கட்கு கண்டறிதலுக்கு தேவையான சுதந்திரம் மற்றும் நேரம் வழங்கப்படுவதுடன், மாணவர் இரசனையிலும் கவனம் செலுத்துதல் அவசியமாகும். அக்கத்திறன் கற்றல் சூழலை ஏற்படுத்துவதில் ஆசிரியர்களே முக்கிய பங்கு வகிக்கின்றனர். எனினும் அவர்களுக்கான கொள்கை உருவாக்கம் மற்றும் கல்வி நிறுவனங்களின் உதவி ஒத்துழைப்பு அவசியமாகும். ஆக்கத்திறன் மற்றும் புத்தாக்க பயன்பாட்டுக்கு அவசியயமாகும் வசதிகள் வழங்கப்படுவதுடன் பொருத்தமான விதத்தில் ஆசிரியர் பயிற்சியை நவீன மயப்படுத்துவதும் காலத்தின் தேவையாக உள்ளது.

**திருமதி.இந்துமதி ஸ்ரீகந்தராசா**
**பயிற்றப்பட்ட கணித ஆசிரியர்..**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவே குழந்தையின் முதல் ஆசான்.

குழந்தையின் வளர்ச்சியுடன் விருத்தியும் அது கருவிலிருக்கும் போதே ஆரம்பிக்கிறது. விருத்தி என்ற போது அதன் அசை திறன் மாத்திரமன்றி வேக வளர்ச்சியையும் உள்ளடக்குகிறது.

குழந்தையின் கல்வி என்பது சிறுவர் பாடசாலையிலேயே தொடங்குவதாக பலரும் தப்பாக எண்ணுகிறார்கள் ஆனால் கருவிலே மூளை உருவாகின்ற இரண்டு மாத வளர்ச்சியிலிருந்தே அதன் கல்வியும் ஆரம்பமாகின்றது. எனலாம். வளர்ச்சியும் விருத்தியடையும் மூளை குழந்தை பிறக்கும்போதே கணிசமாக விருத்தியடைந்து விடுகிறது. அம்மாவின் அரவணைப்புடனான தாய்ப்பாலூட்டலிலும் தாலாட்டலிலும் குழந்தை கிரகிக்க ஆரம்பிக்கின்றது. இந்த உலகை அம்மாவின் அன்பினூடாக காண ஆரம்பிக்கிறது. அம்மா தான் ஒரு குழந்தையின் முதலாவது ஆசிரியை எனும் போது கற்பித்தல் என்பதை விட குழந்தை கற்க உதவுதலே ஆகும். கல்விக்குத் தந்தை என நாம் பொதுவாகச் சொன்னாலும் உண்மையில் தாயே பிள்ளையின் விருத்தியில் முதலாவதாக செயற்பட ஆரம்பிக்கின்றார்.

ஒரு குழந்தை தாயுடன் வளர்வதே சிறந்தது. தாய்க்கு நிகரான பராமரிப்பாளர் எவரும் இருக்க முடியாது. தாயின் பராமரிப்பிலும் தாய்ப்பாலூட்டலிலும் இருக்கும் ஒரு குழந்தை அப்பொழுதே அபாரமாக கற்க ஆரம்பிக்கின்றது. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? "என்பார்கள். இதில் நிறைய உண்மை இருக்கிறது. இன்னொரு வகையில் சொல்வதானால் "தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்." என்பார்கள். குழந்தையின் ஆரம்பகாலம் உடல் உள வளர்ச்சியின் அத்திவாரம் எனலாம். இக்காலத்தில் மனதில் பதிவானவை காலமெல்லாம் தொடரும்.

பிறக்கும் போதே குழந்தையால் பார்க்க முடியும். கேட்கவும் முடியும், நுகரவும் முடியும். ஒலி எழுப்பமுடியும் உணரமுடியும் ஒரு தாயானவள் குழந்தையைப் பார்த்துப் பேசும் போது தாலாட்டு பாடும் போதும் அதன் மூளை தூண்டப்படுகின்றது. குழந்தையைத் தொடுதலும் அணைத்தலும் முக்கியமானது. பாலூட்டும் போது உணர்வுத் தூண்டலும் இதன் மூலம் விருத்தியும் ஏற்படுகிறது. தாய்ப்பாலுடன் அன்னை வீரத்தையும் கலந்து ஊட்டினாள் என நம் முன்னோர்கள் சொன்னதெல்லாம் இதைத் தானோ?

மூளை வளர்ச்சியுடன் இணைந்து அதன் விருத்தியும் உருவாகிறது. குறிப்பாக மூளையின் வளர்ச்சி முதல் ஐந்து ஆண்டுகளில் உச்சமாக இருக்கிறது. மூன்று வயது முதல் எட்டு வயது வரை விருத்தி துரிதமாக அதிகரிக்கின்றது. இந்தக் காலகட்டத்தில் அம்மா, அப்பா, சகோதரர், பாட்டி பாட்டன், என்போரின் அரவணைப்புடன் விருத்தி இணைந்து செல்கிறது. முன்பள்ளியிலும் ஆரம்பபள்ளியிலும் பெண்களே பராமரிப்பாளராகவும், ஆசிரியைகளாகவும் பணியாற்றுகின்றமைக்கும் குழந்தைக்கு அம்மாவை ஒத்த நெருக்கத்தை பிணைப்பை ஏற்படுத்தலே ஆகும். பின்னர் ஆசிரியர்களின் பணி தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையின் மூளை விருத்தியில் மாதா, பிதா, குரு என்போர் முக்கிய பங்காற்றுகின்றனர். இவர்களை முன்னோடியாகக் கொண்டே குழந்தைகள் வளர்கின்றன பெரும்பாலான பிள்ளைகள் அம்மாவையோ அல்லது அப்பாவையோ ஒத்ததாக இருப்பதற்கு பரம்பரை அலகுகள் ஒரு காரணம் அதற்கு மேலாக அவர்கள் ஊட்டி வளர்க்கும் விதமும் காரணமாக அமைகிறது. இதையே எடுப்பார் கைப்பிள்ளை'' என நம் முன்னோர்கள் கூறுவர். குழந்தை வளர்ந்து வரும் போது சூழலையும் சூழலில் உள்ளவர்களையும் கிரகிக்கிறது. குழந்தையின் குணம் இயல்புகளில் இது மாற்றத்தை ஏற்படுத்துகிறது. குழந்தையாக இருந்தவர்கள் சிறுவர்களாகும் போது நல்ல குணங்களை மாத்திரமன்றி தீயவற்றையும் கற்றுக் கொள்வது இயல்பே இந்த இடத்தில் தான் பெற்றோர்களின் கண்காணிப்பும் அன்பான முறையான வழிநடத்தலும் அவசியமாகின்றது. குழந்தையை கட்டுப்படுத்தும் போது அவதானமாக இருக்க வேண்டும். கண்டிப்பதோ தண்டிப்பதோ எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்.எது சரி பிழை என்பதை அன்பாக எடுத்துச் சொல்லலாம். உண்மை புரியும் போது சிறுவர்கள் சரியாக நடப்பார்கள். தண்டிக்கும் போது சிறுவர்களின் மனதில் எதிரான சிந்தனைகளே மேலோங்கும்.குழந்தைகளின் மனதில் எதிரான சிந்தனைகளோடு மேலோங்கும் குழந்தைகளின் சுதந்திரமான வளர்ச்சியையும் விரக்தியையும் உறுதிப்படுத்துவதுடன் அவர்களின் சுதந்திரம் என்பது நல்ல சிந்தனையோடு இருப்பதையும் வளர்த்தெடுத்தல் அவசியம்.சிறார்களுடன் பெற்றோர்கள் நேரத்தைக் கழிப்பதால் அவர்களைச் சரியாக வழி நடத்த முடியும். வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள் இன்னும் ஒரு படி கூடுதல் அன்பைப் பொழிய வேண்டும்.

**திருமதி நாகறஞ்சினி கஜானனன்.**
**கலைப்பட்டதாரி தமிழ்ப்பாட ஆசிரியர்**
**கிளி/தர்மக்கேணி அ.த.க பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் வழிபாடு

நாட்டார் வழிபாடு என்பது காலங்காலமாக நாட்டுப்புற மக்களால் வழிபடப்படும் வழிபாட்டு முறையாகும். இந்த சிறு தெய்வ வழிபாட்டில் வீட்டுத்தெய்வ வழிபாடு குலதெய்வ வழிபாடு இனத் தெய்வ வழிபாடு என பல வகைகள் உள்ளன. இவ்வழிபாடு காலங்காலமாக முன்னோர்களால் செய்யப்படுகின்ற சடங்குகளை அடிப்படையாக வைத்துப் பின்பற்றப்படுகின்றன.

இந்த தெய்வங்களின் வழிபாடானது அசைக்க முடியாத நம்பிக்கையின் அடிப்படையிலும் பயத்தின் அடிப்படையிலும் அவர்களின் முன்னோர்கள் கற்றுத்தந்த முறைப்படியும் நடக்கின்றது.

சிறு தெய்வ வழிபாடு திட்டவட்டமான வரையறை இல்லாதது. அதில் குல தெய்வ வழிபாடு என்பது நடுகல் வழிபாடே காலப்போக்கில் குலதெய்வ வழிபாடாக மாறியது. ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள் வழிபடும் வழிபாடு குலதெய்வ வழிபாடாகும்.

இனத்தெய்வ வழிபாடு பல்வேறு குழுவினைச் சார்ந்தவர்கள் ஓர் இனமாக நின்று வணங்கும் முறையை இனத்தெய்வ வழிபாடு என்பர்.

ஊர்த்தெய்வ வழிபாடு என்பது ஊரில் உள்ள மக்களைக் காக்கும். தெய்வங்களை வணங்கும். வழக்கத்திற்கு ஊர்த்தெய்வ வழிபாடு என்று பெயர் பெரும்பாலும் காவல் தெய்வங்களே இந்த ஊர்த்தெய்வங்களாக வணங்கப்படுகின்றன.

வெகுசனத் தெய்வ வழிபாடு என்பது சாதி, மதம், இனம் என்ற வேறுபாடுகளைக் கடந்து வழிபாட்டிற்கு வெகுசனத்தெய்வ வழிபாடு என்று பெயர். இதில் ஐயனார், சனீஸ்வரன், ஆதிபராசக்தி, போன்ற தெய்வங்கள் சிறு தெய்வவழிபாடாக இருந்து வெகுசன தெய்வ வழிபாடாக மாற்றம் பெற்றவையாகும்.

நாட்டார் தெய்வங்களை ஆண், தெய்வம், பெண் தெய்வம், கற்தெய்வம் எனவும் வகைப்படுத்தலாம். ஆண்தெய்வங்களாக வைரவர், வீரபத்திரர், காத்தவராயன், முனியப்பர், போன்ற தெய்வங்களையும் பெண்தெய்வங்களாக மாரியம்மன், காளி,பிடாரி, கொத்தி போன்ற நடுதெய்வங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்தெய்வங்களாக நாட்டார்கல், நடுகல் போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

அடுத்து நாட்டார் தெய்வ சடங்கு முறைகளாக பலியிடுதல், பொங்கல், குளிர்த்தி தெய்வம் ஆடுதல், மடை பரவுதல், போன்றவற்றைக் குறிப்பிடலாம். இந்த நாட்டார் வழிபாட்டில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளாக உடுக்கு,பறை,சல்லரி, போன்றன பயன்படுத்தப்படுகின்றன. நாட்டார் வழிபாட்டில் சடங்குகளை நடத்துபவர் பூசாரி என்று அழைக்கப்படுவார்.

இவ்வாறாக தனக்கென தனி இடத்தைப் பிடித்துக்கொண்ட நாட்டார் வழிபாடு நாட்டுப்புற மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாலும் பயத்தாலும் அன்றும் இன்றும் என்றும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. என்பதை யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

**திருமதி கௌ.ஜெயரத்தினம்**

**பயிற்றப்பட்ட ஆசிரியர். இந்துசமயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக்கல்வியும் அழகியலும்

"அழகியல்" எனும் சொல் பரந்துபட்ட விரிந்த பொருள் தரும் சொல்லாக விளங்கி வருகிறது. அழகியல் என்பது ஆங்கிலத்தில் Aesthetics எனப்படுகிறது. அதாவது இச் சொல்லானது உணர்திறன் - புலன்களின் வாயிலாக உணரும் திறன் எனும் பொருளுடைய கிரேக்கச் சொல்லில் இருந்து பெறப்பட்டது.

இன்றைய கால கட்டத்தில் அழகியல் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மனிதனின் பூரணமான வளர்ச்சிக்கும் உள நிறைவுக்கும் உடற்கல்வி அவசியமோ அதே போல அழகியல் கல்வியும் அவசியம் ஆகின்றது. கல்வி உளவியலின் படி அறிவு ,திறன், மனப்பாங்கு விருத்தியடைய அழகியல் கல்வி அடிப்படையாக அமைகின்றது. என உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

ஆரம்பக்கல்வி மாணவர்கள் கல்வியை கற்பதற்கு விருப்பத்துடனும் மகிழ்வுடனும் கற்பதற்கு ஏற்ப விளையாட்டுடன் கூடிய கற்றல், அழகியல், மூலம் கற்றல் முறைகள் பின்பற்றப்படுகிறது. அழகியல் திறன் சிறார்களிடம் இயல்பாக காணப்பட்டாலும் இத்திறனை நயப்படுத்தி வளர்ச்சி பெறச் செய்யும் போது அவர்களது எதிர்கால ஆளுமை விருத்தியடையும். அழகியலை சுவைத்தல் பயிற்சியின் வழியாக ஏற்படுத்த வேண்டும். அழகியல் செயலாற்றுகைகளை இரசிப்பதற்கு கவிதை இசை, ஓவியம், பல்வேறு துறைகளில் தமது ஆற்றல்களினூடாக சிறுவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வகையில் ஆடல், பாடல், நடித்தல், ஓடுதல், வரைதல், என்பவற்றினூடாக கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளல் அவசியமாகிறது.

இவற்றின் ஊடாக மாணவர்களது தனியான வேறுபாடுகளை அறிந்து கல்வியின் இலக்குகளையும் நோக்கங்களையும் தத்துவங்களையும் கற்பித்தலினுடாக பிரயோகிக்க முடிகிறது.

எனவே ஆரம்பக்கல்வி மாணவர்களிடையே சிறுவயதில் இருந்து

இரசனைத்திறன்

கற்பனைத்திறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கத்திறன்

தொடர்பாடல் திறன்

விமர்சிக்கும் திறன் போன்றன வளர்க்கப்படுகிறது.

ஆரம்பப் பிரிவில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் ஆசிரியர்களால் உயிரோட்டமுள்ள கற்றல் கற்பித்தலை முன் வைப்பதுடன் நாட்டின் அபிவிருத்திக்கு துணை நிற்கும் தேசப்பற்றுள்ள மாணவர்கள் சமூகத்தை உருவாக்க முடியும்.

**திருமதி அழகேஸ்வரி தேவகுமார்**

**பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்லூரி**

**கிளி/தர்மக்கேணி அ.த.க பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Why do we need English?

Language differs for humans and animals. Language is a medium we use to communicate with people. People used signs and symbols in ancient time to communicate with others. Later, lot of languages has been used by people all over the world. It varies from country to country and state to state. For example, two languages are used in Sri Lanka, but languages vary from state to state in India. When people move to another country or state, they struggle to communicate with people and fulfil their needs in their new location. Here, they need something new but common for all. They try to use global language to communicate with them. Among other languages, English might be their choice.

People can become wise in their mother tongue, because they learn it from their birth. The formal and informal education teaches it in different ways. But when it comes to other language, they struggle due to the lack of resources and the way they use. Most of the time they use mother tongue in everywhere. Thus, they don't give importance to use another language. But we should know different languages. It helps us.

Now a days, the usage of English increases greatly. It is used all over the world as a common language in common places to interact with people, and they easily understand what the other person wants to share with us.

English is also a language, and we can learn it as we learn our mother tongue. It is taught in schools, institutions, and universities. Students learn in their mother tongue until they leave school. When it comes to university, students come from different countries and parts of the country. So, lectures should be in a common medium. Therefore, they choose English to teach. All the students can understand it. When you join the company for your career, there will be the influence of the English language. You face a lot of clients and meetings, and you might submit reports too. It is obvious that we can't put it away. Here are some reasons why we struggle to use English.

- **Fear of making mistakes:** Many people are afraid of making mistakes when they Speak English. They worry that they will sound foolish or incompetent. This fear can be paralyzing and prevent people from speaking at all.

- **Lack of confidence:** Some people simply lack confidence in their ability to speak English. They may not have had much exposure to the language, or they may have had negative experiences with speaking English in the past. This lack of confidence can make it difficult to overcome the fear of making mistakes and start speaking.
- **Lack of practice:** Speaking English takes practice. The more you speak, the more comfortable you will become with the language. If you



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

don't have many opportunities to practice speaking English, it can be difficult to overcome your hesitation.

- **Cultural differences**: Different cultures have different ways of communicating. For example, in some cultures, it is considered rude to interrupt someone who is speaking. In other cultures, it is considered polite to make eye contact when you are speaking. If you are not familiar with the cultural norms of the English-speaking world, it can be difficult to know how to communicate effectively.

If you want to enrich your English language, you have to work on it. We have a lot of ways to learn English. It is taught in schools from the beginning. But most of us don't give it importance. And we should know grammar too. If you are good at language and grammar, you can easily improve yourself and shine like a star. Here are some ways to improve your English language:

- **Read different types of materials.**

**There are a lot of novels, newspapers, magazines, storybooks, and** language materials available in English. We can learn many vocabularies when we read books. They help us to use language properly. We use the same vocabulary on all occasions. If you learn new vocabulary, it helps us.

- **Work on your pronunciation.**

In Sri Lanka, English is used as a second language. We may pronounce words in an inappropriate way. It leads us misuse language. We have to practice pronounced words in a proper manner. We can learn correct pronunciation through listening and referring to software.

- **Speak little English every day.**

Most of the time, we converse with others in our mother tongue. It is very easy and understandable. When we have conversations or interactions outside of our region, it won't help us. We struggle to convey what we want. We have to practice at least simple phrases or sentences while we speak with others and encourage them to use English. Don't be afraid of making mistakes. Learn from mistakes and correct them later. It gives us confidence to use language.

- **Be a good listener.**

Even if we are not good at grammar, we can learn English. We acquire language through reading and listening. We



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

should be good listeners. We can get vocabularies and the pattern of usage of language. It also helps us improve our language.

- **Refer to the dictionary.**

  We may not understand the meaning of every word we hear or use. We should refer to a dictionary to know the meaning of the word. It helps us to use the words properly and meaningfully.

We are in a competitive world. We should be wise and know everything to be the best at everything. Language is one of the aspects. We should be wise in a few languages. English has become essential in today's world. Knowing English is not only be beneficial but also it gives us confidence and courage to face the world and improve ourselves.

**'English is a language, not knowledge."**

Raveendran Paranitharan

National Diploma in Teaching English

KN/Tharmakerny G.T.M.S



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலச் சொற்களை வாசிப்போம்

ஆங்கில மொழி என்பது அறிவு அல்ல அது ஓர் தொடர்பு மொழி. சாதாரணமாக எமது தாய் மொழியை எவ்வாறு தெரிந்துகொள்கிறோமோ அதே போல்தான் இதனை கற்று தெரியவேண்டிய அவசியமில்லை. குறிப்பாக கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் இடர்படுபவர்கள் வெளிநாடுகளில் சரளமாக வேற்று மொழிகளில் பேசுவதை காணக்கூடியதாக உள்ளது. இவர்கள் பழக்கத்தின் மூலம் தெரிந்து கொள்கிறார்கள்.

அவ்வாறான சந்தர்ப்பங்கள் எமக்கு இல்லாத காரணத்தால்தான் அதனை கற்பதன் மூலம் அறியவேண்டிய தேவை ஏற்படுகிறது. ஆங்கிலத்தில் பேசக்கூடிய சந்தர்ப்பங்கள் பாடசாலையில் ஆசிரியருடன் கதைக்கும்போது மாத்திரமே உண்டு என்பதுடன் இவ் ஊரில் அதனைத் தெரிந்து கொள்ள எமக்கு எந்த வாய்ப்புக்களோ அல்லது தேவைப்பாடுகளோ இல்லை. இதனால் தான் நாம் அதனை அறிவதற்கான எந்த முயற்சிகளும் எடுப்பதில்லை. அதனை கருவேப்பிலை மாதிரி அப்புறப்படுத்துகிறோம். உண்மையில் ஆங்கில பரீட்சையில் சித்தியடைவது என்பது இலகுவானது.

## ஆங்கில மொழி உச்சரிப்பு

ஒரு மாணவன் எழுத வாசிக்கத் தெரிந்தால் அவன் 100 வீத சித்தியைக் கூட பெறலாம். நமது மொழி நடையில் எவ்வளவோ வேற்று மொழிகள் கலந்துவிட்டன.

அதாவது Bus என்பது ஆங்கில சொல், நம் எல்வோருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் அந்த சொல் பஸ் என்பதைத்தான் குறிக்கிறது என்பதை வாசிக்கத் தெரிந்தால் மாத்திரமே அறியமுடியும். அதே மாதிரி Dance, Road, Post office போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

எனவே உச்சரிப்பு என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். மாணவர்கள் ஆரம்பக் கல்வியில் முதல் இரண்டு வருடங்களும் செவி வழி மூலம் பேச்சொலிகளை கேட்டு அறிவதுடன் அதன் பின்னர் எழுத்துக்களை இனங்கண்டு எழுத ஆரம்பிக்கவும் வாசிப்பதற்கும் ஆயத்தமாகிறார்கள்.

எழுத்துக்களை இனங்காண்பது என்பது மிகவும் அவசியமான ஆரம்பக்கட்டமாகும். அதன் பின்னர் எழுத்துக்களின் ஒலிகளை அறிய வேண்டும்.

பொதுவாக எழுத்துக்களின் உச்சரிப்பு ஒலிகள் கீழே வழங்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A | அ | J | ஜ் | S | ஸ் |
| B | ப் | K | க் | T | ற் |
| C | க் | L | ல் | U | அ |
| D | ட் | M | ம் | V | வ் |
| E | எ | N | ன் | W | வ் |
| F | ஃப் | O | ஒ | X | க்ஸ் |
| G | க் | P | ப் | Y | ய் |
| H | ஹ் | Q | க் | Z | ஷ் |
| I | இ | R | ர் | | |

| sh | ch | wh | ee/ea | th | ing | ar | or |
|---|---|---|---|---|---|---|---|
| ஷ் | ச் | வ் | ஈ | த் | ங் | ஆ | ஓ |
| ship | cheese | what | read | that | sing | star | horn |
| shop | chair | where | meet | the | ring | car | form |
| share | chick | when | jeap | three | king | park | short |

இவற்றில் உயிர் எழுத்துக்களின் அடிப்படையிலேயே மேற்குறித்த எழுத்துக்கள் மாற்றமுறுகின்றன.

**Vowels (உயிர் எழுத்துக்கள்)**

| அ | எ | இ | ஒ | அ |
|---|---|---|---|---|
| **A** | **E** | **I** | **O** | **U** |
| cat | ten | in | of | un |
| rat | egg | it | on | up |
| bat | eight | is | hot | cup |
| map | end | this | pot | run |
| hand | hen | sit | top | sun |
| sat | red | bin | shop | bus |
| that | pen | win | stop | hut |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்களை ஒலிகளாக்கும் முறை

Cat எனும் சொல்

C க்கு "க்" ஒலியும் "a" க்கு "அ" ஒலியும் "t" க்கு "ற்" ஒலியும் சேர்க்கும் போது "க்" + "அ" = க என மாற்றமடைந்து அதனுடன் "t" க்குரிய ஒலியான "ற்" இனை சேர்க்கும்போது அது கற் என வடிவம் பெறுகிறது.

மேலும்

## Ten என்பது

ற் + எ = றெ என மாற்றமடைந்து "n" க்கு "ன்" ஒலியும் சேர்த்து றென் எனவும்

## Sun என்பது

ஸ்+ அ = ஸ என மாற்றமடைந்து "n" க்கு "ன்" ஒலியும் சேர்த்து ஸன் எனவும்

ஒலிவடிவம் பெறுகின்றன.

இவ் உச்சரிப்பு ஒலிகள் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கும் என்று கூறமுடியாது. சில சந்தர்ப்பங்களில் வேறு ஒலிகளை எழுப்பக்கூடியனவாகவும் இருக்கும். அவை சில எழுத்துக்கள் இணையும்போது வேறு ஒலிகளை எழுப்பும் தன்மையைக் கொண்டிருக்கும். உதாரணமாக come எனும் வினைச் சொல் கொம் என வாசிக்காது கம் என ஒலிவடிம் வருவதற்கான காரணம் இறுதியில் வரும் "e" எனும் எழுத்து ஒலி வடிவத்தை மாற்றுகின்றது. மேலும் ஆழமாக மொழியியலை ஆராயும்போது வேறு சொற்களின் ஒலி மாற்றங்களுக்கான காரணங்களை அறியமுடியும். பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரை எழுத்துக்களை வாசிப்பதற்கு இவ் ஆரம்பகட்ட ஒலி முறைகள் போதுமானவையாக இருக்கும். முரண்பாடான சொற்களின் ஒலிகளை பயிற்சியின் மூலம் வழக்கப்படுத்திக்கொள்ளலாம்.

**மாற்றமுறும் சில சொற்கள்**

Bread - ப்றீட் அல்ல ப்றெட்

Game - கம் அல்ல கேம்

Some - சொம் அல்ல சம்

Good - குட் மற்றும் Book புக் என்பன ஒரே மாதிரி வாசிக்கப்படும்போது

Room -றும் என வாசிக்காது றூம் எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Roof – றுூ.்ப் என வாசிக்காது றூ.்ப் எனவும் "R" இற்குரிய ஒலிகள் மாற்றமுறுகின்றன.

அதே மாதிரி இறந்தகால வினைச்சொற்களுக்கு "ed" சேர்க்கும்போது அவை "e" இக்குரிய உச்சரிப்பினை போட்டு எல்லா வினைச்சொற்களையும் வாசிக்கலாகாது.

உதாரணம்

Worked, Decked, Cooked, Played (வோர்க்ட், டெக்ட், குக்ட், ப்ளேய்ட்)

மேற்படி உச்சரிப்புக்கள் இவ் அட்டவணைப்படி மாணவர்கள் சில சொற்களை தவறாக வாசிக்கும் சந்தர்ப்பங்களை நாம் பல இடங்களில் காண்கின்றோம். ஆயினும் அவர்கள் அவ்வாறு உச்சரிக்கும் போது கேட்கும் எமக்கு அவர் இதைத்தான் சொல்கிறார் என்பதை புரியக்கூடியதாக இருக்கிறது. அந்தச் சந்தர்ப்பங்களில் எம்மால் திருத்தப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு சரியான உச்சரிப்புக்களில் வாசிக்க வழிப்படுத்தப்படுகிறார்கள்.

சூழலில் எமது தாய்மொழி தவிர வேறு எந்த மொழிகளும் எமக்கு பரிச்சயம் இல்லாத நிலையில் கற்றல் மூலமே வேறு மொழிகளை பயிலும் நிலை காணப்படுகின்றது. அத்தகைய நிலையில் மொழிகளை பயில்வதும் அவற்றை மனதில் நிலை நிறுத்துவதும் சற்று கடினமே. எப்பொழுதும் அவை ஞாபகத்தில் இருக்கவேண்டும் எனில் இத்தகைய முறைகளில் வாசித்து பழகலாம்.

- பாடப் புத்தகங்களை தினமும் இரண்டு வரிகளேனும் வாசித்தல்.
- இலகுவான மொழிநடையில் உருவாக்கப்பட்டிருக்கும் கதைப் புத்தகங்களை இயன்றளவுக்கு வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டிருத்தல்
- வீதி வழியே பயணிக்கும் போது பெயர்ப் பலகைகளில் உள்ள ஆங்கில சொற்களை வாசிக்கும் வழக்கத்தை கொண்டிருத்தல்.
- ஆங்கில பத்திரிகைகளை படித்து பழகல்

இவற்றில் எவற்றினையேனும் கடைப்பிடிக்கும் பட்சத்தில் குறித்த மொழி எமது மூளையில் பதிந்து நிலைத்திருக்கும் தன்மையை பெற்றுவிடும்.

உச்சரிப்புக்கள் சரியாக வராதபோது ஆசிரியரிடம் தெளிவுபடுத்தலாம் அல்லது இணைய வலைத்தளத்தின் உதவியுடன் சுயமாக தாமே தெரிந்துகொள்ளலாம். இதைத் தவிர தற்பொழுது கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டிருக்கும் Read to me - Student edition App இனை தரவிறக்கம் செய்து மாணவர்கள் தமது ஆங்கில அறிவினை மேம்படுத்தலாம். இது ஒவ்வொரு பெற்றோரும் அறிந்திருக்கவேண்டிய விடயம். ஸ்மார்ட் போனினை பிள்ளைகளுக்கு குறிப்பிட்ட நேரம் வழங்கி அவர்களது மேற்பார்வையுடன் பிள்ளைகளை சுயமான கற்றலுக்கு ஈடுபடுத்துவதற்கு பெற்றோரது ஒத்துழைப்பு அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மால் பிள்ளைகளுக்கு குறித்த விடயம் தொடர்பாக மாணவர்களிடம் தெரிவிக்கும் போது மாணவர்கள் கூறும் விடயம் பெற்றோர் தம்மிடம் போன் தருவதில்லை என. மாணவர்கள் தடம் மாறுவதற்கு போன் ஒரு காரணம் என்பதை மறுக்கமுடியாது ஆனால் அவற்றில் எவ்வளவோ பயனுள்ள விடயங்கள் உள்ளன. இதனை பெற்றோர்கள் தமது மேற்பார்வையின் கீழ் குறித்த நேரம் ஒதுக்கப்பட்டு அவர்களது கண்பார்யையின் கீழ் பாவிப்பதற்கு அனுமதியளிக்கலாம்.

முன்னைய காலங்களில் போதிய வசதிகள் இல்லாத காரணத்தால் பிற மொழிகளை கற்பது கடினமாக காணப்பட்டது. தற்பொழுது அவ்வாறல்ல. பல்வேறுபட்ட வழிகளில் கற்கக்கூடிய வாய்ப்புக்கள் இன்றைய மாணவர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. அந்த வகையில் Read to me App ஆனது மிகவும் பயனுள்ள App ஆகும். இதில் ஒவ்வொரு வகுப்பினருக்கும் அவர்களுடைய ஆங்கில வாசிப்புப் புத்தகம் (Pupils Book) தரவிறக்கம் செய்து ஒவ்வொரு சொற்களினதும் உச்சரிப்பு, அதன் தமிழ் அர்த்தம் மற்றும் சொற்களின் அர்த்தத்தினை படத்தின் ஊடாகவும் விளக்கம் மேலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஒன்றை மட்டும் மாணவர்கள் மனதில் வைத்திருக்கவேண்டும். இவ் ஊருக்குள் பிறந்து இவ் ஊருக்குள்ளேயே தங்கள் வாழ்க்கையை கழிக்கப் பிறந்தவர்கள் அல்லர். சாதிக்கப்பிறந்தவர்கள். தமது நோக்கம் இலக்குகள் அடைய வேண்டும் எனில் வெளியே வரவேண்டும் ஏனையவர்களுடன் தொடர்பாடலை மெற்கொள்ளவேண்டும். உயர்கல்வி, தொழில் நிமித்தம் மருத்துவ தேவை நிமித்தம் என பல்வேறுபட்ட தேவைகளுக்காக நாம் எமது மொழி கடந்து செல்லவேண்டிய தேவைப்பாடு நிச்சயம் ஏற்பட்டுக்கொண்டு இருக்கின்றன அந்த வகையில் வேற்று மொழிகளை தெரிந்து கொள்வது 21ம் நூற்றாண்டு மாணவர்களுக்கு மிக மிக அவசியமான ஒன்றாகும்.

ஒவ்வொரு மாணவர்களது பெற்றோரும் தமது பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பும்போது கனவுகளுடனும் எதிர்பார்ப்புக்களுடனும்தான் அனுப்பிவைக்கின்றனர். அவர்களது நோக்கம் இந்தப் பாடசாலையுடன் தமது பிள்ளைகளது வாழ்க்கை நின்றுவிடாது மேலும் உயர்ந்து கொண்டு போகவேண்டும் என்பதுதான். குறைந்தது க.பொ.த. சாதாரண தரம் தவற விட்ட மாணவர்களது பெற்றோர் எவரும் தமது பிள்ளைகளை நினைத்து பெருமைப்படப்போவது கிடையாது.

மாணவர்கள் க.பொ.த (சா/த) இல் ஆங்கில பாடத்தில் B தர சித்தியை பெற்றால் அவர்கள் உயர் தொழில்நுட்பக்கல்லூரிகளில் 2 அல்லது $2^{1}/_{2}$ வருட ஆங்கில டிப்ளோமா செய்வதன் மூலம் கட்டாயமாக தொழிலைப் பெற்றுக்கொள்வது உறுதியாகும். அத்துடன் உயர் கல்வி நிமித்தம் வெளிநாடு செல்வதற்கும் ஆங்கில மொழியில் குறித்த புள்ளியிடலுக்கு மேல் எடுப்பவர்களே கருத்திற் கொள்ளப்படுகிறார்கள். வெளிநாடு செல்லல் என்பது தற்பொழுது எல்லோராலும் மிகவும் தீவிரமாக மேற்கொள்ளப்படும் தேடலாகும். ஆனால் இனி வரும் காலங்களில் நாம் இனப் பிரச்சனைகளைக் காரணம் காட்டி செல்லமுடியாது திறனும் மொழிப் புலமையும் கொண்டவர்களுக்கே வாய்ப்புக்கள் கிடைக்கக் கூடியதாக இருக்கும். எனவே வாசிப்போம் பயனைப் பெறுவோம்.

**திருமதி.ச.சரிதா**

**ஆங்கில பாட ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையாரின் நூல்கள் அறவிழுமியங்களை சித்தரிக்கும் சிறந்த படைப்பாகும் - ஒரு நோக்கு

மனித சமூகத்தை உயர் நிலையில் வழிப்படுத்த பல்வேறு சாதனங்கள் கருவிகளாக உள்ளன. அவ்வகையில் மனிதனை மேம்படுத்துவதில் இலக்கியங்கள் மிக முக்கிய வகிபாகம் பெற்றுள்ளன. அதிலும் அறநூல்கள்,நீதி நூல்கள், கொண்டிருக்கும் வகிபங்கு மிகவும் காத்திரமானது. இன்புறுத்தல், வழிப்படுத்தல் என்ற இரு தளங்களில் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. இதில் "வழிப்படுத்தல்" என்ற தளத்தில் வாழ்க்கைக்கு வழிகாட்டும் உன்னத கருத்துக்களைக் குறித்த அற நீதி நூல்கள் விளங்குகின்றன. அதிவீரராம பாண்டியன், ஔவையார், உலக நாதர் முதலான பலர் இத்தகைய இலக்கியங்களையும் படைத்தருளினார். இதில் ஔவையாரின் அற நூல்கள் கற்றுத் தரும் விழுமியங்களை சிறிது நோக்கலாம்.

"மூதுரை" என்பதுவே நூலின் பெயர் இதன் முதலாவது பாடல் "வாக்குண்டாம் ..."என்று ஆரம்பிப்பதால் மூதுரை என்ற நூலை "வாக்குண்டாம்" என்று அழைப்பது வழக்கமாகிவிட்டது, இந்நூல் 30 வெண்பாக்களால் ஆனது. விநாயகரைத் தொழுவதால் வாக்கும் மனமும் செல்வச் செழிப்புமுண்டாகும். பிறருக்குச் செய்யும் உதவிக்கு பிரதியுபகாரம் வேண்டாம். நல்லவர்க்குச் செய்யும் உபகாரி கல்மேல் எழுத்துப் போன்றது. என்ற கருத்துக்களை

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்..."

"நன்றி ஒருவருக்குச் செய்யுக்கால்"

"நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்.."

என்னும் பாடலடிகள் எடுத்துக்காட்டி நிற்பதனைக் காணலாம். இக் கருத்துக்கள் ஊடாக "மனிதனாகப் பிறந்தவனுக்கு தெய்வவழிபாடு முக்கியம் "என்று செய்வான் என நினையாமல் பிறருக்கு உபகாரம் செய்வது இன்றியமையாததாகும்." "நல்லவர்களுக்குச் செய்யும் உபகாரம் நிலைத்து நிற்கும்" ஆகிய அறவிழுமியக் கருத்துக்கள் மிக உன்னதமானவை.

மேலும் ஆக வேண்டிய காலத்திலே தான் கருமங்கள் நிறைவுறும் என்றும் மனதை ஆற்றுப்படுத்தல், நல்லார் உறவு என்பன எண்ணி நடப்பதற்கேற்ப சிந்தித்துச் செயற்படல் வேண்டும் என்றும் கூறப்படுகின்றன. இதனை ஔவையார் தனது மூதுரையில்

"அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி

எடுத்த கருமங்கள் ஆகா...." எனவும்

'நல்லாரைக்காண்பதுவும் நன்றே

.நலமிக்க நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே...."எனவும் பாடலடிகள் எடுத்துக்காட்டும் அற விழுமியக் கருத்துக்களை நோக்கலாம்.

அதோடு கல்வியறிவின்மை மரத்துக்குச் சமனாகும். என்பதால் கற்க வேண்டும் என்றும் கல்வியறிவற்றவன் கவிதையை நயப்பது பொருத்தமற்றது. என்றும் கல்வியின் பெறுமதி சார்ந்த அறவிழுமியக் கருத்துக்கள் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியம் பெறுகின்றது. இக்கருத்துக்கள் புலப்பட ஔவையார் தனது மூதுரையில்

"கலையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்-சபை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டாதவன் மரம்"- எனவும்

"பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போலுமேகல்லாதவன் கற்ற கவி- எனவும் குறிப்பிடுவதை நோக்கலாம்.

அதே போன்று

"அடக்குமுடையா ரறிவிலார் என்றெண்ணிக்
கடக்கக் கதவும் வேண்டா..."எனும்

பாடலடியில் இருந்து அறிவு, பெற்றவர் அடக்கமாய் இருப்பர். அதனால் அவரை முந்த நினைக்க கூடாது என ஔவையார்கூறும் அறவிழுமியங்கள் சாலச் சிறந்தது.

அடுத்து ஔவையார் அருளிய "நல்வழி' என்னும் நீதி நூல் 40 வெண்பாக்களால் ஆனது. இந்நூலும் விநாயகர் காப்புடன் ஆரம்பமாகின்றது. பாவம் நீங்க புண்ணியம் செய்ய வேண்டும். பிறருக்கு கொடுத்து வாழ்பவரே உயர்ந்த சாதியர், கொடாதவர், இழிவான சாதியர் முதலிய அறவிழுமியங்களை நல்வழி எடுத்துக் கூறுகிறது. இதனை ஔவையார் "புண்ணியமாம்.

பாவம் போம் போன நாட் செய்தவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள்..."
எனவும்
"சாதி இரண்டொழிய...இட்டார் பெரியோர்
இடாதார் இழிகுலத்தோர் பட்டாங்கிலுள்ள படி" எனவும் கூறியிருப்பதனைக் காணமுடிகின்றது.

அத்துடன் நிலையாமை அறத்தை சிறப்பாக வலியுறுத்துகின்றதனைக் காணலாம். அதாவது ஆண்டுகள் கணக்காக அழுது புருண்டாலும் இறந்தவர் திரும்பி வரார். ஒரு நாள் உணவைக் கூட தவிர்க்கமுடியவில்லை. என்பதனால் வயிற்றுடன் கூடி வாழ்வது அரிது அரசபணி முதலான எப்பணிக்கும் பழுதுண்டு உழவுத்தொழிலே மேன்மையானது. சிவாயநமவென்று இறைவனை வணங்கி வாழ்தல் என நல்வழி பகரும் கருத்துக்கள் மனிதனிடத்தில் காணக்கூடிய அழுக்காறுகளைக் களைந்து நல்லவற்றின் பாற் செலுத்துகின்ற அறவிழுமியக் கருத்துக்களாகும்.

நீதியாராயும் சபையில் பொய்சாட்சி சொல்வது தவறு நெற்றியிலே திருநீறு வேண்டும். வீட்டுக்கு நல்ல மனையாள் வேண்டும். வாழ்க்கைக்குச் சகோதரர் வேண்டும். என நல்வழி பகரும் வாழ்க்கை நலன்கள் போற்றத்தக்கது. இதனை ஔவையார்

"நீறில்லா நெற்றி பாழ் நெய்யில்லா வுண்டி பாழ்
ஆறில்லா வூருக் கழகு பாழ் - மாறில்...." எனக் கூறுவதில் இருந்து அறியலாம். அது மட்டுமன்றி

"உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பது கோடி நினைந்து..." எனும் பாடலடியானது உள்ளது. போதும் எனத் திருப்தியடையாதவர். துன்பத்தையே அடைவர். என்னும் அக்கருத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது

இவற்றோடு பாறைபோல வலிமையாக இருப்பதை விட பஞ்சுபோல மென்மையாக இருப்பது மேலென்றும் நடைமுறையில் நாம் காணத்தக்க உபகரணங்களோடு நல்வழி தரும் அறவிழுமியக் கருத்துக்கள் சிறப்பானவை.

"ஆத்திசூடி" ஒவ்வோர் அடியில் அமைந்த நூல் அகர வரிசையில் அமைந்தது. சிறுவர்களுக்குப் பாடநூலாக சிறுவர் இலக்கியங்களாக இளம் பராயத்திலே போதிக்கப்படும் சிறப்பு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், முதலிய நூல்களுக்கு உண்டு. "அறம் செய்" என்று கட்டளை இடாமல் 'அறம்செய விரும்பு' என்று மென்திறன் வகையால் கூறும் மாண்பு சிறப்பிற்குரியது. கொடைக்குத் தயக்கம் வேண்டாம். ஊக்கத்தைத் தவற விடக்கூடாது. நீ இன்னொருவரிடத்தில் கையேந்தாமல் இரப்பவர்க்குக் கொடுத்து வாழவேண்டும். உலக நடையறிந்து ஒழுக வேண்டும். கற்பதை விட்டுவிடக்கூடாது. செய்யும் காரியங்களைச் செப்பமாகச் செய்ய வேண்டும். அறிவைத் தரும் நல்ல நூல்களையும், கற்க வேண்டும். என்று மனிதனை வாழ்க்கையில் இருந்து புடம்போட்டு தூய்மைப்படுத்தும் பல விடயங்களை ஆத்திசூடி பட்டியலிடுகின்றது. உதாரணமாக

"அறம் செய விரும்பு ஆறுவது சினம்.."
அக்கம் சுருக்கேல்"

எனக் கூறுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

மேலும் நீ செல்வங்களினாலே பிறருக்கு உதவிசெய், தலைக்கு எண்ணெய் இட்டு சனி, புதன், நீராடு இன்பம் தோன்றப் பேசு, வெறுமையாய் கிடக்கும் படி பெரிய வீட்டைக்கட்டாதே, நல்ல சிநேகிதத்தை அறிந்து பழகு தந்தை தாயை எப்பொழுதும் மறவாதே, ஒருவர் உனக்குச் செய்த நன்றியை மறவாதே பிறர் குடியில் பொருளைக் கவர்ந்து வாழாதே, தர்மத்தற்குப் பொருந்தாதவற்றைச் செய்யாதே.

கபட வார்த்தைகளப் பேசாதே, அறம் செய்வதை ஒருபோதும் மறவாதே சினந்து பேசுவதை மறந்துவிடு, விரதமாயிரு, கீழ் குணத்தை அகற்று, மேல் குணத்தை கைவிடாதே. இவ்வாறு 108 ஓரடிக் கருத்துக்களாக ஆத்திசூடியை ஔவையார் ஆக்கியிருப்பது சிறப்பானதொன்றாகும்.

இந்த வகையில் "அறம்செய்ய விரும்பு" என்ற வார்த்தை "அ" எழுதத் தொடங்கிய நாள்முதல் கற்றுக்கொண்ட தாரக மந்திரம் அறம் கூறும் நூல்களை இவ் அகிலத்திற்கு நிறைவாகத் தந்தவர்களில் ஔவையாரும் ஒருவராவார். அன்பு, இரக்கம், கருணை, நேசம், பாசம், பாவம், புண்ணியம், செய்வது செய்யாதது பற்றிய கருத்துக்களை நம் வாழ்வோடு இணைப்பதற்காக அறச்சிந்தனைகள் போதிக்கப்பட்டுள்ளன. இதனை நாம் மனனம் செய்வித்து மனதில் நிலை பெற வைத்தல் சாலச்சிறந்தது.

**திருமதி சியாமளா மதிவண்ணன்**

**நடன பாட ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாலைப் பாதுகாப்பு

சாலை விபத்துக்கள் நம்முடைய தேசத்திற்கும் சட்டத்திற்கும் ஒரு பெரும் சவாலாக உள்ளது. சாலை விபத்துக்கள் பற்றிய செய்திகளை தொலைக்காட்சிகள் மூலமாகவும் தொலைபேசி வாயிலாகவும் அதிகமாகக் கேள்விப்பட்டு வருகின்றோம். அதுவும் இன்றைய சூழலில் அதிகமான சாலை விபத்துக்கள் நடை பெறுகின்றன. நாம் இந்த தொகுப்பில் சாலை பாதுகாப்பின் அவசியத்தை கட்டுரை வடிவில் பார்க்கலாம்.

மனிதன் தன்னுடய தேவைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்காக கண்டு பிடிக்கப்பட்டது தான். வாகனங்கள் அதற்குப் பதிலாக பூமியில் வாழக்கூடிய விலங்குகள் முதல் மனிதர்களின் உயிருக்கு ஆபத்து தரக்கூடியதாக உள்ளது. சாலையில் ஏற்படும் பெரும்பாலான விபத்துக்களுக்கு முக்கியமான காரணம் சாலை விதிகளை மீறுவது தான்.

மனிதர்களின் அலட்சியம் மற்றும் அவசரத்தால் பல உயிர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன. சாலைகளில் வண்டியை ஓட்ட வேண்டும். என்ற ஆர்வம் உள்ள பலருக்கு வாகனத்தை எப்படி ஓட்ட வேண்டும் என்று தெரிவதில்லை. இது போன்ற விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு சாலை பாதுகாப்பு மிகவும் முக்கியமானதாகும்.

சாலை விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு சில அடிப்படையான சாலை விதிகளை தெரிந்து வைத்திருக்க வேண்டும். நடை மேடையைப் பயன்படுத்துதல், வெள்ளைக்கோடுகள் போடப்பட்ட இடத்தில் சாலையைக் கடப்பது வாகனங்களை சரியான இடத்தில் நிறுத்துதல் போன்ற அடிப்படை விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்.

சாலையில் இருக்கும் போக்குவரத்து சைகை (Traffic light) நிறங்களை தெரிந்து வைத்திருக்க வேணடும். அத்துடன் வாகனங்கள் ஓட்டும் போது தலைக்கவசம் அணிந்து கொள்வது இரு சக்கர வாகனங்களில் இருவருக்கு மேல் பயணம் செய்யாமல் இருப்பது மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டாமல் இருப்பதன் மூலம் அதிகமான சாலை விபத்துக்களை தடுக்க முடியும் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் பள்ளிகள் இருக்கும் இடத்தில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களில் வண்டியை மெதுவாக ஓட்டுவதற்கு பதிலாக வேகமாக ஓட்டுவதாலும் சாலை விதிகளை மீறுபவர்களை காவல் துறை தண்டிக்காமல் இருப்பதாலும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதாலும் சாலை விபத்துக்கள் நடைபெறுகின்றன.

எனவே ஒவ்வொரு மனிதரின் உயிரும் விலை மதிப்பு வாய்ந்தது. மனிதர்களின் உயிர்மட்டும் அல்ல பறவைகள்,விலங்குகள், என அனைத்து உயிர்களும் விலை மதிப்பு பெற்றவை. எனவே சாலையில் வாகனங்களை கவனத்துடன் ஓட்டி விலை மதிப்பான உயிரைக் காப்போம்.

**திருமதி இந்துமதி உதயகுமார்**

**பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றத்தின் ஊற்றுக்கால் கல்வி

"'கல்வி கற்றவரை எளிதில் திருப்பலாம் ஆனால் ஏமாற்ற முடியாது எளிதில் ஆழலாம். ஆனால் அடிமைப்படுத்த முடியாது. எனும் அறிஞர் புறோகோவின் வாழ்க்கைத் தத்துவம் மனித வாழ்வில் நாம் கண்ணூடாக காணும் உண்மை உயரிய நிலையை அளிக்கும். இக் கல்வியைப் பெறுவதனால் மனிதன் மாபெரும் அழிவில்லாச் செல்வம் உடையவனாகின்றான். அழிவிலாச் செல்வமாகிய இக்கல்வியைக் கற்றவன் உயர்வான சிறப்பைப் பெறுகின்றான் அதனால் அவன் தனது தேசத்தில் மட்டுமல்லாமல் செல்லும் இடமெல்லாம் சிறப்புப் பெறுகின்றான். அரசனுக்கு தன் தேசத்தில் மட்டுமல்லாமல் செல்லும் இடமெல்லாம் சிறப்புப் பெறுகின்றான். அரசனுக்கு தன் தேசத்தில் மட்டுமே சிறப்பு பிற தேசத்தில் சிறப்பில்லை. இந்நிலையில் அரசனோடு அறிவுள்ளவனை ஒப்பிட்டுப் பார்க்கும் போது கல்வியறிவு உடையவனே சிறப்புக்குரியவன் இதனை

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையவன் -மன்னற்குத்
தன் தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோரக்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு"

என்று நல்வழிப்பாடல் கூறுகிறது. இத்தகைய சிறப்புக்குரிய இக் கல்வியை பெற்றவனை பொறாமை கொண்டவராலும் நெருப்பினாலும் அழித்துவிடமுடியாது. அரசராலும்,திருடராலும் அபகரித்து விட முடியாதது. பிறருக்குச் கொடுக்க கொடுக்க நிறைவைத்தருவது, குறைவுபடாமல் பெருகுவது இது ஒவ்வொருவரது உள்ளத்திலும் நிறைந்துள்ளது. என கூறுகிறது.

இச் செல்வத்தை பெறுவதால் தாழ் குடியில் பிறந்தவனும் உயர்குடியில் பிறந்தவனின் அந்தஸ்தைப் பெற முடியும் இதனை

"களர் நிலத்து பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைந்த நிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோராயினுங் கற்றறிந்தோரைத்
தலை நிலத்து வைக்கப்படும்"

எனும் நாலடியார் பாடல் கூறுகிறது. மேலும் அப்பாடல் இழிந்த நிலத்தில் பிறந்த உப்பு எவ்வாறு நல்ல நிலத்தில் விளைந்த நெல்லின் அந்தஸ்தைப் பெறுகிறதோ அது போல கல்வி அறிவுடையவன் நல்ல குலத்தவனது அந்தஸ்தைப் பெற்றுவிடமுடியும் எனும் கருத்தை நாம் இப்பாடலூடாக உணர முடிகின்றது.

உயர்வைத் தரும் அழிவில்லா இக்கல்வியைப் பெறுவதற்கு மனிதனுக்கு புத்திநல்ல தந்தையாகவும் பொறுமை சிறந்த மந்திரியாகவும் அன்போடும் விருப்போடும் கற்றல் சிறந்த மந்திரியாகவும் அன்போடும் விருப்போடும் கற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த பாக்கியமாகவும் சிறந்த நல்ல குணங்கள் அதற்கு சிறந்த துணையாகவும் இருத்தல் வேண்டும் என ஆசாரக்கோவை நமக்கு வழிகாட்டுகின்றது.

ஆனால் நம்மில் பலர் கல்வி கற்க வசதியில்லை. பொருத்தமான அறிஞர் இல்லை என ஒதுங்கி விடுகின்றார். ஆனால் பிச்சை எடுத்தாலும் கற்றலே சிறப்பானது அக்கல்வியைப் பெறாது விட்டால் உயர்குடியில் பிறந்த ஒருவன் தாழ்வான குடியில் பிறந்தவனாக ஆகிவிடுவான் என்பதனை உணர்வதில்லை. இவ் வரிய கருத்தை

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே" (கொன்றை-35)

எனும் கொன்றை வேந்தன் பாடல் அடிகள் எடுத்தியம்புகின்றன. இக் கல்வியை இளமையிற் பெறுவது சாலச் சிறந்தது. "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"ஔவையார் கூறுகின்றார். இத்தகைய சிறப்பியல்புக்குரிய கல்வியை பெற ஒவ்வொரு மனிதனும் முயற்சிக்க வேண்டும். கற்றறிந்தோர் மற்றவருக்கு கற்பித்தலாகாது இருப்பது குற்றம். கற்றறிந்தோர் கற்றது போல கடமையை உணர்ந்து நடவாமை குற்றம். எனும் கருத்தையும் ஆசாரக்கோவை எடுத்துக்கூறுகிறது. இக் கருத்தை

"கற்றறிந்தவர் கற்றறியார்க்குக்
கற்பியாமலிப்பதும் குற்றமே
கற்றறிலாதவர் கற்றரிந்தோடரிங்
கற்றிடாமல் இருப்பதும் குற்றமே
கற்றறிந்தவர் கற்றவை போலவே
கடமையாய் நடவாமையுங்குற்றமே
தற்பதம் தனிவாய்ந்தமுகமதுத்
தம்பிமாமரைகாயது காயரே" (ஆசாரக்கோவை-05)

எனக் கூறுகின்றது. மனித குலத்தின் விடிவிளக்காய் கலங்கரை விளக்கு கடற்பணிக்கு உதவுதல் போல கல்வியானது மனிதர்க்கு உதவுகின்றது. இப்பிறப்புக்கு பயன்தரக்கூடியது. கற்றதன் படி ஒழுகி கல்விக்கும் நமக்கும் சிறப்புத்தரும் வகையில் நமது மனித வாழ்வை அமைத்து தான தருமங்களை செய்வதைவிட ஏழை ஒருவனுக்கு கல்வி அறிவித்தல் ஆயிரம் கோடி புண்ணியம் என்ற பாரதியின் கருத்தை ஏற்று வாழ்வோம்.

**பாமினி சந்திரகுமார்**
**ஆரம்பக்கல்வி ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விவசாயக் கழகம்



சுகாதாரக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆங்கில மன்றம்



மும்மொழி மன்றம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேலைத்தேய வாத்தியக் குழு



பழைய மாணவர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பாடசாலை

எமது பாடசாலையாம்!
கிளி/ தர்மக்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபது தனில் ஆரம்பித்து
ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து மூன்றில் - தனக்கோர்
இடம் பிடித்தது

எனது மூதாதையர் படித்த பாடசாலை -அதிலும்
நான் கற்கிறேன் என்று பெருமையே!
எனது அம்மா அம்மம்மா வழி வந்த பாடசாலை
எனது பூட்டன் அமரர் வேலுப்பிள்ளை ஊக்கமளித்து
உதவிய சொத்து

பல்லாயிரம் மாணவர்கள் படித்து பட்டம் பெற்ற பாடசாலை
கற்றல் மட்டுமன்றி இணைகலைச் செயற்பாடு மறைக்கலைத்
திட்டத்தினையும் தன்னகத்தே கொண்ட பாடசாலை
இணைகலைச் செயற்பாட்டில் தேசியத்தையும்
எட்டிய பாடசாலை - எமது பாடசாலை

காலையில் எழுந்து அழகான சீருடை அணிந்து
அம்மாவின் கையால் திரட்டித்தந்த சாப்பாட்டை உண்டு விட்டு
நண்பர்களோடு பள்ளிக்குள் நுழைகிறோம்
அன்பான ஆசிரியரோடும் எம்மை ஊக்கப்படுத்தும்
அதிபரோடும் பாடத்தைக் கற்கிறோம்.

இறைவனை விட இன்னும் ஒரு படி மேலே போகிறாள்
நம்மை பெற்ற தாயை விட உயர்ந்தவள் எமது பாடசாலை
எனது அம்மா என்னை பத்து மாதம் தான் கருவறையில் சுமக்கிறாள்
பாடசாலை தாயோ எம்மை ஆண்டாண்டு காலம் தனது
வகுப்பறையில் சுமக்கிறாள்

பாடசாலையின் வகுப்பறை எனது இரண்டாம் கருவறை
அம்மாவின் கருவறைக்கு பின்பு- நான் கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் கருவறை எனது பாடசாலை
இன்று எனது பாடசாலைக்கு அறுபது வயது
கவிமழையினால் உன்னை வாழ்த்தி நிற்கிறேன்.

ஆண்டாண்டு காலம் நிலைத்து நிற்கும் -தாயே
போற்றி வணங்குகின்றேன் உன்னை
என்னை ஆளாக்கிய என் தாயே- உன்னை
தலை வணங்கி முத்தமிட்டு நன்றி சொல்கின்றேன்
பல்லாண்டு வாழ்க பல்லாண்டு வாழ்க

**வி.மேஜிகன்**
**தரம்03**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றும் இன்றும்

இலங்கை திருநாட்டில் வடமாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பசுமை நிறைந்த வயல்வெளியும் பார்ப்போரைக் கவரும் தென்னந்தோப்பு,பனந்தோப்புடன் முக்கனி நிறைந்த சோலை தனில் தர்மக்கேணி கிராமத்தில் அமைந்துள்ளது. எம் பாடசாலை கிளி/ தர்மக்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

ஆரம்ப காலத்தில் தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரை எமது மூத்தவர்கள் கல்வி கற்று வந்தனர்.பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டால் மேலும் தரம் உயர்த்தப்பட்டு தரம் எட்டு வரை ஆரம்பிக்கப்பட்டது அப்போது எமது பெற்றோர்கள் கற்றலில் ஈடுபட்ட காலமது அக்காலத்தில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் அடிக்கடி அகதி வாழ்வு எம்மவர்க்கு

எமது பாடசாலை இரண்டு கட்டத்துடன் ஒரு ஓலைக்குடிசையுடனும் இயங்கி வந்தாலும் புழுதி படிந்த வகுப்பறையில் புன்னகையுடன் கற்ற காலம் எம் பெற்றோர்கள் காலம். முற்றம் கூட்ட பூம்பாளையும் முற்றும் கட்டி அள்ளினோர் எம்பெற்றோர்கள் ஆறு மணியானதும் அடுத்த பாடசாலை மாணவர்கள் போக முன்பு ஓடோடி போய் குழம்பாய் குளத்தில் 1 நிமிடம் குளித்து விட்டு சூரியன் மேலெழ முன்பு முதல் நாள் அலசி வைத்த வெள்ளாடையை அணிந்து கொண்டு அம்மா தந்த பழஞ்சோற்றுடன் அக்கம் பக்கம் எல்லோரும் சேர்ந்து ஓட்டமும் நடையுமாய் சென்றிடுவர் பள்ளிக்கு

ஆசிரியர் வருகைக்காக அனைவரும் காத்திருப்பார் அவர்களின் சைக்கிளை வேண்டி அடிபட்டு உருட்டி அந்த இடத்தில் விட்டிட்டு இரும்புக்கம்பியை எடுத்துக்கொண்டோடி அடுத்தடுத்து 3வெல்லை அடித்து விட்டு ஆராதனையில் ஈடுபடுவர் அனைத்து செயற்பாடுகளும் 8.10 மணியளவில் ஆரம்பித்து விடும். ஆசிரியர் கம்போடு வகுப்பறைக்கு வர அமைதியாக இருந்து கற்றிடுவர். எம்பெற்றோர் பள்ளிக் கல்வியை மட்டும் பண்புடன் கற்றதனால் பாசத்தோடும் பணிவோடும் இருக்கின்றரர்கள் எம்மவர்கள்

குப்பி விளக்கிற்கு மண்ணெண்ணை இருக்காது லாம்பில் படிக்க சிமிலி உடைந்திருக்கும். இருந்தும் மெல்லிய வெளிச்சத்தில் விருப்புடன் வீட்:டு வேலை செய்து மணிக்கணக்காய் முழித்திருந்து படித்து விட்டு பாடசாலை விட்டபின்பு தோட்ட வேலை ஆடு மேய்ப்பு, மாடுமேய்ப்பு, கையில் புத்தகம் தான் அன்றைய படிப்பு எம் பெற்றோர்.

இன்றைய தொழில்நுட்பத்தில் வசதியான கட்டடங்கள் வகுப்பறையில் மின்விசிறி,வசதியான விஞ்ஞான ஆய்வு கூடம் அழகியல் அறை என எல்லா வசதிகளும் எமக்கு இருக்கு இப்போது போனில் அலாம் அடிக்க போக வேணும் பள்ளிக்கு போதும் எழும்பு என அம்மா அன்னை அருட்ட அந்த வகுப்பு இந்த வகுப்பு அடுக்கடுக்காய் எத்தனை வகுப்பு அலுப்புடன் நான் சொல்ல அடிவாங்கப்போறாய் எழும்பு இப்ப எனஅடுப்படியில் அம்மாவின் சத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற ஓடிப்போய் பைப்பை முறுக்கி அவசரமாய் குளித்துவிட்டு அழுத்தி வைத்த ஆடையைஅம்மா அணிந்து விட அடம்பிடித்து சாப்பாடு நூடில்ஸ்தான் வேணும் அல்ல வேண்டாம். நான் போறன். பள்ளிக்கூடம் அம்மா இல்ல இல்ல என ஊட்டி விட்டா சாப்பாடு எனக்கொண்டும் தெரியாது சப்பாத்து அம்மா அணிந்து விட்டு புத்தகப்பை, தண்ணீர்ப்போத்தலுடன் என்னையும் தூக்கி மோட்டார் சைக்கிளில் ஏத்திவிட்டு கொண்டு போய் பள்ளி வாசலில் பக்குவமாய் இறக்கிடுவர்.

ஆறேமுக்கால் ஏழுமணி எவரும் இருக்காயினம் எங்கட அதிபர் வந்திடுவர் பள்ளிக்கூடம் வேலைக்கு போகையிலே வேகமாக திரும்பி வந்து அதிபர் வந்திட்டார். அவசரமாய் வெளிக்கிடுமணி 7 ஆகுது மணிக்கணக்காய் நிக்கிறாய் வேறு வேறு வாகனத்தில் வேகமாக வந்திடுவர் எம் ஆசிரியர் நேரம் தவறாது கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் ஒழுங்காய் ஒழுக்கத்தையம் ஒற்றுமையையும் ஒருவரையும் தப்பாது வளர்த்திட்ட எம் பள்ளி.

நாளை பள்ளிக்கூடம் நடுங்குவர் எம் பெற்றோர் காலை கூட்டுமுறை கச்சிதமாய் செய்திடுவர்.பள்ளிப்புள்ள பாவம் எண்டு பக்குவமாய் சொல்லிடுவர். அறிவுரைகள் ஆலோசனை, தலைமைத்துவம், தகைமைகள், ஆற்றல்கள் அனைத்தையும் அடுக்கடுக்காய் வளர்த்திட்டவர் எம் அதிபர் அதனால் தான் ஆண்டு 9திலிருந்து 11 வரை தரம்உயர்த்தப்பட்டு தர்மக்கேணி புகழ்பாடுகிறது. தரம் 5 புலமைப்பரிசில் தவறாது 100 சித்தி தரம் 11 தராதரப் பரீட்சை தவறாது 100 சித்தி தர்மக்கேணி பள்ளிக்கூடத்தில் தரமான அதிபராம் அர்ப்பணிப்பான ஆசிரியர்களாம் அடுத்தவர் சொல்லிக் கேள்வி உண்மையும் அதுதான் ஆரம்பக்கல்வியில் செயற்பட்டு மகிழ்வோம்.அணிதிரண்ட வெற்றிகள் ஆனந்தமோ ஆனந்தம்

அடுத்த வகுப்புக்களில் அழகியல் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், தமிழ்த்தினப் போட்டிகள், சமூக விஞ்ஞானப்போட்டிகள்,சிறுவர் நாடகங்கள்என எத்தனையோ போட்டிகள் எல்லாவற்றிலும் எமக்குத்தான் வெற்றிகள் போட்டிகள் என்றாலே போகவிடார். அதிபர் ஒத்திகை பார்த்த பின்பு தான் போட்டிக்கு போகலாம். அத்தனைக்கும் காரணம் எம் பள்ளித்தலைவரின் பற்றுறுதியான சேவைகள் இன்னும் சொல்லப்போனால் இடமில்லை எங்களிடம் சுற்றுமதிலென்ன சுற்றுச்சூழல் அழகென்ன தண்ணீர் வசதிகள் குடிநீர் வசதிகள், நூலகத்தில் புத்தகங்கள் நூற்றுக்கணக்கான வசதிகள் எங்களுக்கு

அடுத்த வருஷம் ஆரம்பமாம் அலுப்பிருக்கு எங்களுக்கு அவசரமாய் ஆசிரியர் கூட்டம் அதையடுத்து பெற்றோர் கூட்டம் அடுக்கடுக்காய் சொல்லிடுவர் ஆண்டு திட்டமிடல் ஆரம்பகல்விக்கு ஆரம்பச்சிட்டு கால்கோள் விழா ஆண்டு 1 பெற்றோர் அனைவரும் அங்கதான். அகமகிழ வீடமைத்து அனந்தமாய் பிள்ளைகள் மகிழ்ந்து கற்றிடுவர். வேடம் புனைதல், சந்தை, கண்காட்சி, தைப்பொங்கல், சித்திரை வருட கொண்டாட்டம், பரிசளிப்பு விழா, பிரிவு உபசாரவிழா, ஆசிரியர் தினம், சிறுவர்தினம், நவராத்திரி விழா என எத்தனை கொண்டாட்டஙகள் இருந்தாலும் எங்களுக்கு படிப்பில் குறைவில்லை. பள்ளிக்கூடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்ட பின்பு பகட்டும் எல்லாத்தையும் இலகுவாக சொல்லிடுவர்.எம் முதல்வர்.

எங்களுக்கு என்ன இனிமையான சாப்பாடு எல்லா வசதியும் இருக்கு எம் பள்ளியில் பகல் இரவு வகுப்புக்கள் பாதுகாப்புக்கு பெற்றோர்கள் பாவம் ஆசிரியர்கள் எங்கள் உயர்வுக்காக எவ்வளவு கஸ்டங்கள் பாதி தூக்கத்திலே படிக்கினமோ எண்டு பார்க்க பாசத்தோடு போன் வரும் தூக்கத்தில் படிக்கினமோ எண்டு பார்க்க ஓடி வந்து பதில் ஏதும் சொல்லாமல் இந்தா போன் உனக்குத் தான் கோல் என்று சொல்ல என்ன பாடம் படிக்கிறாய் என்று கேட்க இப்பதான் சேர் இங்கிலிசு படிக்கிறன். நல்லது நல்லாய் படியுங்கோ நல்ல பெறுபேறு வரட்டும்.

எங்களுக்கு படிப்பில் பிடிப்பில்லை. என்றாலும் இவர்களுக்காக படிக்க வேணும் என்று படித்தால் தான் எல்லோரும் உயர்தரத்தில் எல்லாத்துறையிலும் தெரிவானார். எந்தப் பள்ளிக்கூடம் எண்டு கேட்களம் பள்ளி புகழ் பாடும் எம் பள்ளி வாழ்க்கையை எப்படிச் சொல்ல எத்தனை ரியூசன் எத்தனை வகுப்புக்கள் எதுவும் இல்லை. எமக்கு எல்லாம் எம் பள்ளிக்கல்வி மட்டும் தான் இதை விட வேறு எதைச் சொல்ல எம் பள்ளித்தாயின் புகழ்பாட எமக்குப் போதாது வார்த்தைகள் வாழ்க பள்ளி வளர்க தர்மக்கேணி

**டெல்ரன் சக்கசனா**
**தரம் - 04**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையின் முக்கியத்துவம்

இன்றைய உலகில் செய்தித்தாள் படிப்பவர்களைக் காண்பது அரிது. முன்னைய காலத்தில் காலை எழுந்ததும் செய்தித்தாள்களைப் படிப்பதைப் பழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள்.உலகப் புதினங்கள் முதல் உள்ளூர்ச்செய்திகள்வரை அறிந்து கொள்வதற்குச் செய்தித்தாள்களையே மக்கள் பெரிதும் நம்புகின்றனர்.

செய்தித்தாள்கள் செய்திகளைத் தருவதோடு மட்டுமல்லாமல் பல புதிய புதிய தகவல்களைத் தரும் சாதனமாகவும் விளங்குகின்றன. இதனால் அன்றாட மக்கள் வாழ்வில் பிரிக்க முடியாத மறக்க முடியாத ஒரு சாதனமாக செய்தித்தாள்கள் திகழ்கின்றன.

செய்தி என்பதை ஆங்கிலத்தில் நியூஸ் (News) என்று கூறுவர். வடக்கு (North) கிழக்கு (East), மேற்கு(West) தெற்கு (South) ஆகிய நான்கு திசைகளில் உள்ள ஆங்கில முதல் எழுத்துக்களைக் கொண்டே NEWS என்ற சொல் அமைக்கப்பட்டது. செய்தி தருவன செய்தித்தாள்கள், இது முதன் முதலில் ஐரோப்பிய நாட்டில் தோன்றின.

காக்ஸ்டன், கூடன்பேர்க் ஆகிய அறிவியல் அறிஞர்கள் அச்சியந்திரங்களை கண்டு பிடித்தனர். இதன் பயனாக அச்சுத் தொழில் விருத்தியடைந்தது. அதன் பேறாகச் செய்தித்தாள்கள் வளர்ச்சி பெற்றன.

நமது ஈழ நாட்டில் முதன் முதலாக 'உதய தாரகை' எனும் தமிழ்ப் பத்திரிகை 07.01.1841 இல் வெளிவந்தது.

இக்காலத்தில் விஞ்ஞான வளர்ச்சியின் பேறாக கணினியில் வருகையின் பின் செய்தித்தாள்கள் பெருமளவில் வெளியாகின்றன. நமது நாட்டின் தினகரன், வீரகேசரி, தினக்குரல், உதயன், வலம்புரி, எனும் செய்தித்தாள்கள் தமிழில் வெளிவருகின்றன. இவற்றை விட டெயிலி, நியூஸ், டெயிலிமிரர், ஐலண்ட், ஆகிய மூன்று ஆங்கில தினசரிகளும் லங்காதீப, லக்பிம், தினமின, திவயின என்னும் நான்கு சிங்களத்தரிசனங்களும்வெளியாகின்றன. செய்திப் பரிமாற்றங்களுக்குரிய சாதனங்கள் தற்போது பெருகியுள்ள போதிலும் செய்தித்தாள்களின் செல்வாக்கு சிறிதும் குறையவில்லை என்றே கூறலாம்.

செய்தித்தாள்களின் பயன்களாக உலகின் எந்த மூலையில் நடைபெறும் நிகழ்ச்சியாயினும் செய்தித்தாள்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். உள்ளூர்ச் செய்திகள் முதல் உலகச் செய்திகள் வரை அனைத்து செய்திகளையும் ஆதாரபூர்வமாக அவை வெளியிடுகின்றன. முக்கிய நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட புகைப்படங்களையும் சம்பந்தப்பட்ட செய்திகளுடன் தருகின்றன. இதனால் படிப்போர் நிகழ்ச்சிகளை எளிதில் விளங்கிக் கொள்ளவும் முடிகிறது.

செய்திகள் மக்களிடையே நாட்டு நடப்புக்கள் பற்றிய விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்துகின்றன. பிறநாட்டு மக்களின் வாழ்க்கை நிலைகளையும் அரசியல் நிகழ்வுகளையும் உடனுக்குடன் தெரிந்து கொள்ளவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவுகின்றன. உள்ளூர் நிகழ்வுகளையும் உலக நிகழ்வுடன் ஒப்பிட்டு நோக்கும் வாய்ப்பினைச் செய்தித்தாள்கள் வழங்குகின்றன. அவற்றில் வெளியாகும் கட்டுரைகள் மக்கள் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

செய்தித்தாள்கள் படிப்பதால் படிப்போர்தம் அறிவு விருத்தியாகின்றது. உலகில் என்ன நடக்கிறது.என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. சிறுவர் முதல் பெரியோர் வரை உலக நடப்புக்களை அறிந்திடும் வாய்ப்பினைப் பெறுகிறார்கள்.

செய்தித்தாள்கள் வெறும் அரசியல் செய்திகளை மட்டுமே வெளியிடுவதோடு நின்று விடுவதில்லை. அவற்றில் விளையாட்டுச் செய்திகள், கட்டுரைகள், விளம்பரங்கள் எனப் பல்வேறு வகையான அம்சங்கள் வெளியிடுகின்றன. சில நாளிதழ்கள் பல்வேறு வகையான இணைப்பிதழ்களை வெளியிடுகின்றன. கல்வி, இலக்கியம், சினிமா, அறிவியல், கதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள் கேலிச்சித்திரங்கள் என்பவற்றைத் தாங்கி அவை வருகின்றன. இவற்றைப் படிப்பதால் படிப்போர் தம் அறிவு பெரிதும் விருத்தியடைகிறது.

செய்திகளைத் தினந்தோறும் படித்து உலக அறிவு பெற்றிட நாம் முன்வர வேண்டும். இன்றைய செய்தி நாளைய வரலாறு என்பதை நாம் உணர்த்திட வேண்டும்

**தே.சாருஜன்**
**தரம் - 06**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூச்சியம்
## நாடகம்

பாத்திரங்கள் (ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பூச்சியம், பென்சில், குருவி, அணில், மயில், மான்)

பென்சில் - ஒன்பது அண்ணா,ஒன்பது அண்ணா, ஆறு அண்ணாவை கண்டீர்களா?

ஆறு - காணவில்லையே, பென்சில் தம்பி.......

பின்னணி - (தலை கீழாக தொங்கிய ஆறு களைத்து விட்டது நிலத்தில் குதித்து நிற்கிறார் அருகே ஒரு குருவி வந்து ஆறை கேட்டது.)

குருவி - ஆறு அண்ணா, ஆறு அண்ணா, சின்னத்தம்பி பென்சிலை இப்படியா ஏமாற்றுவது?

ஆறு - ஒரு விளையாட்டு தான், இதோ பென்சிலிடம் நான் போகிறேன்.

ஒன்பது - பென்சில் தம்பி என்ன பார்க்கிறீர்?

பென்சில் - ஒன்பது அண்ணா,ஒன்பது அண்ணா, இப்போது தானே உங்களை மரத்தடியில் பார்த்தேன்.

ஒன்பது - இல்லையே.....

பென்சில் - மரத்தில் விளையாடினீர்களே

ஒன்பது - என்ன நான் இங்கே தான் நிற்கின்றேன்.

அதோ பார் ஆறு வருகின்றது.

ஆறு - பென்சில் தம்பி நான் தான் ஆறு பாவம் ஏமாந்துவிட்டாயா?

பென்சில் - குறும்புக்கார அண்ணன், என்னோடு வாருங்கள்...

பின்னணி - (ஆறும் ,பென்சிலும் ,ஒன்பதும் பூச்சியத்திடம் செல்கின்றன.)

பென்சில் ஒன்பது, ஆறு - வணக்கம்,பூச்சியம் அண்ணா....

பூச்சியம் - எனக்கு உங்களை பிடிக்காது, குத்துக்கரணம் அடிப்பது தான் உங்கள் வேலை

நான் பெரியவன் எனக்கு உங்களோடு என்ன கதை

ஒன்று,ஏழு - வணக்கம் பூச்சியம் அண்ணா

பூச்சியம் - போங்கடா எனக்கு உங்களை பிடிக்காது நீங்கள் இருவரும் சுள்ளிப் பயல்கள் நான் எல்லோரையும் விடப் பெரியவன்

அணில் - வணக்கம், பூச்சியம் அண்ணா

பூச்சியம் - வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணில் - எங்கே உங்கள் சகோதரர்கள்?

பூச்சியம் - எனக்கு கோபம் வரச்செய்யாதே நான் பெரியவன

பென்சில் - நான் பெரியவன் நான் எல்லோரையும் விட உயர்ந்தவன்

இரண்டு - ஏன் பூச்சியம் அண்ணா, எங்களை மதிக்காமல் போகிறாரோ

மூன்று - எனக்கும் தெரியவில்லையே

பூச்சியம் - வணக்கம் அண்ணா (மயில்)

மயில் - வணக்கம்

பூச்சியம் - மயில் அண்ணா எனைப்போல பல வட்டக்கண்கள் உங்கள் தோகையில் உள்ளன. அதனால் எனைப்போலவே நீங்களும் பெரியவன்,

மயில் - சரி தம்பி உனது சகோதரர்கள் எங்கே ...அவர்களோடு இருந்தால் தான் உனக்கு பலம் அப்போது தான் நீ பெரியவன்.

ஐந்து - கோபக்கார பூச்சியம் வருகிறார் விலங்குகள்....விலங்குகள் அண்ணா பயப்படாதீர்கள் நாம் உங்களை மேலே எடுப்போம்.

பூச்சியம் - அட போடா,நான் பெரியவன் பாய்ந்து மேலே வந்து விடுவேன்.... எனக்கு ஒருவரும் தேவையில்லை

ஐந்து - அண்ணா காலில் அடிபட்டு விட்டாதா?

நான் உங்களுக்கு உதவி செய்கின்றேன்.

பூச்சியம் - போடா குண்டப்பா.... நான் பெரியவன் பலசாலி...

எனக்கு எவரது உதவியும் தேவையில்லை

மானும் அணிலும் நல்ல அறிவாளிகள் அவர்களிடம் என்னைப்பற்றிக் கேட்போம் என்னை அவர்கள் நிச்சயம் பெரியவன் என்று கூறுவார்கள்

மான் அண்ணா வணக்கம் எனது குடும்பத்தில் நான் தானே பெரியவன் பலசாலி சரியான தீர்ப்பை சொல்லுங்கள்

மான் - உமக்கு பின்னால் ஐந்து நின்றால் அந்த எண் எது?

பூச்சியம் - ஐந்து

மான் - ஐந்தின் பின்னால் நீர் நின்றால் அந்த எண் என்ன?

பூச்சியம் - ஐம்பது

மான் - ஆகையால் உன் சகோதரர்களோடு நீர் சேர்ந்து நின்றால் தான் உமக்கு மதிப்பு,நீர் நிற்கும் இடத்தைபொறுத்தே யார் பலசாலி எனலாம்.

மயில் - அடேயப்பா எவ்வளவு பெரிய குடும்பம் பலமான ஆட்கள் சரி எல்லோரும் சிரியுங்கள் ஆடிப்பாடுவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கங்கள் - ஓம் ஓம் நாங்கள் எல்லோரும் ஒரே குடும்பம்

பாடல்

புவிக்கு சூரியன் ஒன்று
எமக்கு கண்கள் இரண்டு
சிவன் எரித்த புரங்கள் மூன்று
சமயத்தின் குரவர்கள் நான்கு
எமக்கு புலன்கள் ஐந்து

முருகனின் படை வீடு ஆறு
வானவில்லின் நிறங்கள் ஏழு
உலகின் அதிசயங்கள் எட்டு
சக்தி நவராத்திரிகள் ஒன்பது
கணிதத்தில் இலக்கங்கள் பத்து

**தி.சர்மினி**
**தரம் 07**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர் எழுத்து உரமாய் தந்த வைரவிழா நாயகியே

அன்பாய் பண்பு சொல்லித் தரும்
அதிபருள்ள பாடசாலைக்கு
ஆசையாய் நான் வந்தேன்
ஆண்டொன்று கற்றிடவே!

இலை மறைகாய் என் திறனை
இயல்பாய் எடுத்துக்காட்ட
ஈன்றெடுத்த அன்னைபோல் ஆசான்கள்
ஈடில்லா கல்விதனை கற்றுத் தந்தனரே

உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி வைரவிழா நாயகியே
உத்தமனாய் நாம் வாழ வழிகாட்டி
ஊராரும் உற்றாரும் சொல்வதெல்லாம்
ஊருக்கு உன்னால் பெருமை தானென்று!

எண்ணில்லா கல்வி மானும் கலையார்வம் வளரும்
எங்கள் ஊரில் உருவாக உரம் போட்ட தாயே
ஏற்றம் காணவைத்து வைரவிழா காண்கிறாய்
ஏணிப்படி செல்வகுமார் அதிபரின் காலத்தில்

ஐயத்துடன் ஆண்டொன்றுக்கு வந்ததுமே
ஐந்தூரியப் பூவாய் இந்துமதி ஆசானும்
ஒன்றல்ல இரண்டல்ல அனுபவங்கள் பல கண்டு
ஒற்றுமையாய் பாரினில் புகழ்மாலை சூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராயிரம் அறிவுரை கூறி வழிப்படுத்தும்
ஓர் தாய் பிள்ளைபோல அதிபரும் ஆசான்களும்
ஔவை சொன்ன ஆத்திசூடி கூறித்தானே
ஔடதமாகின்றனர் எம் அறிவுத்திறனை

**அனுஷானந்தன் சங்கீர்த்**

**தரம் - 01**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமிய நடனங்கள்

கிராமிய நடனம் என்பது கிராமப்புற மக்கள் தம்முடைய பொழுதுகளை கழிப்பதற்காக தம்மால் செய்யப்பட்ட இசைக்கருவிகளை பயன்படுத்தியும் மற்றும் வீட்டுப்பொருட்களை பயன்படுத்தியும் நடன முறையில் ஆடப்பட்டுவரும் நடனம் கிராமிய நடனம் எனப்படும். இந்த வகையில் இவ் நடனத்தை இன்று வரை அழிவடையாது பாதுகாத்து ஆடி வருகின்றன. இந்த வகையில் சில கிராமிய நடனங்கள் தொழில் சார்ந்த நடனங்களாகவும் காணப்படுகின்றது. மேற்படி கிராமிய நடனம் என்ற வகையில் பின்வருமாறு சில குறிப்பிடப்படுகின்றது.

கும்மி நடனம், கொழுந்து நடனம், செம்பு நடனம், குறத்தி நடனம், ஒயில் நடனம், சுளகு நடனம், கோலாட்டம், மீனவ நடனம், அரிவுவெட்டு நடனம், கொழுந்து நடனம், சுளகு நடனம்.

போன்று பல நடனங்களை குறிப்பிடலாம். அந்த வகையில் இவ் நடனங்களை விளக்கும் வகையில் கீழ்வருமாறு குறிப்பிடப்பபட்டுள்ளது.

### 1. கும்மி நடனம்

இவ் நடனம் பெண்களால் ஆடப்பட்டு வருகின்றது. இவ்நடனத்தில் பெண்கள் இரண்டு கைகளையும் தட்டியவாறு குனிந்து வளைந்து ஆடுவார். இதற்கு குறைந்தது 11 பெண்கள் தேவைப்படுவார். அதுமட்டுமன்றி இவ்வாறு ஆடப்படும் நடனத்தில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளாக மேளம், தாளம், போன்றன பயன்படுத்தப்படும். அது மட்டுமன்றி இவ் நடனத்தினை ஆடும் பெண்கள் தாங்கள் பாட்டுப்பாடியே நடனம் ஆடுவார். இந்த வகையில் இவ் நடனத்திற்குரிய பாடலடியாக "கும்மியடி பெண்ணே கும்மியடி" என்ற பாடலினூடாக இவ் நடனம் ஆடப்பட்டு வருகின்றது. இவ்வாறான முறைப்படி கும்மி நடனம் காணப்படுகின்றது.

### 2. செம்பு நடனம்

செம்பு நடனமானது ஒரு கிராமிய நடனமாக காணப்படுகின்றது. அந்த வகையில் இவ் நடனத்தை ஆண்களே அதிகம் ஆடுவார். இவ் நடனம் ஆடும் போது ஆண்கள் கலாசார ஆடை அணிந்தவாறும் கையில் செம்பு ஏந்தியவாறு நடனம் ஆடுவார்கள். இதன் அடிப்படையில் செம்பு நடனத்தை ஏந்தல் நடனம் எனவும் அழைப்பர். இவ் நடன அமைப்பு முறைப்படி இசைக்கருவிகளாக மேளம், தாளம், போன்றன பயன்படுத்தி ஆடுவார்கள். இவ்வாறான முறைப்படி செம்பு நடனம் இடம் பெறுகின்றது.

### 3. அரிவெட்டு நடனம்

இது கிராம சமூகத்தவரிடையே காணப்படும் தொழில் சார் நடனமாக காணப்படுகின்றது. அரிவு வெட்டும் காலத்தில் ஆண்களாலும் பெண்களாலும் ஆடப்பட்டதாகும். கையில் வளைந்த கத்தியை வைத்துக் கொண்டு மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியே இந் நடனத்தில் பங்குபற்றி ஆண்கள் வாய்ப்பாட்டுக்களை பின்னணி இசையாக இசைப்பார். பாடல் புதிய தானியத்தை வரவேற்பதாகவும் நல்ல அறுவடை நடைபெற வேண்டும் என்று வேண்டுவதாகவும் பொருள் பட அமைந்திருக்கும். மற்றும் அரிவு வெட்டுதல், சூடுமிதித்தல், தூற்றுதல், பொங்கல் வைத்தல் போன்றவற்றையும் சித்தரிப்புக்கும் முகமாக இவ் நடனம் ஆடப்படுகின்றன.

## 4. மீனவ நடனம்

இவ் நடனமானது கடலுக்குச் சென்று வலை வீசி மீன்களை பிடித்து திரும்பும் வரையில் மீனவரின் மனைவிமார் கரையோரத்தில் உணவுடன் அவர்களின் வரவை எதிர்பார்த்து உணவு கொடுத்து வீட்டுக்கு அழைத்துச் செல்வதையும் சித்திரிப்பதாக இந்நடனம் அமையும் இந் நடனத்திற்கு ஆண்கள் சாரம் பெண்கள் சாதாரண சேலை உடுத்தியும் ஆடுவார். ஆண்கள் தலையில் ஓலைத்தொப்பி/ தலைப்பாகை அணிவார். இதற்குரிய பாடலமைப்பு 'ஏலேலோ, ஏலேலோ அயிலசா.... என்ற சந்தத்திற்கேற்ப அமைக்கப்படும் இவ்வாறான முறைப்படி மீனவ நடனமானது அமைகின்றது.

## 5. கொழுந்து நடனம்

கொழுந்து நடனமானது தேயிலைக் கொழுந்தினைக் கொய்து கூடையில் போட்டு அதைப்பக்குவமாக தொழிற்சாலைகக்குக் கொண்டு செல்வதைச் சித்தரித்து ஆடிக் காட்டப்பட்டுள்ளது. இதற்கான பாடல் மலையகப் புகழ் மிக்கதும் தேயிலை கொய்யும் பெண்களின் அன்றாட வாழ்க்கையையும் அவர்களின் கஷ்டநஷ்டங்களையும் மையமாகக் வைத்து இயற்றப்பட்டதாகவுமிருக்கும். பெண்கள் சாதாரண உடை உடுத்து அதாவது புடைவை இடையில் கம்பாயம் ஒன்று கட்டி தலையில் கோணி (சாக்கு, உரப்பை) அணிந்து முதுகில் பிரம்பினால் பின்னப்பட்ட சடையையும் கையில் நீண்ட மூங்கில் குச்சிகளையும் வைத்திருப்பார். மற்றும் கைநிறைய இறப்பர் வளையங்களையும் அணிந்து கழுத்தில் முத்து மாலைகள், அணிந்தும் மூங்கில் மூக்குத்தி நத்து என்பன மாட்டியும் காதில் சிமிக்கி தோடு என்பன அணிந்தும் காலில் மெட்டி காற்சங்கிலி என்பனவும் அணிந்து ஆடுவார். இவ் நடனத்தில் பாடல்கள் வாழ்வியல் துன்பங்களை பிரதிபலிப்பதாகவும் கணக்குப்பிள்ளை, தோட்டத்துறைமார் மேற்பார்வை செய்வதாகவும் அமையும் இவ் நடனத்திற்கு தம்பு வாத்தியம் பயன்படுத்தப்படும். இவ்வாறான அமைப்பு முறைப்படி இவ்கொழுந்து நடனம் காணப்படுகின்றது.

## 6. கோலாட்டம்

இவ் நடனம் ஒரு கிராமிய நடனங்களில் ஒன்றாகும். அந்த வகையில் இவ் நடனத்தினை ஆண்களே அதிகமாக ஆடுவார். இவர்கள் வேட்டியினை தாறுபாச்சாக உடுத்தி ஆடுவார் சில பெண்களும் இவ் நடனத்தை ஆடுவார்கள் அதன்படி பெண்கள் புடைவைகட்டி ஆடுவார் கைகள் இரண்டிலும் சமமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடிகளை வைத்து அதனை அடித்து, தட்டி, சுழன்று ஆடுவார்கள் இதன் முறைப்படி கோலாட்டம் நடனம் அமைகின்றது.

## 7. ஒயில் நடனம்

ஒயில் நடனம் பெண்களால் அதிகம் ஆடப்பட்டு வருகின்றது. இதில் பெண்கள் கைக்குட்டை பயன்படுத்தி ஆடுவார்கள்.பெண்கள் வண்ணவண்ண நிறம் சேர்ந்த புடைவை கட்டி ஆடுவார். இவ்வாறான முறைப்படி ஒயிலாட்டம் காணப்படுகின்றது.

## 8. குறத்தி நடனம்

குறத்தி நடனம் பெண்களால் ஆடப்படும் நடனமாகும். பெண்கள் வேடுவிச்சி போன்ற வேசத்துடன் வேடுவர்களின் கதையம்சத்தை நடித்துக்காட்டும் முகமாக இவ் நடனம் அமையும். குறத்தி நடனத்தில் வாத்தியக கருவிகளாக பறை, தப்பு மிருதங்கம் தாளம். போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றது. இதில் காதல் உணர்வும் எடுத்துக்காட்டப்படுகின்றது.
இவ்வாறான முறைப்படி குறத்தி நடனம் காணப்படுகின்றது.

## 9. சுளகு நடனம்

இவ் நடனத்தில் கைகளில் சுளகு பயன்படுத்தி ஆடுவார்கள் சுளகில் நெல்தூற்றும் முறைப்படியான அம்சங்களை அடிப்படையாக கொண்டு ஆடுவார். இதில் பெண்கள் சாதாரண புடைவை கட்டி ஆடுவார். வாத்தியமாக பறை பயன்படுத்துவார்கள். இவ்வாறான முறைப்படி சுளகு நடனம் அமையப்பெறுகின்றது.

மேற்படி சில கிராமிய நடனங்கள் விளக்கமாக காணப்படுகின்றது. இவ்வாறான கிராமிய நடனங்கள் இன்றும் உலகில் அழிவடையாது காப்பாற்றப்பட்டு வருகின்றது. இவ்வாறான கிராமிய நடனங்கள் மூலம் முன்னைய வரலாற்றில் மக்கள் எவ்வாறு பொழுது போக்கினார்கள் எவ்வாறு வேலை செய்தார்கள் என்பது பற்றிய தகவல்களும் விளக்கப்படுகின்றன. இவ்வாறான முறைகளையும் தகவல்களையும் கொண்டமைந்ததாக கிராமிய நடனம் காணப்படுகின்றது.

**ஸ்ரீ.பவிசனா**

**தரம் - 05**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர்மையே சிறந்த செல்வம்
## பண்ணையாரும் வேலனும்

ஒரு ஊரில் வயதான பெரியவர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் வேலன். அவருக்குப் சொந்தம்பந்தம் என்று சொல்லிக் கொள்ளும் அளவிற்கு யாருமே இல்லை. அவர் தர்மலிங்கம் என்ற பண்ணையாரிடம் வேலை செய்து அதன் மூலம் கிடைக்கும் பணத்தை வைத்து வாழ்ந்து வந்தார். எவரிடமுமே கை ஏந்தி பிச்சை கேட்டு வாங்கி சாப்பிடும் பழக்கம் அவருக்கு இல்லை. எந்த ஒரு சூழ்நிலையிலும் நேர்மை தவறாது வாழ்ந்து வந்தார்.

ஒரு முறை ஊர் பஞ்சாயத்து ஒன்றுக்கு பண்ணையார் தர்மலிங்கத்தை கூப்பிட்டு இருந்தார்கள். அவரும் சரிவான தீர்ப்பைத்தான் வழங்கினார். ஆனால் தப்பு செய்து தண்டனை பெற்ற கெட்டவன் மட்டுமே பண்ணையாளரை பழிவாங்க நினைத்தான்.பழிவாங்குவதற்கு நம் பெரியவர் வேலனைபயன்படுத்திக் கொள்ள நிலைத்தான். வேலனிடம் வந்தான்''அய்யா! பெரியவரே நீங்கள் நமது பண்ணையாரிடம்தானே வேலை செய்து வருகின்றீர்கள். ''ஆமாம் தம்பி நீங்கள் யாரு? நம்ம பண்ணையார் எங்கள் குடும்பத்திற்கு நிறைய உதவிகள் செய்து உள்ளார். அதனால் தான் இப்போது எம் குடும்பம் நல்ல நிலையில் உள்ளது. நானும் கை நிறைவாக சம்பாதித்து வருகின்றேன். அதனால் தான் உங்கள் மூலமாக ஒரு சிறிய உதவி ஒன்று செய்யலாம். என்று எண்ணுகின்றேன்.

ஓ! அப்படியா நான் என்ன செய்ய வேண்டும். ஒன்றும் இல்லை ஐயா நான் ஓர் பூச்சி கொல்லி மருந்து தெளிக்கும் போது இதனைனுயும் கலந்து தெளித்து விடுங்கள் அது என்ன மருந்து தருகின்றேன். பிள்ளையாரின் நிலத்தில் நீங்கள் பூச்சிகொல்லி மருந்து தெளித்து விடுங்கள் அது என்ன மருந்து தம்பி? பயிர் நன்றாக செழிப்பாக வளர்வதற்கு இந்த மருந்து உதவும். இது ஒரு புதுக்கண்டு பிடிப்பு. நல்ல விஷயம் தானே பண்ணையார் கிட்ட நீயே நேரே போய் கொடுக்கலாமே ஏன் என்னை கொண்டு போய் கொடுக்க சொல்கின்றீர்கள்? அது வந்து நான் போய்க் கொடுத்தால் அவர் அதற்கு பணம் தருவார். அவர் எங்கள் குடும்பத்துக்கு செய்த உதவிகளுக்கு நான் பணம் வாங்கினால் அது மிகவும் ரொம்பக் கூடாதவிடயம் அல்லவா? அதனால் தான் உங்கள் மூலமாக இதனைச் செய்யலாம். என்று நினைக்கின்றேன் நீங்கள் இதனைச் செய்யுங்கள் அதற்கு காணிக்கையாக நான் உங்களுக்கு பத்தாயிரம் ரூபா தருகின்றேன்.

ஓ! அப்படியா சரி அதனைக் கொடுத்துவிட்டுப் போங்கள் நான் அதனைப்பார்த்துக் கொள்கின்றேன். சரி அப்படி என்றால் நான் இரண்டு நாட்கள் கழித்து வருகின்றேன். மருந்து பயிர்களுக்கு தெளித்து விட்டீர்கள் என்றால் சொல்லுங்கள். என்று சொல்லிவிட்டுச் சென்றான். நமது வேலனுக்கு ஒரே சந்தேகம். இது நல்ல பூச்சி கொல்லி மருந்தா இருந்தா எதுக்காக எனக்கு பத்தாயிரம் ரூபா பணம் தருவதாககூறினர் என்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண்மை துறை சிறப்பு அலுவலகத்திற்குச் சென்று அந்த பூச்சி கொல்லி மருந்தைக் கொடுத்து பரசோதனை பார்க்கச்சொன்னார். அப்படி பரிசோதனை செய்து பார்த்ததில் அது பூச்சிகளைக் கொல்லும் மருந்தே இல்லையாம். பயிர்களை அழிக்கும் மருந்தாம். என்று வேலனுக்கு தெரிய வந்தது. நல்ல வேளை நான் சந்தேசப்பட்டு பரிசோதித்தது நன்மைக்குத்தான் என்று மகிழ்ந்து அந்தத் தகவலை பண்ணையாரிடம் சொல்லி எதிரிகளிடம் இருந்து இன்னும் சற்றுக் கவனமாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார். எவ்வளவு பணம் கிடைத்தாலும் தவறு செய்யாமல் இருந்து வேலனின் நேர்மையைப் பாராட்டி அவருக்குச் மாதச்சம்பளத்தில் ரூபா ஆயிரம் அதிகமாக தருவதாக பண்ணையார் கூறினார். எவ்வளவு பணமோ,பதவியோ பொருளோ எமக்கு கிடைத்தாலும் நமது நேர்மையை மட்டும் ஒருபோதும் கைவிட்டு விடக் கூடாது. நேர்மையே சிறந்த செல்வம்.

**செல்வராசா கனிச்செல்வி**
**தரம் 10**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க எம் பள்ளித்தாயே

பச்சிலைப்பள்ளியின் பசுமை மிகு தர்மக்கேணியாய்
பசுமையோடு தென்னையும் பல பயிர்களும்
பல்லுயிர் ஓம்பும் பண்பான மனிதர்களும்
பகிர்ந்துண்டு வாழும் கிராமத்தின் சிகரமாய்
தர்மக்கேணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை

ஆறு தசாப்தங்கள் நிறைவாய்
அறுபதாம் ஆண்டில் கால்பதிக்கும்
பண்புடன் பல கலைகளும் ஒழுக்கமும்
ஒற்றுமையும் வாழ்க்கைக் கல்வியையும்
பஞ:சமின்றி அள்ளித்தரும் பள்ளியே வாழ்க

பல் கலைகளை அரங்கேற்றி
பாரினில் உயர்ந்திட
அகரத்தில் ஆரம்பித்து சிகரம் தொட
வைக்கும் கலைக்கூடமே

ஆறல்ல இன்னும் பல தசாப்தங்கள்
உன் பெயர் சொல்லிடும் சாதனையாளர்களையும்
சரித்திரம் கூறிடும் சகலகலாவல்லவர்களையும் உருவாக்கிடும்
உன் புகழ் நிலைத்திட இறையருள் வேண்டிடுவோம

எம் பள்ளித்தாயே
என்றென்றும்
வாழ்க நீ... வளர்க நீ....

**ரவிச்சந்திரன் இசை நிலா**
**தரம்- 10**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மக்கேணிப் பிரதேசத்தின் கூத்துக்கலையும் நடைமுறையும்

ஈழத்தின் வடக்குப் பகுதியிலே உள்ள தமிழர் வாழ்கின்ற பாரம்பரிய பிரதேசமான பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் அமைந்திருக்கும் கிராமங்களின் கூத்துக்கள் இன்றும் பயில் நிலையிலுள்ளன. அந்த வகையில் தர்மக்கேணி மண் இவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது அனைவரும் அறிந்தது. இவ் வகையில் இங்குள்ள கூத்துக்கள் வடமோடி,தென்மோடி ஆகிய வகைக் கூத்துக்களில் ஆடப்பட்டு வந்தாலும் சல இடங்களில் இரண்டுமே கலந்துள்ளன. கதைக்கரு, ஆடப்படும் முறை,பாடப்படும் முறை, ஒப்பனை, உடையமைப்பு, என்பவற்றில் தர்மக்கேணி மண்ணானது வேறுபாடுகளைக் கெண்டிருப்பதால் அனைவரதும்பார்வையை ஈர்க்க கூடியதாக உள்ளது. இக்கூத்துக்களானவை கதை கூறும் ஒரு விவரண அரங்காகும். புராணக் கதைகளே இவற்றுள் சிறப்பிடம் பெற்றுள்ளன. ஆடலும் பாடலுமே இவற்றின் பிரதான ஊடகங்களாகும்.

இங்கு ஆடப்படும் கூத்துக்களுக்கும் தமிழ் நாட்டு தெருக்கூத்துக்களுக்கும் சில ஒற்றுமைகள் உள்ளன. இக்கூத்தை பழக்குபவர் அண்ணாவியர் என அழைக்கப்படுபவர் இக்கூத்தானது இரவு தொடங்கி விடியும் வரை ஆடப்படும் இவ் மேடையமைப்பானது ஆரம்பத்தில் வட்டவடிவமாக இருந்தமையால் சூழ இருந்து கூத்தை பார்க்ககூடியதாக இருந்தது. ஆனால் இன்று சதுர அல்லது செவ்வக வடிவான மேடைகள் அடைக்கப்பட்டு மூன்று பக்கங்களும் மறைக்கப்பட்டு ஒரு பக்கம் மாத்திரம் மக்களுக்குத் தெரிகிறது. கோயில்களில் ஆடப்படும் இக்கூத்துக்கள் இறைவணக்கம் செய்து ஆரம்பிக்கப்படுவதுடன் அண்ணாவியர் கூத்தை பழக்குவதற்காக கௌரவிக்கப்படுவார் விருப்பத்துடன் திரைச்சீலை பிடிக்கப்பட்டு பாத்திரம் தோன்றி தன்னை அறிமுகம் செய்து கொள்ளும் பாத்திரத்தின் குணாம்சத்திற்கு தக்கதாக தாளக்கட்ட இடம் பெறும். ஆடி முடித்த பின் தன்னைப் பற்றியும் தான் வந்ததன் காரணம் பற்றியும் தெரிவிலே பாடி மேடையைச் சுற்றி ஆட ஆரம்பிக்கும்.

உப பாத்திரங்களுடன் பாடல் மூலம் தொடர்பு கொள்ளும் இங்கு பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளும் பாடல்களும் கலந்து இரவு முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிரும் ஒலி இக் கூட்டத்திற்கு தனிச் சுவை தருகின்றது. தர்மக்கேணி மக்களின் மத்தியில் அவர்களின் ஊனோடும் உதிரத்தோடும் இக் கூத்துக்கலை இணைந்தும் பிணைந்தும் இருந்த தென்பதுடன் இவை இன்றும் பாரம்பரிய தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வருகின்றன.இக் கூத்து உருவாக்கும் முறை பல படிமுறைகளைக் கொண்டது. இங்குள்ள கூத்துக்கலையின் மேல் நாட்டமுள்ள வர்களைத் தெரிந்தெடுத்து பாத்திரத் தெரிவு இடம் பெறுதல் ஆரம்ப நிலையாகும். இவ்வாறு பாத்திரத்தெரிவு இடம் பெற்ற பின் தினமும் இரவு வேளைகளில் கூத்தினை பழக்குவார்கள். முதலாம் அரங்கேற்றம் என்பது கூத்து ஆடை அணிந்து சதங்கை கட்டி ஒரு விழாவாக பழகிய கூத்தை அரங்கேற்றுவதாகும். இங்கே மக்கள் கூத்துக்கு பரிசுகள் வழங்குவர். இரண்டாம் அரங்கேற்றம் எதுவித இடை நிகழ்வுகளுமின்றி அழகாக இடம்பெறும் ஏனைய தமிழ்ப்பிரதேசங்களிலும் கூத்துக்கள் உண்டு.

எனினும் ஆட்ட முறைகள் மேடை அமைப்பு அளிக்கைமுறை என்பவற்றில் பழைய முறைகளைப் பேணுவது பச்சிலைப்பள்ளியில் அமைந்திருக்கும் தர்மக்கேணி கிராமமே இதற்கான அரசியல், புவியியல், பொருளாதாரக் காரணங்கள் உண்டு. இக்கூத்து இங்கு தொழில் முறையாகவோ தனித்த ஒரு சாரதியினாலோ ஆடப்படுவதன்று. அனைத்து சாதியினது எவ்வித வேறுபாடுகளுமின்றி ஆடுவர். இக் கூத்து ஒரு நல்ல கருத்தை வெளிப்படுத்தியே முடிவடையும். மக்கள் மனதில் அன்பு, ஒற்றுமை, சகோதரத்துவம், தலைமைத்துவம், போன்ற பண்புகள்வளர்த்தெடுக்கப்படும். ஒரு சமூக விழாவாக அனைத்து மக்களையும் இணைக்கும் கலையாக உள்ளது.

**செ.கலைவிழி**

**தரம் - 11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசான்

கவலை தெரியா என் உலகத்திலே
ஒன்றும் புரியாத மழலைப் பருவத்திலே
ஓடி ஓடித் திரிந்தேன் ஆடிப்பாடி மகிழ்ந்தேன்
விளையாடித் தினமும் பறந்தேன்.

என்னுடைய உலகத்திலே சுதந்திரமாய் பறந்த என்னை
வகுப்பறையாம் கூண்டிலே என்
சிறகொடிக்கும் அரக்கர்களாய் சிலர் திட்டமிட்டு
நிற்பது போல் என் சின்னஞ்சிறு சிந்தையிலே
எண்ணம் வந்து வந்து போனதாலே

பள்ளிக்கூடம் வேண்டாமென அழுது கொண்டு ஓடிப்போனேன்
அம்மா பிரம்பினாலே அடித்துத் துரத்த வேறு வழியின்றி
வகுப்பறையில் விழிகலங்கி வந்து அமர்ந்தேன்.
என் சுதந்திரத்தை கொள்ளை கொண்ட
எதிரி என நான் நோக்க

என் அருகினிலே அமர்ந்திருந்து பெற்ற அன்னை போல
அரவணைத்து அழுகின்ற என் கரம் பிடித்து
அகரம் எழுத கற்றுத் தந்த அன்பினை நான் உணர்ந்திடவே
தாமதமாய் புரிந்தது என் சிறகொடிக்கும் அரக்கன் அல்ல ஆசான்
என்னை சித்திரமாய் செதுக்கும் சிற்பியென

என் ஆறாம் அறிவு ஆக்கம் செய்ய தண்டிப்பெனும்
கோல் கொண்டு திருத்தி நல்ல எண்ணத்தை என்
மனதினுள் இருத்தி ஒழுக்கத்தை ஊன்றுகோலாய் நிறுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம் கொண்ட அன்னலும் நீரே
வாழ்க்கை எனும் கடல்தனிலே கல்விக்கூடங்களாம்
ஓடம் கொண்டு தடுமாறாமல் பயணம் செய்ய
துடுப்புக்களாய் இருப்பவர் நீரே

வாழ்க்கை எனும் பயணத்திலே அறியாமை சந்திப்பினில் நான்
அநாதை போல் நின்ற போது அறிவை ஊட்டும் தொடர் வண்டியாய்
ஆசான் நீ வந்து ஏற்றிச் சென்றாய் உன்னில் ஏறிச்சென்ற
அனைவருமே சாதனையாளராய் நிற்கையிலே நீ மட்டும்
சாதாரணமாய் நிற்கிறாயே
மீண்டும் தொடர்வண்டியாய் உன் பயணத்தை
தொடர்கிறாயே

உன் தியாகம் கண்டு மனம் வியக்கிறது
உன் மகத்துவ பணி கண்டு உடல் சிலிர்க்கின்றது.

**பி.தட்சிகா**

**தரம் - 04**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்காலம் உனக்காக!

உள்ளங்கையில் உலகம் சுழலும்
உன்னத வாழ்க்கை இது
கைத்தொழில் புரட்சியின் பின்
கண்ணிமைப்பொழுதுகளில்
வேலைகள் முடிந்தன.....
இயந்திரம் வந்தது நம்
சுதந்திரம் பறிபோனது
தந்திரக்காரர்களுக்கு வியாபாரம்
மந்திரம் செய்யவா முடியும் ஏழை
இயற்கை அன்னையின் அழிவு காலம்
இருள் சூழ்ந்த மானிடத்தின்
இன்பங்கள் தொலைந்த காலம்

குடிசைகள் மாடிகளாயின
விவசாயம் இரசாயனம் ஆனது
உயினங்கள் அழிந்து போயின.....
நோய்கள் வந்து நித்தம் உன்
வாசலைத் தட்டுகிறது....
மூளையை இயந்திரத்திடம் கொடுத்து விட்டு
மூட நம்பிக்கைகள் சூழ
மன அமைதி கெட்டு
மன்றாடுகிறாய் இறைவனை......
நவீனம் செய்யும்
நாசங்கள் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மையா என யோசி

பாரம்பரிய முறைகளையும்

படித்து நீயும் ஒப்பிட்டுக் கொள்

எது சிறந்ததென்று.....

எதிர்காலம் உன் கையில்

ஏற்றுக் கொள் அதை நீயும்

வரும் தலைமுறை வாழ

வகை செய்வாய் இன்றே

**த.தரணிதரன்**

**தரம்- 08**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிற்கே ஒளி ஊட்டிய தோமஸ் அல்வா எடிசன்

ஏதேனும் ஒரு புதிய கண்டுபிடிப்புக்களை நிகழ்த்துபவர்களை அக் கண்டுபிடிப்பின் தந்தை என்று சொல்வது வழக்கம் ஆனால் எடிசனை மட்டும் தான் கண்டு பிடிப்புக்களின் தந்தை என்று சொல்ல முடியும். ஆம் உலகிலேயே அதிகளவுஅறிவியல் கண்டு பிடிப்புக்களை நிகழ்த்தியவர்எடிசன் மட்டுமே தன் வாழ்நாளில் அவர் கண்டுபிடிப்புக்கள் ஆயிரத்து முந்நூறு ஆகும். அவற்றில் ஆயிரத்துக்கும் அதிகமான கண்டு பிடிப்புக்களுக்கு காப்புரிமை பெற்றார்.

எடிசன் அவர்கள் அமெரிக்காவில் ஓதியோ மாநிலத்தில் மிலான் என்கின்ற நகரில் 1847ம் ஆண்டு பெப்ரவரி 11ம் நாள் பிறந்தார். அவரது தந்தையின் பெயர் சாமுவேல் எடிசன் தாயின் பெயர் நான்சி எடிசன் பள்ளி செல்ல தொடங்கிய எடிசனை கூர்ந்து கவனித்த அவரது ஆசிரியர் எடிசனின் கையில் ஒரு கடிதத்தை கொடுத்து அனுப்பினார். இதனை உன் அம்மா தான் படிக்கவேண்டும் என்று சொல்லி அனுப்பியிருந்தார். கடிதம் எடிசனின் தாயின் கைக்கு கிடைக்கவே அதனை நன்கு படித்து விட்டு கதறி அழுதார். எடிசன் அம்மா அதில் என்ன எழுதி இருக்கு என அவன் கேட்க எடிசனின் தாய் உங்கள் குழந்தை அதிக அறிவாற்றலுடன் இருக்கிறான். அவனுக்கு தகுதியான பாடசாலை இது அல்ல என எழுதியிருக்கு என்றார். உற்சாகமான எடிசன் துள்ளிக்குதித்தான்.

அதன் பின்னர் எடிசனுக்கு வீட்டிலேயே பாடம் நடத்தப்பட்டது. தாயே ஆசிரியராக இருந்து வழிகாட்டினார். கால ஓட்டத்தில் எடிசனின் தாயார் மரணத்தை தழுவினார். தாயின் மரணத்திற்கு பிறகு தன் ஆசிரியர் கொடுத்த கடிதத்தை பார்த்த எடிசனுக்கு அதிர்ச்சி அதில் எழுதப்பட்டிருந்தாவது உங்கள் குழந்தை மூளை வளர்ச்சி குறைந்தனவாக இருக்கலாம். அவனை நீங்கள் பள்ளிக்கு அனுப்ப வேண்டாம் என எழுதப்பட்டு இருந்தது. தாயை நினைத்து கண் கலங்கினார் எடிசன்.

இன்று நாம் பயன்படுத்தும் ஒலி ஒளி சாதனங்கள் அனைத்திற்கும் எடிசன் தான் தந்தை தொடர்ந்து பல கண்டுபிடிப்புக்களை மேற்கொண்ட எடிசன் 12வது வயதில் பணம் சம்பாதிக்க தொடங்கினான். ரயில் நிலையங்களில் காய்கனிகள் விற்ற பணத்தை கொண்டு பத்திரிகை,புத்தகங்களை வாங்கி தன்னை ஒரு கண்டு பிடிப்பாளனாக வளர்த்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தி முறையில் தகவல் பரிமாறப்பட்ட காலத்தில் அவர் தந்தி நிலை அதிகாரிகளுடன் இணைந்து தந்தி கருவி பற்றி ஆர்வமாககற்றார். முதல் முதலாக 1889ல் எடிசன் அசையும் படத்தை வெளியிட்டார். இக்கண்டு பிடிப்புக்களின் நீட்சி தான் இன்று உலகையே ஆட்சி செய்யும் சினிமா அவர் கண்டு பிடித்த ஒளிக்கருவி தான் போனோகிறாய்.ஒளியை உள்வாங்கி ஒளிக்கச் செய்யும் அக்கருவி உலக வரலாற்றில் என்றென்றும் முக்கியமானது. மின்சார பல்ப்,மின்மோட்டார். போனோகிறாப் என நீளும் அவரது அறிவியல் கண்டுபிடிப்பக்கள் வழியில் இயங்கி கொண்டிருக்கிறது. இன்றைய உலகம். இவர் தனது 84வது வயதில் 1931ம் ஆண்டு 18ம் திகதி அக்டோபர் மாதம் காலமானார் எடிசன் அவரது மறைவிற்கு அமெரிகக் அதிபர் அஞ்சலி செலுத்தும் வகையில் அக்டோபர் 23ம்திகதி மாலை அமெரிக்கா முழுவதும் 1நிமிடத்திற்கு மின் விளக்குகளை நிறுத்தி அஞ்சலி செய்ய ஆணையிட்டுள்ளார். அந்த ஒரு நிமிடம் நாட்டில் உள்ள அனைவரும் எடிசனையும் அவரது கண்டுபிடிப்புக்களையும் நினைவு கூர்ந்தார்.

உலகிற்கே ஒளியூட்டிய எடிசனை நாமும் நினைவு கூறுவோம்.

நன்றி

**ல.பிரதட்சன்**

**தரம் - 04**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்பொருளுக்கு நீ அடிமையாகாதே! மாணவனே!

போதைப்பொருளுக்கு நீ அடிமையாவதேனடா?
அது உன்னை மெல்ல மெல்லக் கொல்லும் ஆயுதம்
என்பதை அறியாமையினாலா?

வகை வகையாய் ஆசை காட்டி
இலவசமாய்த் தந்துன்னை அடிமையாக்கிடுவார்
அவர்தன் உள்ளுணர்வு நீ அறியாமல்
அநியாயமாய் உள் நுழைவாய் நீ அதனுள்

இலவசமாய்க் கிடைத்த பொருள் தீடீரென்று
பணமாக மாறிவிடும் திகைத்து நிற்பாய் நீ
கொஞ்சம் கொஞ்சமாய் நீ சேர்த்து வைத்த
பணத்தை கொடுத்துப் பெற்றிடுவாய்
உன்பணம் முற்றிலும் முடிந்ததும்
களவு கற்றிடுவாய் பொய், களவு, கொலை

மெல்ல மெல்ல வீட்டிற்குள் ஆரம்பிக்கும் களவு
விஸ்தரிக்கும் வெளியுலகிலே
அதன் பயனாகக் கண்டிடுவாய் காவல் நிலையம்
சிலநேரம் உன் மீதிக்காலம் முழுவதும்
செலவழிக்க வேண்டியிருக்கும் அங்கே....
இன்னொரு புறமாய் உன் உடலை
மெது மெதுவாய் நீ ஆதரிக்க யாருமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை தாலாட்டி சீராட்டி வளர்த்த

பெற்ற தாய் கூட வெறுத்தொதுக்கிடுவாள் உன்னை

இத்தனை தீங்கு கொண்ட

போதைப்பொருளுக்கு நீ அடிமையாகாதே

பார் போற்றும் நல்லவனாய்

வாழ்ந்திடும் இவ் உலகினிலே

**சு.சபிசன்**

**தரம் 11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைந்தது என்ன?

நான்கு வழி நெடுஞ்சாலையின் ஓரத்தில்
துவிச்சக்கர வண்டியுடன்
சாதாரணமாய் நின்றானே ஒரு சிறுவன்
வரும் ஆபத்தை அறியாது

வேகமாய் வந்த அசுர வாகனம்
விரென்று மோதிவிட
தூக்கி எறியப்பட்டவனோ
அருகில் உள்ள காணியினுள்

வீழ்ந்து கிடந்தவனை மீட்க யாருமில்லை
விரைவாய்ப் பயணிப்பதையே விரும்பினர் யாவருமே
அசுர வாகனமோ அசரவில்லை
அதே வேகத்துடன் தப்பி ஓடியது

ஈரமானோர் பேசியால் அழைத்தனர்
மீட்க வாகனத்தை
காலன் வந்து காவிச் சென்றானோ
சிறுவனின் உயிரை

சாரதியின் கவனக்குறைவால்
சாக நேர்ந்தது நீயடா
நடந்த இந்த அவலத்தை அறிந்து
நடைபிணமாகப் பெற்றவர்கள்
படிப்பும் பெருகியது பகுத்தறிவும் வளர்ந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சமாபாதகத்தின் வீரியமும் பன்மடங்கு கூடியது
இயலாதோருக்கு உதவுவது இடிகண்ட நாகமாயிற்று
கருத்துச் சொல்லி மாற்றுவது கானல் நீர் போன்றதே

சாலையிலே செல்லும் போது
சாவை எண்ணி அஞ்சி
மரண பயத்தோடு செல்லும்
மாணவர்கள் நாம்.

**நிலவரசி உதயகுமார்**

**தரம் - 10**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில மொழியின் முக்கித்துவம்

நவீன காலத்தில் ஆங்கிலக் கல்வியின் இன்றியமையாமையை மிக ஆழமாக உணரமுடிகின்றது. சர்வதேச மொழியாக மதிக்கப்படும் ஆங்கில மொழியின் செல்வாக்கு கல்வி நிர்வாக சேவைகளில் பாரிய அளவு செல்வாக்கு செலுத்துகின்றது. இன்றைய காலகட்டத்தில் அனேகமான பயன்தரும் புத்தகங்கள் ஆங்கில மொழியில் காணப்படுவதனால் அதனைப்பற்றிய விடயங்களை அறிந்து கொள்ள ஆங்கில மொழி மிகவும் அவசியமாகின்றது. கண்டு பிடிப்புக்கள் பற்றிய தகவல்கள் விஞ்ஞான தொழில் நுட்ப ரீதியான தகவல்கள் எல்லாம் ஆங்கில மொழியில் ஊடாகவே வந்து கொண்டு இருக்கின்றன.

இன்றைய கல்விச்சவால்களை எதிர்கொள்ளும் மாணவர்களை உருவாக்குவதில் ஆங்கிலக் கல்வியானது முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. தொடர்பாடல் திறனை அதிகரிக்கவும் உள்ளூர் மட்டத்திலும் வெளியூர் மட்டத்திலும் நண்பர்களோடு உரையாடுவதற்கும் முறைசாரா வேலைகளை செவ்வனே செய்து முடிப்பதற்கும் மொழி ஊடாகமாக ஆங்கிலம் திகழ்கின்றது. இன்று சில பாடசாலைகளில்ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை இதன் முக்கியத்துவத்தை உயர்த்துகின்றது. உலக மயமாக்கல் நிகழும் இக்கால சூழ்நிலையில் பாமர மக்களும் ஆங்கில அறிவை எடுத்துச் செல்ல வேண்டிய தேவை காணப்படுகின்றது.

எமது நாட்டைப் பொறுத்தவரை வேலையில்லாப் பிரச்சனை என கூறப்படும் வாசகத்திற்கு ஆங்கில மொழி கூட காரணமாகின்றது. மொழி வளர்ச்சி திறன் அதிகரிக்குமானால் எந்த சூழ்நிலையிலும் நிறுவனங்கள் மற்றும் வேலை ஸ்தாபனங்களில் வேலை செய்ய மக்கள் முன் வருவர். அனேகமாக உயர் கற்கை நெறி முகாமைத்துவம் மொழி விஞ்ஞான தொழில்நுட்பம் கணக்கியல் நெறிகள் ஆங்கில மொழியின் ஊடாக இடம் பெறுவதனால் இலகுவாக வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன உலகில் வேலைகளை இலகுவாக்குவதற்காக கண்டறியப்பட்ட மகத்தான கண்டு பிடிப்பு கணணியாகும். இதனைக் கையாள்வதற்கு ஆங்கிலக் கல்வி மிகவும் அவசியமானதாகும். சர்வதேச வலைப்பின்னல் இணையத்தள் தேடுதல்களுக்கு ஆங்கிலக் கல்வி அவசியமாகின்றது.

ஆங்கிலேயர் இலங்கையை ஆண்ட காலத்தில் இம் மொழியின் செல்வாக்கு மிக அளப்பரியதாக காணப்பட்டது. சுதந்திரத்தின் பின்னரும் அதன் பயன்பாடு ஆழமானதாகவே காணப்படுகின்றது. இவற்றையெல்லாம் கடந்து ஆங்கிலம் ஒரு சர்வதேச மொழியாக விளங்குவதற்கு சர்வதேச பொருளாதாரம் சர்வதேச பிரயாணத்தொடர்பு பல்வேறு மொழி பேசும் நாடுகளின் இணைப்பு மொழியாக பயன்படுதல் போன்றவை ஏதுவாக அமைகின்றன. இலங்கை வாழ் பிரஜைகளின் ஆங்கில அறிவு அவசியம் என்பதை எடுத்துக்காட்டுவதாக இலங்கை கல்வியமைச்சின் பிரகாரம் ஆங்கிலக் கல்வி 2ம் மொழியாக அனைத்து பாடசாலைகளிலும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எந்த வகையில் நோக்கினாலும் முக்கியத்துவம் வாய்ந்த ஆங்கில மொழியை அலட்சியப்படுத்துவதனால் பயனேதுமில்லை.ஆகவே ஆங்கிலம் கற்போம் அகிலத்தை வெல்வோம்.

**ற.சுயானி**

**தரம்-07**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அம்மா சொன்ன கதை

காலை வேளையிலே
கறை படிந்த வீதியிலே
பள்ளிப்பருவமதில்
பட்டாம் பூச்சிகளாய்
பறந்து திரிந்தனராம்....
விழிகளில் நீர் வலிகள் - ஆயிரம்
ஆனாலும் தளரவில்லை
எம் பூவான மனங்கள்
இருளான வாழ்வென்று - நாம்
துவண்டு போகவில்லை
என் அம்மா சொன்ன கதை.....

வானத்தில் வட்டமிட்ட
வாகனத்தை நாம் கண்டும்
பள்ளித் தாயின் படியினில்
பதுங்கியிருந்தும் பக்குவமாய்
படித்த நாட்கள்
பக்குவமாய் பள்ளிக்கல்வி
படித்ததனால் மட்டும் - தான்
பார் போற்ற முதற் பல்கலை
சென்றார் என் அம்மம்மா......
என் அம்மா சொன்ன கதை.......

ஆரம்ப கல்வி முதல்
ஆண்டு எட்டு வரை
அம்மாவும் இப்பள்ளி தானாம்
ஒழுக்கத்துடன் ஒற்றுமையும்
தலைமைத்துவம் தகமையெல்லாம்
தந்த பள்ளி தர்மக்கேணி
தாயுடன் தந்தையென- தாமும்
தளராது கற்றதனால்
தானுமொரு அசிரியர்......
என் அம்மா சொன்ன கதை.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நாள் கிடைத்துவிடும்
ஒளிமயமான எதிர்காலம்
ஆண்டு ஒன்று அட்மிசனாம்
அண்மையில் இருக்கும் எம் பள்ளியில்
ஏனென்று கேட்கையிலே
எனக்கது புரியவில்லை.....
என் அப்பா அம்மா என
என்னவர்கள் படித்த பள்ளி
என் அம்மா சொன்ன கதை.....

ஆரம்பக்கல்வி தானாம் அடி அத்திவாரம்
அதனால் தான் எனக்கு இங்கு அட்மிசன்
உங்கள் மகன் எந்த பள்ளி
எத்தனையோ பேர் கேட்கையிலே
என் அம்மா ஒரே பதில்
எம் பள்ளி தர்மக்கேணி
ஏனங்கு சேர்க்கிறியள்
ஏதேனும் நல்ல பள்ளி
பார்த்துச்சேர்க்கலாமே?
எனக்கு இதை விட நல்ல பள்ளி வேறில்லை
என் அம்மா சொன்ன கதை....

காலைக் கதிரவன் கண்விழிக்கும்
வேளையில்.....
காபற்றோட்டினிலே - காற்றாய்
பறந்து வந்தேன் என் அப்பா வாகனத்தில்
காதோரம் காலை வணக்கம்
கச்சிதமாய் சொல்லி விட்டு
காலைப் பிரார்த்தனையுடன் கல்விதனை
கற்று விடு..... கல்விதனை கற்றுவிடு
என் அம்மா சொன்ன கதை

**ச.அஸ்வின்**
**தரம்- 01**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓசோன் படை சிதைவடைதல்

சூரியக் குடும்பத்தில் உள்ள கோள்களில் உயிரினங்கள் வாழ்வதற்கு இசைவாக்கம் அடைந்த கோள் புவியாகும். காரணம் புவியைச் சூழ பாதுகாப்பு கவசமான ஓசோன்படை இருத்தலே ஆகும். இன்று ஆராய்ச்சிகள் மூலம் செவ்வாய் கோள்களில் உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் இருப்பதாக கூறப்பட்டாலும் அங்கு ஓசோன்படை இன்மையால் அக்கோள் உயிரின் செயற்பாட்டுக்கு பொருத்தமற்றதாகின்றது. இற்றைக்கு பலநூறு மில்லியன் வருடங்களுக்கு முன்னனர் சூரியக் குடும்பம் சூப்பர் நோவா வெடிப்பில் உருவாகியதாக நம்பப்படுகின்றது. இவ்வாறு உருவாக்கப்பட்ட புவியியல்பல மில்லியன் வருடம் உயிரினம் எதுவும் தோன்றவில்லைபிற்காலத்தில் சமுத்திரத்தில் உள்ள சில மூலக் கூறுகள் எழுந்தமானதாக சேர்ந்து முதல் உயிரி உருவாக்கப்பட்டது. இவ் உயிரி இரசாயனத் தொகுப்பு மூலமே தமக்குத் தேவையான உணவுப்பொருட்களை தொகுத்தது.

பின்னர் இவ்வுயிரினங்களின் பச்சையவுருமணி என்னும் சில கட்டமைப்புக்கள் உருவாக்க்பட்டுள்ளன. இவ் பச்சைய உருமணிகள் சூரிய ஒளிச் சக்தியை உறிஞ்சி ஒளித்தொகுப்பு எனும் சிறப்பான உயிர்ச் செயற்பாட்டை மேற்கொண்டது. இதன் போதே பக்க விளைவாக ஒட்சிசன் வாயு வளி மண்டலத்திற்கு விடப்பட்டது. இதன் பின்னரே உலகில் உயிரிகள் படிப்படியாக தோற்றம் பெற்றன. வளிமண்டலத்தில்உள்ள $O_2$ வாயுவானது மிக உயரத்தில் கழியூதா அலைகளை உறிஞ்சி ஒட்சிசன் அணுக்களாக மாற்றமடையும் இத் தோன்றல் நிலை ஒட்சிசன் உயர் தாக்கு திறனை கொணடிருப்பதால் ஒட்சிசன் வாயுடன் தாக்கமடைந்து ஓசோன் வாயுவை உருவாக்குகின்றது.

$O_2 \qquad 2O$

$O_2 + O \rightarrow O_3$

இவ்வாறு உருவாக்கப்படும் ஓசோன் மீண்டும் $O_2$ வாயுவாக மாற்றப்படும் இதனாலேயே ஓசோன் ஒட்சிசன் விகிதம் சமநிலையில் பேணப்படும்.

$O_3 \qquad O_2$

இவ்வாறு உருவாக்கப்படும் ஓசோன் படையானது சூரியனில் இருந்து வரும் தீங்கு பயக்கும் கதிர்களான கழியூதாக் கதிர்களை வடிகட்டி மீதமான செறிவில் பூமிக்கு விடுகின்றது. மீதானசெறிவில் கழி ஊதாக்கதிர்கள் புவியை வந்தடைவதால் அவை தோலில் விற்றமின் D தொகுப்பிற்கு பங்களிப்பு செய்கின்றது. கழி ஊதா அலைகள் தோலில் உள்ள நெய்ச்சுரப்பியில் காணப்படும் விசேட கொலஸ்ரோலுடன் தாக்கமடைந்து விற்றமின் D உருவாகின்றது. தோலின் மீதமான செறிவில் கழி ஊதா அலைகள் படும் போது கருமை நிறமான மெலனின் சிறு துணிக்கைகளின் உற்பத்தியைத் தூண்டும் இதனால் கழிஊதா அலைகள் உடலினுள் நுழைவது தடுக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மனிதச் செயற்பாடுகளால் இன்று ஓசான் படையில் பாரிய துவாரங்கள் ஏற்பட்டு மனித சமூதாயத்திற்கும் ஏனைய உயிரிகளுக்கும் பெரும் அபாய நிலையை உருவாக்கியுள்ளது. ஓசோன் படையில் பாதிப்பை ஏறபடுத்தக் கூடிய கூறுகள்

1.குளோறோபுளோறோகாபன்

2.நைத்திரிக் கொட்சைட்

குளோறோ புளோறோகாபன் பெரும்பாலான வாசனைத் திரவியங்களை கரைக்கப் பயன்படுத்தப்பட்டது. இப் பயன்பாடுகளால் சூழலுக்கு விடப்பட்ட குளோறோபுளோறோ காபன் உயர் வெப்பத்தால் பிரிந்து குளோரின் அணுக்களை வெளிவிடுகின்றது. இக்குளோரின் அணுக்கள் ஓசோன் படையுடன் தாக்கமடைந்து உபகுளோரைட்டையும் ஓட்சிசன் வாயுவையும் கொடுக்கும். இதனால் ஓசோன் படை சிதைவடைந்து பாரிய துவாரங்கள் ஏற்படும்.

$$CFC \rightarrow Cl$$

$$O_3(g) + Cl \rightarrow Clo(g) + O_2(g)$$

இதே போல் நைத்திரிக் கொட்சைட்டும் ஓசோன் வாயுவுடன் தாக்கமடைந்து ஓசோனில் துவாரங்களை ஏற்படுத்தும் ஓசோன்படை சிதைவடைந்து அதில் பாரிய துவாரங்கள் ஏற்படும் போது அதனூடு UV கதிர்கள் கூடிய செறிவில் புவியை வந்தடையும். இவை மனித குலத்திற்கு நேரடி செறிவில் புவியை வந்தடையும். இவை மனித குலத்திற்கு நேரடி பாதிப்புக்களையும் மறைமுக பாதிப்புக்களையும் ஏற்படுத்தும். UV கதிர்கள் உடலில் படும் போது பரம்பரை அலகுகள் விகாரத்திற்கு உட்பட்டு தோல் புற்று நோயை ஏற்படுத்தும். எனவே ஓசோன் வறிதாக்கத்தின் பாதிப்புக்களை கருத்தில் கொண்டு CFC(chloro flouro carbon) பயன்பாட்டை இன்று முற்றாக உலகம் நிறுத்தியுள்ளது. இதற்கு பதிலாக தற்போது குளிரூட்டிகளில் HFC (Hydro flouro carbon) பயன்பாட்டில் உள்ளது. இவ்வாறு *CFC* பயன்பாட்டை நிறுத்தினால் ஓசோனில் ஏற்பட்ட துவாரங்கள் முழுமையாக மூடப்பட பல வருடங்கள் எடுக்குமென விஞ்ஞானிகள் கணிப்பிட்டுள்ளனர்.

**ரு.தட்சாயினி**

**தரம் -11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர்

தமிழன்னையை அழகுபடுத்திய பெரும்பாவலர்களுள் பலர் இருந்தாலும் திருவள்ளுவரிற்கென தனியிடம் உண்டு. ஈரடி குறள்களால் உலகத்தின் அத்தனை மக்களுக்கும் சாலச் சிறந்த கருத்துக்களை கூறும் வகையில் உலகப்பொதுமறை என்னும் திருக்குறள் எனும் பேரிலக்கியத்தை தமிழில் படைத்து தமிழையே பெருமைகொள்ளச் செய்தவர். தெய்வபாவலர், முதற்பாவலர், பெருநாவலர், செந்நாப்போதகர், பொய்யாமொழிப்புலவர் என்றெல்லாம் மறுபெயர் கொண்டு திருவள்ளுவரை அழைப்பார்கள்.திருக்குறளில் இல்லாத தத்துவங்களே இல்லை எனும் அளவிற்கு அனைவராலும் வியந்து போற்றப்படும் திருக்குறள் பெருமைக்குரியது.

இவர் சங்கமருவிய காலத்தில் வாழ்ந்தவர். இவரது தந்தை ஆகி தாய் பகவான் என்று கூறப்படுகிறது. இதனாலேதான் முதல் குறளான 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவான் முதற்றே உலகு' என தனது பெற்றோரை சிறப்பித்திருக்கிறார் என்றும் கூறப்படுகிறது. திருவள்ளுவருடைய மனைவி பெயர் வாசுகி. இலக்கியங்களில் சிறந்த கணவன் மனைவிக்கு இலக்கணமாக'வள்ளுவன் வாசுகி' என்று வழங்கியது இவர்களின் சிறப்பாகும் இவர் வாழ்ந்த காலம் சங்ககாலத்தின் பிற்காலமாகும். இக்காலத்தில் வள்ளுவர் தோன்றி தனது அறக்கருத்துக்களால் சமூகத்தைநல்வழிப்படுத்த முயன்றார். பிற்காலத்திலும் உலக மக்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்றொரு தேவை இருந்தது இதனுடைய வெளிப்பாடே திருக்குறள் ஆகும்.

திருக்குறளை தமிழில் எழுதி உலக இலக்கியஅரங்கில் தமிழர்களை தலைநிமிரச் செய்தவர் திருவள்ளுவர் அறிவாலும் அவரது தெளிந்த சிந்தனையாலும் திருக்குறள் உலகம் போற்றும் இலக்கியமாக இன்று வரைக்கும் ஒப்புவமை இல்லாத இலக்கியமாக திகழ்கிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூலகத்தில் ஒன்றாக திருக்குறள் அழைக்கப்படுகிறது. திருக்குறளில் அறத்துப்பால் பொருட்பால், காமத்துப்பால் எனும் முப்பால்களும் 133 அதிகாரங்களும் 'அ' இல் ஆரம்பித்து 'ன்' இல் முடிவடைகின்றது. திருக்குறள் ஈரடியில் உலகத்தின் அத்தனை விடயங்களை உள்ளடக்கிய நூல் ஆகையால் 'ஈரடி வெண்பா' எனவும் அழைக்கப்படுகின்றது. பல்வேறு தனித்துவமான பெருமைகளை கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறளில் மனித வாழ்வின் எல்லா சந்தோசங்களிற்கும் விடை இருக்கிறது. மனிதன் எவ்வகையில் வாழவேண்டும் என இது வழிகாட்டுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்தோன்றிய ஒரு இலக்கியம் இன்றைய காலத்துக்கும் பொருந்தும் வகையில் தனது ஆழமான கருத்துக்களால் அனைவரின் மனங்களிலும் நீங்காத இடம் பிடித்திருக்கிறது. தமிழர்கள் மாத்திரமன்றி உலகத்தவரும் போற்றும் ஒப்பற்ற இலக்கியத்தை தமிழுக்கு தந்தவர் எனும் அழியா பெருமையை வள்ளுவர் பெறுகின்றார். இவ்வாறு உலகுக்கு தமிழ் பெருமை ஓங்கும். வகையில் செய்த திருவள்ளுவர் என்றும் வணக்கத்துக்குரியவராவர். "வள்ளுவன் தன்னை இவ்வுலகிற்கு தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பெருமை கொள்வோம்.

**லோ.யகாசிகன்**

**தரம் - 06**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொழிநட்ப உலகம்

இன்றைய 21ம் நூற்றாண்டிலே புதுமைகளிற்கும் சாகசங்களிற்கும் அளவே இல்லாத காலமாக திகழ்கின்றது. இங்கு மண்ணில் மட்டுமல்ல விண்ணிலும் பல சாகசங்களை நிகழ்த்தி போட்டி போட்டுக் கொண்டிருக்கும் காலமும் ஆகும். பாரம்பரியங்களும் மரபுகளும் பண்டைய பழக்கவழக்கங்களும் மண்ணிற்குள் புதைந்து போக அதன் மேல் தன் வெற்றிக்கொடியை நிலை நாட்டி உலகெங்கும் வெற்றி நடை போடுகின்றது. தொழிநுட்பம் எங்கும் எவற்றிலும் தொழிஞுட்பம் தன் ஆதிக்கத்தினையே நிலைநாட்டியுள்ளது.

தொழில்நுட்ப பொருட்களும் அதன் செயற்பாடுகளும் செயலிழந்து விடுமாயின் முழு உலகமும் இயங்க முடியாது ஸ்தம்பித்து நிற்கும் அளவிற்கு முழு உலகத்தினையும் தனது கைக்குள் அடக்கம் செய்து ஆட்டிப்படைக்கின்றது. மனிதனின் கடினமற்ற இலகு வாழ்க்கைக்காக மனிதன் உருவாக்கிய உலகமே இன்றைய தொழிநுட்ப உலகமாகும். இத் தொழிநுட்ப உலகில் எதுவும் முடியாது என்று இல்லை என்கின்ற சூழ்நிலையினையே உருவாக்கியுள்ளது.

தொழிநுட்பம் இன்று அனைத்து துறைகளிலும் தன் ஆதிக்கத்தை கொண்டுள்ளது. என்பதனை போக்குவரத்து தொடர்பாடல்,கல்வி மருத்துவம்,வணிகம் என அனைத்து துறைகளினையும் எடுத்து நோக்குவதன் மூலமாக கண்ணூடாக காணலாம். ஒவ்வொரு இல்லத்திலும் தொழிநுட்பம் சார்ந்த பொருட்கள் இல்லாமல் இருப்பது அரிதிலும் அரிதான விடயமாக மாறிவிட்டது.

நிலத்தை பார்த்து நடப்பதை விட மனிதர்கள் தொலைபேசியை பார்த்து நடந்து செல்வதே அதிகமாகிவிட்டது. மேலும் மனிதனது வேலையினை செய்வதற்கு ரோபோக்கள் எனவும், இயற்கை குழந்தைகளைப் போல் பரிசோதனை குழாய் மூலம் செயற்கை குழந்தை கல்விகளில் இணையம்,கணினி எனவும் எங்கும் தொழிநுட்பம் காணப்படுகிறது.

தொழிநுட்பத்தினால் இலகு வேலைகள்,நேரம் மீதப்படல் உடனுக்குடன் செய்திகளை பரிமாறல் என பல இன்னோரன்ன நன்மைகள் கிடைத்தாலும் எந்தவொரு விடயத்திற்கும் ஒரு முகம் நன்மையும் மறுமுகம் தீமைகலந்தே கலந்தே காணப்படும். எனும் ரீதியில் இதனால் பல தீமைகளும் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களின் பாதைகள் தவறாதல் மனிதனின் வேலைவாய்ப்புக்கள் குறைவடைதல்,கலாசார சீரழிவுகள், இயற்கைக்கு பாதகம் விளைவித்தல் என பல தீமைகளினை வரிசைப்படுத்தலாம்.

இவ்வாறாக உலகம் அடைந்த அதி நவீன வளர்ச்சியே இன்றைய தொழிநுட்ப உலகம் உலகம் முழுவதும் நம் கைகளிற்குள் அடக்கமாய் அமைத்து பல புரட்சிகளையும் சாகசங்களையும் நிகழ்திக் கொணடிருக்கின்றது. ஆனால் இது எதிர்காலத்தில மனிதனுக்கே சவாலாகவும் ஆபத்தாகவும் அமையலாம். எதனையும் அளவோடு உபயோகித்தால் தொழநுட்ப உலகை வென்றிடலாம்.

**பா.மேனுகான்**

**தரம் - 10**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்தோட்டம்

மக்கள் உணவுக்காக காய்கறிகளை வாங்குகிறார்கள் இவற்றை வாங்குவதற்கு பணம் வேண்டும் நமது வீட்டுவளவில் இவற்றை உண்டு பண்ணலாம். இதனால் பெருமளவு பணம் மீதமாகும். எமது நேரம் வீண் விரயமாகாது. கிருமி நாசினிகள் அற்ற உடனடி காய் கறிகளை பெற்றுக்கொள்கின்றோம் இத்தகைய பயனுடைய வீட்டுத்தோட்டத்தை நானும் தம்பியும் அப்பாவின் உதவியுடன் உருவாக்கினோம்.

முதற் கட்ட வேலையாக கூட்டெருவைத் தயாரித்தோம். பின்பு நிலத்தை நன்கு கொத்தினோம். எருப்பசளை இட்டோம். நன்றாகப் பண்படுத்தினோம். பயற்றை,வெண்டி, கத்தரி,தக்காளி, மூளைக்கீரை,கிழங்குவகைகள், போன்ற பல்வேறு வகையான காய்கறிகளை நாட்டினோம்.

சனி,ஞாயிறு தினங்களிலும் மாலை வேளைகளிலும் நாங்கள் தோட்டத்தில் வேலை செய்வோம். அப்பா தண்ணீர் இறைப்பார். நானும் தம்பியும் பாத்தி கட்டுவோம். புல் பூண்டுகளைப் பிடுங்குவோம். இப்போது எமது தோட்டத்தில் காய் கறிச் செடிகள் செழித்து வளருகின்றன. இங்கு கிடைக்கும் காய்கறிகளை எங்கள் தேவைக்கு பயன்படுத்துவோம்.

மிகுதிக் காய்கறிகளை எமது சந்தைக்கு எடுத்துச் செல்வார். இதனால் எமக்கு வருமானமும் கிடைக்கின்றது. அத்துடன் ஒரு பொழுது போக்காகவும் அமைகின்றது. இதனால் பெருமளவு பணம் மீதப்படுத்தப்படுகின்றது. அத்துடன் நோய் நொடி அற்ற சுக வாழ்வு கிடைக்கின்றது. எனவே இத்தகைய எல்லா வளமுடைய அழகிய கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவரும் வீட்டுத்தோட்டத்தை அமைத்து ஆரோக்கியமானவர்களாக வாழ பழக வேண்டும்
“காய்கறித்தோட்டம் செய்திடுவோம்”
கவலை இன்றி வாழ்ந்திடுவோம்.

**சி.ரனுசன்**

**தரம்- 05**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடாமுயற்சி

ஒரு சிறு கிராமத்தில் விமலன் என்னும் சிறுவன் வசித்து வந்தான். அவனின் குடும்பமானது மிகவும் ஏழைச் சமூகத்தில் இருந்தது. இவனின் வீட்டில் ஒரு வேளை உணவுக்குக் கூட பஞ்சமாக இருந்தது. இவனின் தந்தையார் பாரிசவாத நோயால் பாதிக்கப்பட்டார். அவனின் தாயார் கல் உடைக்கும் தொழிற்சாலையில் கூலி வேலை செய்து வந்தார். இவரின் ஒரு நாள் கூலியைக் கொண்டு தமது ஒரு நாட்ச் செலவை நடத்தி வந்தனர். விமலனிற்கு நீண்ட நாளாக ஓர் ஆசை.நான் நன்றாக படித்து வைத்தியராக வரவேண்டும். எனும் ஆசையே அது.

ஆனால் விமலனால் படிக்க முடியவில்லை. அவனின். தாயாரின் வருமானமானது அவனின் படிப்பிற்கு போதுமானதாக இருக்கவில்லை. மற்றைய அவனின் சக நண்பர்கள் பாடசாலைக்கு செல்வதைப் பார்த்து இவன் மிகவும் மனவருத்தம் கொள்வான். எப்படியாவது கஷ்ரப்பட்டு உழைத்தாவது பாடசாலைக்கு செல்ல வேண்டும் என எண்ணினான். நானும் மற்றவர்களைப்போல பாடசாலைக்கு சீருடை அணிந்து நண்பர்களுடன் பாடசாலைக்குச் செல்ல வேண்டும். என எண்ணினான்.

விமலன் எண்ணியது போல கூலி வேலைக்கு சென்று பணம் சேர்த்து கிராமத்தில் உள்ள சிறு பாடசாலையில் சேர்ந்தான். அவன் மிகவும் சந்தோசமாகவும் பெருமையுடனும் பாடசாலை சீருடை அணிந்து பாடசாலைக்கச் சென்றான். இவன் பகலில் பாடசாலைக்குச் சென்று படித்து பின்னர் மாலையில் கூலி வேலை செய்வதற்காகசெல்வான். இவ்வாறு தனது பாடசாலைக் கட்டணத்தைச் செலுத்தி கல்விபயின்றான். பாடசாலையில் சக மாணவர்கள் இவனை ஏளனமாக பார்த்தார்கள். ஏனெனில் இவன் ஓர் ஏழ்மைக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதனால் ஆனால் இவனிற்கு அமுதன் எனும் நண்பன் கிடைத்தான். அமுதனும் விமலனும் உற்ற நண்பர்கள் ஆனார்கள். விமலனின் ஏழ்மையால் அமுதன் அவன் மீது இரக்கம் கொண்டான். அவனிற்கும் சேர்ந்த வீட்டில் இருந்து அமுதன் உணவு கொண்டு வந்து கொடுப்பான். அமுதன் செல்வந்தர் வீட்டுப்பிள்ளை ஆனால் அவன் நன்றாக படிப்பதில்லை. ஆனால் விமலன் நன்றாக படிப்பான்.விமலன் அமுதனிற்கு கல்வியில் அவனிற்கு வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியை செய்வான். அமுதனிற்கு தெரியாததை புரியாதவற்றை விமல் அவனிற்கு சொல்லிக் கொடுப்பான்.இவ்வாறு இருவரும் உற்ற நண்பர்களாக மாறி விட்டார்கள்.

விமலன் தனக்குள் இருக்கும் கஸ்டத்தை தன் மனத்தே கொண்டு மற்றவர்களுடன் சிரித்துப் பழகுவான் மற்றவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து கொடுப்பான் சிறிது காலத்தின் பின் விமலனின் தந்தை இறந்து போனார். இவன் மிகவும் மனமுடைந்து போனான். இருந்தாலும் இவனிற்குக் இருக்கும் தன்னம்பிக்கை உடைந்து போகவில்லை. இப்படியே காலம் கழிந்தது. இறுதிக்கட்டமாக வைத்திய தேர்விற்கான பரீட்சை நடாத்தப்படவுள்ளது.

இவன் இரவு பகலாக அயராது உழைத்தான் சிறுவிளக்கிலும் படித்தான். சிறு விளக்கு இல்லாத வேளையிலும் அவன் வீதியில் உள்ள விளக்கில் படித்தான். இவனின் விடாமுயற்சியால் வைத்தியத்துறையில் அதி சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொண்டு ஒரு வைத்தியராக வலம் வந்தான். இவனது விடாமுயற்சியை கண்டு அனைவரும் வியந்தனர்.

"விடாமுயற்சி வெற்றியைத் தரும்"

**அ.சானுஜன்**

**தரம் - 01**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் எனும் தேவதை என் அம்மா

உலகில் தேடி தேடி அலைந்தாலும் -மீண்டும்
அமரமுடியா சிம்மாசனம் தாயின் கருவறை

கேட்டும் கொடுக்காத தெய்வங்களுக்கு மத்தியில்
கேட்காமல் கொடுக்கும் தெய்வம் என் அம்மா

மூன்று எழுத்து கவிதை சொல்ல சொன்னால்
முதலில் சொல்வேன் அம்மா என்று

உலகில் எத்தனையோ உறவுகள் இருந்தாலும் யாராலும்
தாய்க்கு நிகராகி விட முடியாது

இந்த உலகமே இயங்கிக் கொண்டிருக்கிறது.
தாயினுடைய அன்பினால் தான்

ஆயிரம் உறவுகள் இருந்தாலும் - என்
அம்மாவின் அன்பிற்கு ஈடாகுமா?

அழகானவர் அன்பானவர் அறிவானவர்
நான் விரும்பியதைச் செய்திடும் என் அம்மா

நான் அழுத போது என்னை சிரிக்க வைத்த முகம்
என்றுமே என்னை வெறுக்காத குணம் என் அம்மா

அளவுகளே இல்லாத பாசம் மற்றவர்கள் காட்டிடாத நேசம்
அனைத்தையும் உன்னிடம் கண்டேன் அம்மா

அழுவதற்குக் கண்கள் அணைப்பதற்கு கைகள்
சாய்ந்து கொள்ள உன்மடி போதும் அம்மா

நான் சொன்ன முதல் சொல் அம்மா
நான் சொல்ல விரும்பும் கடைசிச் சொல்லும் அம்மா

எனக்கு உயிர் தந்த உன்னை
என் உயிர் உள்ளவரை மறவேனே அம்மா

காலம் முழுவதும் நம்மை வயிற்றிலும் மடியிலும்
தோளிலும் மார்பிலும் சுமப்பவள் அம்மா

தன் வாழ்க்கையை எனக்காக அர்ப்பணித்த அவளை
என்றும் சுமப்பேன் என் மனதில்

**தி.சஸ்மிதா**
**தரம் - 04**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிநய சொற்தொடர்

## எனது பாடசாலையின் முகவரி

1. இந்து சமுத்திரத்தின் பச்சை மகரந்தம் எம் திரு நாடு அதில் கப்பல்கள்,ஆகாய விமானங்கள் தரை தட்டி விளையாட ஆசியாவின் உயர்ந்த கோபுரம் கொண்ட கொழும்பு எம் ஆட்சி தலைநகரம்

2. அங்கிருந்து வடதிசை நொக்கின் தெங்கு வலையங்கள் சிலாபம், புத்தளம், தாண்டி வருகையில்

3. நீதி தவறா வீரம் பறைசாற்றும் செங்கோல மன்னன் எல்லாளன் சிலை உள்ள அனுராதபுரம் மீண்டும் தொடருங்கள்

4. தமிழுக்கு அழகு சேர்க்க வன்னி பெருநிலப்பரப்பின் முதற்படி வவுனியா என் முகவரிக்கு தொடருங்கள்

5. திக்கெட்டும் திசை எட்டும் அறிவும் வீரமும் பசுமை விவாயமும் கொடி கட்டி பறக்கும் கிளிநொச்சி எம் மாவட்டம்.

6. தெற்காசியாவில் அதி உயர்தர உப்பு உருவாகும் உன்னத தேசம் மாமன்னன் பண்டார வனனியன் இளையவன் கையில் வன்னியன் வீரக்கோட்டை ஆனையிறவை தாண்டி வாருங்கள்.

7. பச்சை புல்வெளிகளில் ஆங்காங்கே குடை விரித்தாடும் பனைமரங்களின் ஓலைகளில் அதி தொழில் நுட்ப குடில்கள் அமைந்து வாழும் தூக்கனாம் குருவிகளின் அழகினை நுகர்ந்த படி

8. தெங்கு மரங்களின் விருது நகர் பச்சிலைப்பள்ளிக்கு வாருங்கள் அதன் வாசல் இயக்கச்சியில் ஏழைக்கும் பசியாறி இளைப்பாற ஓர் அம்மா உணவகம் மீண்டும் சங்கிலியனின் வீரம் புகழ் சாற்றும் யாழ் நகரை நோக்கையில்

9. தங்க மணி வேப்பமரமும் பண்டை காலத்து உணவுக் கோப்பைகள் தொங்கும் கத்தாப்பு மரத்துடன் காட்டு மரங்கள் கொட்டகை அமைத்து வரவேற்க தென்திசை நோக்கி கருமை நிற உயர்தர வீதி அதன் ஓரமாய் வட பிராந்திய தென்னை அபிவிருத்தி சபை இதுவே நமது ஊருக்கான நுழைவாசல்

10. வாவில் குளம், சுண்டிக்குளம் குளம்பாய் குளம்,. தாழிய குளம்,தாமரைக்குளம், கொட்டுக்குளம்,வண்ணாங்குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பளுக்கை பிட்டி களம், எனும் ஈர் நான்கு நீகெணிகளை விவசாயத்திற்கு வடிவமைத்து உத்தமரால் தர்மக் கேணியானது எனதூர்

12. வீதியின் இரு அரங்கிலும் தெங்கு மரங்கள் அணி வகுத்து நின்று அதன் ஓலைகளின் தார்களால் வாவா என வரவேற்க இடையில் ஒரு தொடருந்து கடவை அதை தொடர்ந்து 300M வருகையில்

13. அம்மை,சின்னமுத்து கொப்பளிப்பான் தோல் நோய்க்கு மருந்தாய் அமைந்த தங்க மணி தொங்கும் வேப்பமரம் நம் பாடசாலை கதவோரம்.

14 அதில் இருந்து புருவங்கலை நிமிர்த்தி கீழ் திசை நோக்கின் பச்சை கிளிக்கும் பல இன பறவைக்கும் அணிலுக்கும் உணவளிக்கும் மாமரத் தோப்புக்கள் குருகுல கல்விக் கூடமாய் அமைந்துள்ளது. எனது பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் சாதனையாளர்கள்

## [2014 – 2022]



ரு.டிலக்சனா (2014)
புள்ளி - 167



சி.தேனிலா (2014)
புள்ளி - 155



வி.தமிழ்வாணி (2016)
புள்ளி -150



சு.சபிசன் (2017)
புள்ளி - 158



உ.நிலவரசி (2018)
புள்ளி - 192



செ.கலையமுதன் (2018)
புள்ளி - 174



ச.வானுஜா (2019)
புள்ளி - 174



ர.தன்ஷிகா (2020)
புள்ளி - 181



செ.சம்ஷிகா (2020)
புள்ளி - 174



அ.சாருஜன் (2020)
புள்ளி - 160



க.தரனிதரன் (2022)
புள்ளி - 151



ந.ரஸ்மிகா (2022)
புள்ளி - 147

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (சா/த) முதன்மைப் பெறுபேறு பெற்ற மாணவர்கள்
# (2018 - 2022)



ச.கரன்சா (2018)
(4A, B, 2C, 2S)



சி.தர்சிகா (2019)
(2A, 5C, 2S)



சி.தேனிலா (2020)
(8A, C)



ப.சுகிர்தனா (2021)
(8A, C)

# தேசிய மாகாண சாதனையாளர்கள்



தி.நேயநிலா
உயரம் பாய்தல்
தேசிய நிலை பங்கேற்பு
(2014)



சூ.பவித்திரா
உயரம் பாய்தல்
தேசிய நிலை பங்கேற்பு
(2019)



உ.நிலவரசி
மாகாண மட்ட
வினாடி வினாப்
போட்டி - 1ம் இடம்
(2019)



ப.சுகிர்தனா
தேசிய கட்டுரையாக்கப்
போட்டி - 2ம் இடம்
(2020)

# பல்கலைக்கழக அனுமதி பெற்ற
# எமது க.பொ.த (சா/த) 1ம் அணி (2018)



சு.கரன்ஷா
தகவல் தொழில்நுட்பம்
(கிழக்குப் பல்கலைக் கழகம்)



ச.கரணிகா
தகவல் தொழில்நுட்பம்
(கிழக்குப் பல்கலைக் கழகம்)



அ.லக்சிகா
வணிக பீடம்
(பேராதனை பல்கலைக் கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரம்பகால ஆளணியினர் [1963]




மாணவ முதல்வர் சின்னம் சூட்டுதல்



மாணவர் பாராளுமன்றம் — 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செயற்பட்டு மகிழ்வோம் வலய மட்டம் 2ம் இடம்


ஆரம்பக் கல்விப் பிரிவு கல்விக் கண்காட்சி[2022]


மாணவ முதல்வர் அணி–2022


சுற்றாடல் முன்னோடிக்கழகம் மரம் நாட்டல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Details of current human resources

| Se.No | Name | Designation | Grade | Qualification |
|---|---|---|---|---|
| 1. | Mr. Velupplai Selvakumar | Principal | SLTS -I | B.A(Hons),<br>M.A (Merit),<br>PGDE,<br>M.EDDip.in Sin<br>J.P All Ceylon |
| 2. | Mr. Muniyandi Selvam | Teacher | SLTS – I | Trained (Arts) |
| 3. | Mrs. Inthumathy Sriskandarajah | Teacher | SLTS - I | Trained (maths) |
| 4. | Mrs. Baminy Chandrakumar | Teacher | SLTS 2 -II | Trained (Primar) |
| 5. | Mrs.MeryAlponsaVijithabandara | Teacher | SLTS 2 - II | Trained (phy.Edu) B.ED |
| 6. | Mrs. Inthumathy Uthajakumar | Teacher | SLTS 2 - II | Trained (Primary) |
| 7. | Mrs. Alakeswary Thevakumar | Teacher | SLTS 2 -II | Trained ( Primary) |
| 8. | Mrs. Tharminy Santharuban | Teacher | SLTS 2 - II | Trained (com),<br>B.ED Trained |
| 9. | Mrs. Hejiny Manikandan | Teacher | SLTS 2 - II | B.A, PGDE Trained |
| 10. | Mrs. Nagaranjiny Kajananan | Teacher | SLTS 2 - II | B.A |
| 11. | Mr. Sivagnanam Kokulatharsan | Teacher | SLTS 2 - II | Trained (Primary) B.A |
| 12. | Mrs. Seethagini Kunaruban | Teacher | SLTS 2 - I | NDT.mus |
| 13. | Mrs. Gowridevy Jeyarathnam | Teacher | SLTS - I | Trained ( Hid.clut) |
| 14. | Mrs. Saritha Sajeev | Teacher | SLTS 3 - I | HNDE , PGDE<br>Trained |
| 15. | Mr. Raveenthiran Paranitharan | Teacher | SLTS 3 - I | NDT.Eng |
| 16. | Mrs. GowsikaLoyd Ignesias | Teacher | SLTS 2 - II | NDT ( Maths ),<br>B.IT, PGDE |
| 17. | Mrs. Selinconseelia Sivaneswaran | Teacher | SLTS 3 - I | Trained ( Primary) |
| 18. | Mrs. Sijamala Mathivannan | Teacher | SLTS 2 - II | trained ( Dance ), B.A |
| 19. | Mrs. Sopitha Srirajeevan | Teacher | SLTS 2 - II | B.Sc ( Hons ), PGDE |
| 20. | Miss.Mercy Gnanageetha<br>Winson Komathan | Teacher | SLTS 3 - I | B.Sc (Hons)<br>PGDE Trained |
| 21. | Mrs. Inthuja Ketheeswaran | DO | III | B.A |
| 22. | Mrs. Gilany Sinthujan | DO | III | B.F.A |
| 23. | Miss. Vikanija Kanakarathinam | DO | III | B.Sc |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்பாடசாலையில் கல்வி கற்று அரச பணிபுரிவோர்

| | |
|---|---|
| திருமதி.சாந்தநாயகி நடேசபிள்ளை | - ஆசிரியர் |
| திருமதி.இந்திரலோஜினி லோகநாதன் | - சுகாதார பணி உதவியாளர் |
| திருமதி.இந்துமதி உதயகுமார் | - ஆசிரியர் |
| திருமதி.புஸ்பராணி பாலச்சந்திரன் | - சுகாதார பணி உதவியாளர் |
| திருமதி.புஸ்பமலர் குபேந்திரன் | - குடும்ப நல உத்தியோகத்தர் |
| திருமதி.புஸ்பரதி விஜயலஷ்மன் | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி.வித்தியா சுதர்சன் | - ஆசிரியர் |
| திருமதி.சத்தியா கிருஷாந்தன் | - முகாமைத்துவ உதவியாளர் |
| திருமதி.துர்க்கா சுஜிபன் | - முகாமைத்துவ உதவியாளர் |
| திருமதி.மஞ்சுளா குணதாஸ் | - ஆசிரியர் |
| திரு.வேல்முருகு கோகுலராஜ் | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி.தியாகினி சந்திரமோகன் | - ஆசிரியர் |
| திருமதி.கோகுலராணி சிவபாதசுந்தரம் | - ஆசிரியர் |
| திருமதி. அனுஸானந்தி | - முகாமைத்துவ உதவியாளர் |
| திருமதி. வினோதாயினி | - ஆசிரியர் |
| திரு.யோகராசா சிவராம் | - கிராம அலுவலர் |
| திருமதி.கிருஷா எட்வெட் | - |
| திரு.செல்லத்துரை வசந்ததீபன் | - தபால் ஊழியர் |
| திருமதி.அமுதமலர் சசிகரன் | - சுகாதார பணி உதவியாளர் |
| திருமதி.யோகேஸ்வரி பிரதாபன் | - இணைப்பாளர் ஆங்கில வள நிலையம் |

**தொகுப்பு**

**திருமதி.பு.விஜயலக்ஸ்மன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை வளர்ச்சிக்கு உதவி வழங்கியோர் விபரம்

| அன்பளிப்புச் செய்தவர் | அன்பளிப்புச் செய்த பொருட்கள் |
|---|---|
| 2012.05.10 - 2014.07.17 வரை | |
| 01) திரு.சி.குலேந்திரராஜா | வெற்றிக் கேடயங்கள் |
| 02) திரு.த.பிரதீபன் | வெற்றிப் பீடம் |
| 03) சிறுவர் நிதியம் | கற்றல் உபகரணங்கள், நூல்கள், தொலைக்காட்சி (01), மின்பிறப்பாக்கி (01), மின்சாதனப் பொருட்கள் |
| 04) அன்பே சிவம் | கணினித் தொகுதி (01), மின்சார மணிகள் (02) |
| 05) அகில இலங்கை இந்து மாமன்றம் | கணிணித் தொகுதி (01) |
| 06) திரு.திருமதி.சிவானந்தன் குடும்பம் | ஒலிபெருக்கிச் சாதனங்கள் |
| 07) திருமதி.தி.பிரபாகரன் | ஆலயக் கதவு (01 சோடி) |
| 08) அன்பே சிவம் | மாணவர்களுக்கான மேலங்கி |
| 09) திரு.கு.துசிதரன் | முகப்பு மதில் வர்ணப்பூச்சு |
| 10) திருமதி.செ.ஜெ.பாலேந்திரா | முகப்பு எல்லைத் தகரத்திற்கான வர்ணப்பூச்சு |
| 11) திருமதி.அ.கல்யாணி | அரங்கத்திரை (01) |
| 12) திரு.புசிவயோகராசா | கம்பங்கள் (03) |
| 13) திரு.அ.அருந்தவரூபன் | கம்பங்கள் (05) |
| 14) திரு.வே.கந்தசாமி (நலன்விரும்பி) | பந்தல் சேவை |
| 15) திரு.மு.பாலமுரளி (நலன்விரும்பி) | Printer, பரிசில்நாள் சிற்றூண்டி, உபசரணை 2014 |
| 16) எமது பாடசாலை ஆசிரியர் நலன்புரிக் கழகம் | பரிசில் நாள் புகைப்படம், வீடியோ அனுசரணை |
| 17) திரு.சி.குலேந்திரராஜா (நலன்விரும்பி) | தரநிலை சிறப்புப் பெற்ற மாணவர்கள், வலயமட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்கள், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான பதக்கங்கள். |
| 18) திரு.வி.ரவீந்திரன் (நலன்விரும்பி) | பரிசில் நாள் அழைப்பிதழ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2014.07.18 - 2015.12.30 வரை**

| | |
|---|---|
| 01) திரு.க.செந்தூரன் (பழைய மாணவன்) | மேலைத்தேய வாத்திய கருவி (01 தொகுதி) உருக்கு அலுமாரி |
| 02) பாராளுமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு | நிழற்பட பிரதி இயந்திரம் - (01) |
| 03) திருமதி.மே.ஜெயசீலன் (முன்.ஆசிரியர்) | நிறுத்தல் காற்றாடி (01) |
| 04) திருமதி.ச.சுரேஸ் (முன்.ஆசிரியர்) | மின்கேற்றல் |
| 05) திருமதி.ரா.திருக்குமரன் (முன்.ஆசிரியர்) | கணினி ஒலிப்பேனை |
| 06) திரு.அ.ரவீந்திரன் (பெற்றோர்) | குத்துவிளக்கு |

**2015.12.31 - 2016.11.30 வரை**

| | |
|---|---|
| 01) RDF நிறுவனம் | உலகப்படம் வரைதல் |
| 02) திருமதி.பி.தர்மினி (ஆசிரியர்) | வாசகம் காட்சிப்படுத்தல் |
| 03) திருமதி.பா.ஸ்ரீதர் (ஆசிரியர்) | இலங்கைப்படம் வரைதல் |
| 04) திருமதி.ச.நக்கீரன் | இசைக்கருவி படம் வரைதல் |
| 05) திருமதி.க.முரளிமோகன் | உடல் உறுப்பு படம் வரைதல் |
| 06) நெல்லியடி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் | தமிழ்மொழித்தினப் பரிசில்கள் |
| 07) திரு.ந.சிவாகர் | மாணவர் அறிக்கைப் புத்தகம் |
| 08) திரு.சி.கஜந்தன் (பழைய மாணவர்) | சரஸ்வதி சிலை, பெண்களுக்கான பாதணி |
| 09) திரு.க.குமணன் (நலன்விரும்பி) | விளையாட்டுப் போட்டி பரிசுப் பொருட்கள் |
| 10) திரு.ச.அருட்பிரகாஸ் (பெற்றோர்) | பரிசில் நாளுக்கான மதிய உணவு |
| 11) திரு.சி.மகாதேவன் (சமூகசேவகர்) | பரிசில் நாள் பரிசுப்பொருட்கள், கேடயம் |
| 12) திரு.பா.அனுஷானந்தன் (பழைய மாணவன்) | ஒலிம்பிக் ஸ்ராண்ட் |
| 13) திருமதி.த.பிரதீபன், திருமதி.மா.அருட்பாஸ்கரன் (ஆசிரியர்கள்) | ஆசிரியர் வரவு காட்சிப்படுத்தல் அட்டவணை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2016.12.01 - 2017.12.06 வரை**

| | |
|---|---|
| 01) திரு.க.பிரபாகரன் | பல்லூடகக் கருவி, விஞ்ஞான ஆய்வுகூட உபகரணம், மாணவர்களுக்கான சீருடைத்துணி |
| 02) திரு.திருமதி. சுபேந்திரன் (பெற்றோர் | பரிசில் நாள் மதிய உணவு |
| 03) கிருபா லேணர்ஸ் | பரிசுப் பொருட்கள் |
| 04) திருமதி.தி.பிரபாகரன் | Sink கைகழுவுதல் (02) |

**2017.12.07 - 2018.11.02 வரை**

| | |
|---|---|
| 01) திருமதி.பா.ஸ்ரீதர் (ஆசிரியர்) | செங்கோல் |
| 02) திரு.சு.இந்துக்கான் (பழைய மாணவன்) | வெற்றிக் கிண்ணம் |
| 03) ப.அரியரத்தினம் | 63 கதிரைகள் |
| 04) திரு.ச.நக்கீரன் (ஆசிரியர்) | Fan |
| 05) திரு.திருமதி.சிவராஜா கிருஸ்ணசாமி | நுழைவாயில் வளைவு |
| 06) திருமதி.பி.பிறேமாசன் (ஆசிரியை) | 3 தட்டு, செம்பு, 3 சின்னம் |
| 07) திருமதி.பா.ஸ்ரீதர் | புவிக்கோளம், இடவிளக்கப்படம் |

**2018.11.02 - 2019.11.08 வரை**

| | |
|---|---|
| 01) திரு.வே.கந்தசாமி | Ontime bell system<br>Reachargeable Amp |
| 02) திரு.சிவபாதசுந்தரம் | Digital Projector |
| 03) திருமதி.அ.விஜிதபண்டார | பாடசாலைப் பெயர்ப்பலகை |
| 04) செல்வி.ப.சுகிர்தனா | சுகாதாரப் பனர் |
| 05) செல்வி.ர.டக்சிகா | பூச்சாடிகள் |
| 06) பிரதேச சபை - பச்சிலைப்பள்ளி | குப்பை போடும் கூடைகள் (03) |
| 07) Save the Children | Sink and stand |
| 08) E-Sofe mictro campus | White board (04) |
| 09) வலயக்கல்வி அலுவலகம் | Pendrive |
| 10) திரு.கோகுலதர்சன் (ஆசிரியர்) | கொடிக்கம்பப் பீடம், திறப்புக் கோர்வைப் பெட்டி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2021 - 2022 வரை

| | |
|---|---|
| 01) வலயக்கல்வி அலுவலகம் | Themometer |
| 02) தொல்லியல் திணைக்களம் | Telescope |
| 03) திருமதி.அருணாசலம் நாகரத்தினம் | நிலையான வைப்புச் சான்றிதழ் 150000/- |
| 04) திருமதி.வி.அல்பென்சா | சுருதிப்பெட்டி |
| 05) திருமதி.ஜி.நிசாந்தினி | |
| க.இராஜேஸ்வரி | வேலிக்கான தகரம் |
| ர.குயிலரசி | |
| செ.கஜிந்தன் | |
| 06) 2021 O/L மாணவர்கள் | பூச்சாடிகள் |
| 07) செல்வி.வி.தமிழ்வாணி | 30 x 10 துவிச்சக்கர வண்டி |
| 08) திருமதி.சங்கீதா சுலக்சன் | கொட்டகை<br>மணிக்கூடு |
| 09) திருமதி.தாரணி இதயரூபன் | Leeder Stick - பாண்ட் துணி |
| 10) செல்வி.நிறோஜா பூபாலசிங்கம் | பைல் கவர் |
| 11) செல்வி.தவசீலன் | T.T வயர் - 100m |
| 12) திருமதி.ஜெ.ஸ்ரீதேவி | Photo copy - Toner |
| 13) ஜெ.சிறிதேவி | விளக்குமாறு (04) |
| 14) திரு.அ.ஆனந்தபவன் | சிப்போட் (04) |

2023 - இன்று வரை

| | |
|---|---|
| 01) திரு.மனோகரன் | 20L பில்டர் (முகப்பு மதிலுக்கு பூசுவதற்கு) |
| 02) திருமதி.த.சந்திரகலா | கூடைப்பந்துக் கம்பம் (01) |
| 03) திருமதி.ம.செல்வரதி | விளக்குமாறு (02),<br>தும்புத்தடி (02) |
| 04) திரு.பிரதீபன் | கம்பம் (01) |
| 05) திரு.வே.கந்தசாமி | ஆண்டு தோறும் விளையாட்டுப் போட்டி கொட்டகை |
| 06) திரு.செ.சுந்தரம்பிள்ளை | ஆண்டு தோறும் விளையாட்டுப் உணவு அனுசரணை |
| 07) க.பொ.த (சா/த) 5ம் அணி மாணவர்கள் | பெயர்பலகை புனரமைப்பு |

பாடசாலை வளர்ச்சிக்கு உதவிபுரிந்த அனைவருக்கும் நன்றிகள் எவரேனும் தவறவிடப்பட்டிருந்தால் பெருமிதத்துடன் இவ் நன்றியை ஏற்றுக்கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நயத்தல்

கிளி/தர்மக்கேணி அ.த.க பாடசாலையின் வைரவிழா நிகழ்வில் சிறப்புமலராக "தர்மோதயம்" வெளிவருகின்றது. இம் மலரானது பாடசாலை அன்னையின் ஒன்றிணைந்த முயற்சியின் வெளிப்பாடாகும்.

இக்கிராமத்தில் கல்விப் பசி போக்கும் பாடசாலை உருவாக்கத்திற்கு காரண கர்த்தாக்களில் ஒருவராக விளங்கிய அமரர் கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை அவர்களுக்கும் அவரின் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அறுபதாவது நிறைவைக் கொண்டாடும் இந்நாளில் விசேடமாக திரு.திருமதி.செ.சுந்தரம்பிள்ளை அவர்களும், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் ஆகியோர் இணைந்து இவ் விழாவை சுயமாக முன்வந்து தமது அனுசரணையினை வழங்குவதனையிட்டு பாடசாலைச் சமூகம் பேருவகையடைவதுடன் அவர்கள் அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

இம்மலர் சிறப்பிற்பதற்கு ஆசிச்செய்தி வழங்கிய எம் குருவிற்கும், வாழ்த்துக்கள் வழங்கிய பெரியோர்களுக்கும், இம் மலர் சிறப்பிற்கு அரிய தகவல்களுடன் ஆக்கங்களைத் தந்துதவிய கல்வியியலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் உளம் கனிந்த நன்றிகள்.

இம் மலரிற்கான புகைப்படங்களை எடுத்து உதவிய K.S.M புகைப்பட நிறுவனத்தினருக்கும், இந் நூலை அழகுற குறுகிய காலத்தில் அச்சிட்டு வழங்கிய சிவகஜன் பதிப்பகத்தினருக்கும் அவர் தம் ஊழியர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org